# உதயன்



மானிப்பாய் இந்து சம்பியன்
பக்கம் 23

24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 196 வள்ளுவர் ஆண்டு: 2045 வைகாசி 27, செவ்வாய் 10.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

28°C


# 82 இந்திய மீனவர்களை விடுவித்தார் மஹிந்த

## இருநாடுகளுக்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடித்தமைக் காகக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 82 மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இந்தியாவுடனான நல்லிணக்கத்தைப்பேணும்பொருட்டே மீனவர்கள் விடுவிக்கப்படுகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளபோதும் வலைத் தொகுதிகளோ, படகுகளோ விடுவிக்கப்படவில்லை.

எல்லை தாண்டி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 82 பேர் கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களின் 9 படகுகள் மற்றும் வலைத் தொகுதிகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன. அவர்கள் அனைவரும் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது விவகாரம் தமிழகத்தில் கொந்தளிப்பு நிலையைத் தோற்றுவித்திருந்தது. கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை இந்திய மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று அந்நாட்டுப் பிரதமரிடம் வலியுறுத்தியிருந்தார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. அத்துடன் மீனவர் விடுவிப்பை வலியுறுத்தி, இராமேஸ்வரம் மீனவர்களும் காலவரையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் இறங்கியிருந்தனர். இந்திய மத்திய அரசும் இலங்கை அரசுடன் இது தொடர்பில் பேசி

20ஆம் பக்கம் பார்க்க

## 21 தமிழர்கள் முஸ்லிம்களால் படுகொலை

ஆணைக்குழுவில் சாட்சியம் பதிவு

மட்டக்களப்பு, ஜூன் 10
புதுக்குடியிருப்பு கடற்கரைப் பகுதியில் முஸ்லிம் மக்களால், 21 தமிழ் மக்கள் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் நேற்றைய தினம் பெண் ஒருவர் சாட்சியமளித்துள்ளார். தனது குடும்பத்தில் 4 பேர் இவ்வாறு முஸ்லிம் மக்களால் படுகொலை செய்யப்பட்டனர் என்று அவர் கண்ணீர் மல்கக் கூறினார்.
ஆரையம்பதி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற காணாமற் போனார் குறித்து விசாரணை

20ஆம் பக்கம் பார்க்க

## தர்ம சங்கடத்தில் இலங்கை அரசு

பக்கம் 12



வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாகப்பொங்கல் வெகு சிறப்பாக நேற்று நடைபெற்றது. காலை முதல் பக்தர்கூட்டம்அலை அலையாக கோவிலில் திரண்டவண்ணம் இருந்தனர். விவரம் 20 ஆம் பக்கத்தில்

## நடுக்கடலில் உயிரிழந்த கற்பிட்டி மீனவர்

யாழ்ப்பாணம், ஜூன் 10
கற்பிட்டியைச் சேர்ந்த சிங்கள மீனவர் ஒருவர் சக மீனவர்களுடன் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது நடுக்கடலில் உயிரிழந்துள்ளார். இவரது சடலம் பருத்தித்துறைக் கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்டு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.
கற்பிட்டியில் இருந்து மீன்பிடிக்கலம் ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற வர்ணகுலசூரிய ஜஸ்ரின் கொஸ்தா (வயது 63) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 28ஆம் திகதி கற்பிட்டி

20ஆம் பக்கம் பார்க்க

## சாட்சிகளை வைத்து நடவடிக்கை எடுக்க முடியாது

மட்டக்களப்பு, ஜூன் 10
"குருக்கள்மடம் படுகொலை தொடர்பில் சாட்சிகள் குறிப்பிட்டவற்றைவைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாது. எதனையும் சட்டத்துக்கு உட்பட்டே செய்ய முடியும்."- இவ்வாறு தெரிவித்துள்ளார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.
மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற இறுதி நாள் அமர்வின் முடிவில் நடத்தப்பட்ட ஊடக

20ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. கூட்டத்தொடர் ஆரம்பம் இலங்கை அரசின் பதில் இன்று

கொழும்பு, ஜூன் 10
இறுதிப்போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பிலான ஐ.நா. விசாரணைக் குழுவின் புதிய நியமனங்கள் குறித்த இலங்கை அரசின் பதில் இன்று ஆரம்பமாகவுள்ள மனித உரிமை ஆணைக் குழுவின் கூட்டத்தொடருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது என ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

20ஆம் பக்கம் பார்க்க

## மூன்று மாதங்களாகியும் மீட்கப்படவில்லை சிறுமி

### தொலைபேசி தரவுகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
சிறுமி ஒருவர் கடத்தப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், அவர் குறித்த

20ஆம் பக்கம் பார்க்க

## இரு இளைஞர் விபத்தில் சாவு

கிளிநொச்சி, ஜூன் 10
கிளிநொச்சி, பரந்தன் சந்தியில் மோட்டார் சைக்கிளும், டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.
கோப்பாய் மத்தி, இராசவீதியைச் சேர்ந்த 24 வயதுடைய சிவானந்தராஜா ஜேம்ஸ் நெல்சன் மற்றும் 21 வயதுடைய உதயகுமார் விதுர்ஷன் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.
வேகமாகச் சென்று கொண்டிருந்த இரு டிப்பர் வாகனங்களை முந்திச் செல்ல முற்பட்ட வேளை, இரு டிப்

20ஆம் பக்கம் பார்க்க

## இயக்கங்களுக்கு எதிராக நேற்று 5 முறைப்பாடுகள்

### காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழுவில்

மட்டக்களப்பு, ஜூன் 10
ரெலோ இயக்கத்துக்கு எதிராக நான்கு முறைப்பாடுகள் நேற்றைய தினமும் மட்டக்களப்பில் பதிவாகியுதுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக 5 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன.
மட்டகளப்பில் இடம்பெற்ற ஆணைக்குழுவின் இறுதி நாள் அமர்வுகள் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்றன.
இதன்போது சாட்சியமளித்த வயதானதாயார் ஒருவர்,1991ஆம்

20ஆம் பக்கம் பார்க்க

## விசாரணைக்குழு விவரம் இலங்கைக்கு அறிவிப்பு

### நவிப்பிள்ளையின் அலுவலகத்தால்

ஜெனிவா, ஜூன் 10
இலங்கையின் இறுதிப்போரின்போது நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்

UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

20ஆம் பக்கம் பார்க்க

## வியட்நாம் குழு தீவகத்துக்கு.

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ். குடாநாட்டுக்கு நேற்று வந்திருந்த வியட்நாம் நாட்டுக் குழு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனைச் சந்தித்ததுடன், தீவகப் பகுதிகளுக்கும் பயணம் செய்து, அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டனர்.
மண்கும்பான், அல்லைப்பிட்டி,

20ஆம் பக்கம் பார்க்க

## புலிகளே எனது தந்தையை கடத்தி படுகொலை செய்தனர்

### ஆணைக்குழு முன்னிலையில் மகன் சாட்சியம்

மட்டக்களப்பு, ஜூன் 10

புலிகளுக்கு ஆள் சேர்ப்பதற்கு கூட்டம் நடத்த ஏற்பாடு செய்து தருமாறு கிராம சேவையாளரான எனது தந்தையிடம் கருணா அம்மானின் தளபதி ஒருவர் கேட்டார். அதற்கு தந்தை மறுக்கவே அவரைக் கடத்திக் கொண்டு சென்று சுட்டுக் கொன்றனர் என்று கொல்லப்பட்டவரது மகன் ஆணைக்குழு முன்பாக நேற்றுச் சாட்சியமளித்தார்.

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று ஆணைக்குழுவின் அமர்வு இரண்டாவது நாளாக நடைபெற்றது. இந்த அமர்வில் சாட்சியமளித்த விவேகானந்தன் தர்சன் என்ற இளைஞரே இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:-

"எனது தந்தையிடம் தமிழீழ விடுதலைப் புலிகள், தமது படையணிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான கூட்டத்தை ஒழுங்குபடுத்தித் தருமாறு கோரினர். அதற்கு அவர் மறுத்துவிட்டார். இதனால் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி எனது தந்தையைக் கடத்திச் சென்றனர்.

கருணா அம்மானின் தளபதியாக இருந்த ஜுவன் என்பவரே எனது தந்தையைக் கடத்திச் சென்றார். கடத்திச் சென்று மூன்று மாதங்களாக எங்களுக்கு அவரைக் காட்டவில்லை. அவரைக் கொல்வதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் எம்மிடம் 8 லட்சம் ரூபா பணத்தை அந்தத் தளபதி கோரினார். அந்தளவு பணம் எங்களிடம் இல்லையென்பதால் கொடுக்க முடியவில்லை.

இதனால் 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி எனது தந்தை கண்கள் கைகள் கட்டப்பட்ட படி சந்திவெளியில் சுட்டுப்போடப்பட்டார்." என்று அந்த இளைஞர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார். (ஐ-5)

# வெளிநோயாளர் பிரிவு 4 மணியுடன் நிறுத்தம்

### யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர் அவதி

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு பிற்பகல் 4 மணியுடன் மூடப்படுவதால் பொதுமக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வைத்தியர் பற்றாக்குறை காரணமாகவே வெளிநோயாளர் பிரிவு இவ்வாறு மூடப்படுகின்றது என்று வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா கூறுகின்றார்.

கடந்த சில வாரங்களாகவே வெளிநோயாளர் பிரிவு இவ்வாறு மூடப்பட்டு வருகின்றது. அதற்கு முன்னர் இரவு 8 மணி வரை வெளிநோயாளர் பிரிவு இயங்கி வந்தது. இவ்வாறு நோயாளர் பிரிவு பிற்பகலுடன் மூடப்படுவதால், தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோரே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

"காலையில் பணியிடங்களுக்குச் சென்றுவிடுவோம். பிற்பகல் 5.30 மணிக்குப் பின்னரே பணியிடங்களில் இருந்து திரும்ப முடியும். ஆயினும் பிற்பகல் 4.30 மணியுடன் வெளிநோயாளர் பிரிவு மூடப்படுவதால் நாம் சிகிச்சை பெறமுடியாதுள்ளது." என்று கூறுகின்றனர் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர்.

> "வெளிநோயாளர் பிரிவுக்கு 20க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது 12 மருத்துவர்களே உள்ளனர். அவர்களில் சிலர் இடமாற்றம் பெற்றுச் செல்லவுமுள்ளனர்.

இதுகுறித்து வைத்தியசாலையின் பதில் பணிப்பாளரிடம் கேட்டபோது:- "வெளிநோயாளர் பிரிவுக்கு 20க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது 12 மருத்துவர்களே உள்ளனர். அவர்களில் சிலர் இடமாற்றம் பெற்றுச் செல்லவுமுள்ளனர். பதிலீட்டுடனேயே மருத்துவர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான நடைமுறையாகவுள்ளது.

ஆனால் அது கருத்தில் கொள்ளப்படாது, இடமாற்றங்களை வழங்குமாறு சுகாதார அமைச்சிலிருந்து கூறப்படுகின்றது. அதனால் பதிலீட்டு இடமாற்றம் இன்றியே அவர்களை இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது. போதிய மருத்துவர்கள் இன்மையாலேயே வெளிநோயாளர் பிரிவை குறித்த நேரத்துக்கு முன்னதாக மூட வேண்டியுள்ளது" - என்றுபதிலளித்தார். (ா-4)



காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அமர்வு மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற போது பெண் ஒருவர் சாட்சியமளிக்கிறார்.

## மருந்தாளர் கற்கை நெறியை பயில ஆர்வமுடையோர் முன்வர வேண்டும்

### வடக்கு சுகாதார அமைச்சின் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கில் பெரும்பாலான மருந்தகங்கள் மருந்தாளர் இன்றியே இயங்கி வருகின்றன. இதனால் அவை பதிவு செய்யப்படாமல் இயங்குகின்றன. எனவே இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்றதாக மருந்தாளர் கற்கை நெறியை பயில்வதற்கு ஆர்வமுடையோர் முன்வர வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வட மாகாணத்தில் மருந்தாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அதனால் பெரும்பாலான மருந்தகங்கள் இன்னும் பதிவு செய்யப்படாமலேயே இயங்கி வருகின்றன. இது நோயாளர் விடயத்தில் திருப்திகரமானதல்ல. பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய, தவறுகள் நிகழக்கூடிய சந்தர்ப்பங்களையே ஏற்படுத்துகின்றது. இவ்வாறான குறைகளை நீக்குவதற்கு இங்குள்ளவர்கள் மருந்தாளர் கற்கை நெறியைப் பயில்வதற்கு முன்வர வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் இதற்கான கற்கையை மேற்கொள்ளக் கூடியதான வசதிகள் உள்ளன. இந்தக் கற்கையை மேற்கொள்பவர்கள் ஜீ.சீ.ஈ சாதாரண தர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் உட்பட 7 பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் இரசாயனம் உட்பட 3 பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு மருந்தகத்தில் ஒரு மருந்தாளரின் கீழ் பயிற்சி மருந்தாளராகத் தன்னைப் பதிவு செய்திருத்தல் வேண்டும். அதன் பின்னர் இலங்கை மருத்துவ சபையில் தம்மை வெளிவாரி மருந்தாளர் பயிலுநராகப் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தினத்தில் இருந்து 2 வருடங்களின் பின்னர் இலங்கை மருத்துவ கல்லூரி சபையினால் நடத்தப்படும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அந்தப் பரீட்சையில் சித்தியடைந்தால் இலங்கை மருத்துவ சபையில் வெளிவாரி மருந்தாளராகப் பதிவுசெய்து கொள்ளலாம். அவர்கள் வடக்கிலுள்ள தனியார் மருந்தகங்களில் பணிபுரியலாம். அல்லது தாமாகவே மருந்தகம் அமைத்து நடத்தலாம். வெளிவாரி மருந்தாளர்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தில் ஒரு போதும் இக்கற்கைநெறி மூலமாக வேலைவாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-4)

## கைது செய்த பொலிஸார் என்னைத் தாக்கினார்கள்

### திருட்டுச் சந்தேகநபர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 10

திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்த தன்னை வட்டுக்கோட்டைப் பொலிஸார் அடித்து, துன்புறுத்தி காயப்படுத்தியுள்ளனர் என்று சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அவர், இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் காரியாலயத்தில் தான் முறைப்பாடு செய்துள்ளார் என்றும் கூறினார்.

தொல்புரம் மத்தி சுழிபுரத்தைச் சேர்ந்த முருகேசு தயாநந்தன் (வயது 30) தனது உடலில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு சிகிச்சை பெற்று வருகிறார். இந்தக் காயங்கள் பொலிஸார் தாக்கியதால் ஏற்பட்டவை என்று அவர் கூறுகின்றார்.

சம்பவம் குறித்து அவர் தெரிவித்ததாவது:

கடந்த முதலாம் திகதி வீட்டுக்கு வந்து தேங்காய் பிடுங்கித் தருமாறு ஒருவர் கேட்டார். அவரது வீட்டுக்குச் சென்று தேங்காய் பிடுங்கிக் கொடுத்தேன். அதன் பின்னர் அந்த வீட்டுக்காரரின் [illegible] கேட்டதற்கிணங்க அவர் வசித்து வரும் மற்றொரு வீட்டுக்கும் சென்று தேங்காய் பிடுங்கிக் கொடுத்தேன். அதன் பின்னர் கூலிக்கான பணத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டேன்.

நான் தேங்காய் பிடுங்கிய வீட்டாரின் மகளின் நகைகள் காணாமற்போய்விட்டதாகக் கூறி, அந்தப் பழியை என் மீது சுமத்திய பொலிஸார், என்னைக் கைது செய்து கொண்டு தாக்கினார். எனது ஆடையைக்கூட கழற்றி விட்டு அநாகரிகமாக நடந்து கொண்டனர்.

பின்னர் என்னை வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். அது எந்த இடம் என்று என்னால் அடையாளம் காணமுடியவில்லை. ஓரிடத்தில் என்னைக் கீழே இறக்கிவிட்டு துப்பாக்கி முனையை எனது வாய்க்குள் வைத்துச் சுடப்போவதாக அச்சுறுத்தினர். களவு நகைகளை தரும்படி கூறியே அவ்வாறு அச்சுறுத்தினர்.

நான் நகைகளை எடுக்கவில்லை என்று கூறினேன். நான் அப்பொழுது நின்றிருந்த இடம் எது என்று தெரியுமா என்று கேட்டனர். தெரியாது என்றேன். வன்னிக்குக் கொண்டு செல்வதாகக் கூறினர். பின்னர் சிறிது நேரத்தின் பின்னர் என்னை மீண்டும் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் எனது வீட்டாருக்கு தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி என்னை அழைத்துச் செல்லும்படி எனது மனைவியிடம் கூறப்பட்டது. அதன் பின்னரே என்னை விடுவித்தனர். வெளியேறிய பின்னர் வலிதாங்காமல் தான் சங்கானை வைத்தியசாலையில் 2ஆம் திகதி சிகிச்சைக்காகச் சென்றேன். பின்னர் அங்கிருந்து என்னை யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றினர். இது தொடர்பில் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளேன் என்றார்.

போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார் தயாநந்தன். முறைப்பாடு செய்யப்பட்டதனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளரும் உறுதிப்படுத்தினார். இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைப்பை ஏற்படுத்திய போதும் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொள்ள முடியவில்லை. (உ-4-5)

**இலங்கைத் தீவில் விசா ஆலோசனை வரலாற்றில் முதல் தடவையாக பின்வரும் அரிய சந்தர்ப்பங்கள்**

**சைப்பிரஸ்**
கைநிறைய உழைக்க
வெறும் 8 இலட்சம்
போதும்

**சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி,**
செங்கன் விசாவில்
பறக்க ஒரு மாதம் போதும்

**UK இல்**
2 வருட உழைக்கும் விசா,
2 வருட படிக்கும் விசா
ஒரு மாதம் போதுமே

**ஆஸ்திரேலியா +UK**
Student visa,
ஆஸ்திரேலியா குடும்ப விசா
Visit, மறுக்கப்பட்ட விசா
Canada Student visa.

**திசைகாட்டி (பிறை) லிமிட்**
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்
021 221 9016, 021 568 9090



### மருத்துவமனைக்கான புதிய கட்டடம் அமைப்பது தாமதமாகலாம்

யாழ்ப்பாணம்.ஜூன் 10

நெடுந்தீவு ஆஸ்பத்திரியில் அமைக்கப்படவிருந்த புதிய கட்டடம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி உடனடியாக அமைப்பதற்கான சாத்தியம் இல்லை என்று தெரியவருகின்றது ரூபா 26 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படவிருந்த புதிய கட்டடத்துக்கான நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அண்மையில் நெடுந்தீவுக்கு வருகை தந்திருந்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும், யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தெரிவித்திருந்தனர்.

கட்டடத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதி போதாதெனவும் அதற்கு ரூபா 41 மில்லியன் வரை செலவாகும் என்று ஒப்பந்தகாரர் தெரிவித்துள்ளதால் கட்டடப் பணிகள் தாமதமடையலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது (வ-7)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பாதுகாப்பு ஊழியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தினால் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்துக்கு மாற்று வலுவுள்ளவர்கள் பயன்படுத்தும் வகையில் ஒரு தொகுதி சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர் அலுவலகத்தில் வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அமைப்பாளர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனிடம் அவற்றைக் கையளித்துள்ளார். (ஒ-86)

# வெள்ளைத் தாள்களில் மருந்துச் சிட்டைகள்

## சாவகச்சேரி மருத்துவமனைகளில்

தென்மராட்சி, ஜூன் 10

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வெளி நோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களுக்கு வெள்ளைத் தாள்களில் மருந்துகள் எழுதிக் கொடுக்கப்படுகின்றன.

வெளிநோயாளர் பிரிவில் பயன்படுத்தக்கூடிய சுகாதாரத் திணைக்களத்தால் அச்சிட்டு வழங்கிய சிட்டைகள் முடிவடைந்ததால் வெள்ளைத் தாள்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் வெளி நோயாளர் பிரிவில் 13 ஆயிரத்து மூன்று நோயாளர்களும் கிளினிக்குகளில் 5 ஆயிரம் நோயாளர்களும் சிகிச்சை பெற்றுள்ளதாக மருத்துவமனை புள்ளி விவரக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சுகாதாரத் திணைக்களத்தால் வழங்கப்படும் அச்சிட்ட வெளிநோயாளர் பிரிவு சிட்டைகள் முடிவடைந்ததால் வெள்ளைத் தாள்கள் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

**வெளிநோயாளர் பிரிவில் பயன் படுத்தக்கூடிய சுகாதாரத் திணைக்களத்தால் அச்சிட்டு வழங்கிய சிட்டைகள் முடிவடைந்ததால் வெள்ளைத் தாள்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.**

## பெரும் சவால்களின் மத்தியில் வடக்கில் கால்நடைவளர்ப்பு

யாழ்ப்பாணம்.ஜூன் 10

வடமாகாணத்தில் விவசாயம், மீன்பிடி உட்பட கால்நடை வளர்ப்பு என்பவற்றின் ஊடாக 60 வீதமானவர்கள் தமது வாழ்வாதாரத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

எனினும் கால்நடை வளர்ப்பில் தற்போது நீர்ப்பற்றாக் குறையால் சவால்களுக்கு மத்தியில் வருமானத்தைத் தேடிக்கொள்ளும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்று வட மாகாண கால்நடை உற்பத்தி திணைக்களப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு என்பன பிரதான வாழ்வாதார தொழில்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் தற்போது காலநிலை மாற்றத்தால் நீர்ப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடைகள் நீரில்லாமல் இறக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. தீவகப்பகுதிகளில் 9 வீதமான மாடுகள் தாகத்தைப் போக்கிக் கொள்ள நீர் தேடி கட் டாக்காலிகளாகத் திரிகின்றன. அத்துடன் நெடுந்தீவு பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகள் நீரில்லாமல் இறக்கின்றன.

இந்தச் சவால்களுக்கு மத்தியில் கால்நடை வளர்ப்போர் வருமானத்தைப் பெற்றுக் கொள்வது மிகவும் கடினம். எனினும் பாதுகாப்பாக கால்நடைகளை வளர்ப்பதன் ஊடாக அதற்கான பயனை கால்நடை வளர்ப்போர் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-14)

# தானியங்களை பெறுமதிசேர் உற்பத்தியாக மாற்றும் திட்டம்

## முல்லைத்தீவில் வெற்றி என்கிறார் வட மாகாண விவசாயப் பணிப்பாளர்

முல்லைத்தீவு. ஜூன் 10

ஜெய்கா நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் பெண்கள் குழுக்கள் ஊடாக பெறுமதி சேர் உற்பத்திப் பொருள்களை தயாரிக்கும் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகமாக சிறுதானியங்கள் உற்பத்தி செய்யப்படுவதால் அவற்றை பெறுமதி சேர் பொருள்களாக மாற்றியமைத்து விற்பனை செய்வதற்கான திட்டமாக இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்காக பெண்கள் குழுக்கள் பயனாளிகளாக உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த குழுக்கள் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கடலை, கச்சான், பயறு உள்ளிட்ட சிறுதானியங்களைக் கொண்டு பெறுமதிசேர் உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான பயிற்சிகளாக பொதி செய்யும்முறை. உற்பத்திமுறை என்பன தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளது. உற்பத்திப் பொருள்களை நுகர்வோருக்கு கவர்ச்சியானதாகவும், வித்தியாசமான வடிவங்களிலும் தயாரிக்கும் திட்டங்களும் இனிவருங்காலங்களில் விரிவுபடுத்தப்படவுள்ளன.

இதனை விட வடமாகாணத்தில் ஏனைய மாவட்டங்களிலும் இதனை விரிவுபடுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனூடாக சிறுதானிய பயிர்ச் செய் கையாளர்கள் தமக்கான சந்தை வாய்ப்பை உள்ளூரிலே பெறக் கூடியதாக இருப்பதுடன் பெண்களும் வாழ்வாதாரத் தேவைகளைப் பெற்றுக் கொள்ள சுய தொழில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-14)

## உயிர்காப்பு அங்கிகளை அணியாதோர் சிக்குவர்

### கடற்றொழில் திணைக்களம் அறிவிப்பு

பூநகரி, ஜூன் 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிர்காப்பு அங்கிகளைப் பயன்படுத்தாத மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் மீனவர்களுக்கு வழங்குவதற்காகத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள உயிர்காப்பு அங்கிகளை கூடியவிரைவில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம் தென்பகுதிக் கடற்பரப்பில் திடீரென்று ஏற்பட்ட இடி, மின்னல், மழையுடன் வீசிய சுழற்காற்றினால் ஆழ் கடலில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பல மீனவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அதையடுத்து மீனவர்களின் உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் உயிர்காப்பு அங்கிகளை இலவசமாக வழங்க முன்வந்துள்ள கடற்றொழில் அமைச்சு, சகல மாவட்டங்களிலுள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களுக்கு மீனவர்களுக்கு வழங்குவதற்காக உயிர்காப்பு அங்கிகளை வழங்கியுள்ளதுடன் தொழிலுக்குச் செல்லும் போது தவறாது அவற்றை அணியுமாறும் வலியுறுத்தியிருந்தது.

இந்த நிலையில் முல்லை மாவட்ட மீனவர்களின் பயன்பாட்டுக்காக கடற்றொழில் அமைச்சால் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அங்கிகளை மீனவர்கள் பெற்றுக்கொள்ள முன்வராததால் நூற்றுக்கணக்கான அங்கிகள் திணைக்கள அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அதையடுத்துத் தொழிலில் ஈடுபடும்போது அங்கிகளை அணியாத மீன வர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள அதிகாரிகள், இதுவரை அதனைப் பெற்றுக் கொள்ளாதமீனவர்கள் திணைக்களத்துக்குச் சென்று அங்கிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர். (வ-14-115)

# வட மாகாணத்திலுள்ள மாடுகளுக்கு ஒக்ரோபருக்குள் காதடையாளமிடுக

யாழ்ப்பாணம்.ஜூன் 10

மாடுகளின் உரிமத்தை உறுதிப்படுத்துவதற்கும், களவு போவதைத்தடுப்பதற்குமாக வட மாகாணத்தில் உள்ள மாடுகளுக்கு அடையாளத் தகடு மாட்டும் பணிகள் எதிர் வரும் ஒக்ரோபர் மாத்துடன் முடிவடையும். அதன் பின்னர் அடையாளமிடப்படாத மாடுகள் பராமரிப்பற்ற கட்டாக் காலிகளாகக் கருதப்படும் என்று வட மாகாண கால் நடை அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

18 மாதங்களுடைய (ஒன்றரை வயதுடைய) சகல மாடுகளுக்கும் காதுகளில் இலக்கத் தகடுகள் கட்டாயம் மாட்டப் பட்டிருத்தல் வேண்டும் என்று ஏற்கனவே வட மாகாண கால் நடை உற்பத்திசுகாதாரத் திணைக்களம் அறிவித்திருந்தது.

மாடுகளின் உரிமத்தை உறுதிப்படுத்தல், மாடுகள் திருடப்படுவதைத் தடுத்தல், கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள நடவடிக்கைகளின்போது மாடுகளை அடையாளம் காணல், மாடுகளின் புள்ளி விவரங்களைப் பேணுதல், கட்டாக் காலி மாடுகளை இனம் காணலும் உரிமை கோரப்படாத மாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் போன்ற நோக்கங்களுக்காக மாடுகளின் காதுகளில் அடையாளத் தகடுகள் மாட்டும் நடவடிக்கையை இந்த வருடம் நடைமுறைப்படுத்தும் நோக்கில் உரிய ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

18 மாதங்களை அடைந்த சகல மாடுகளுக்கும் காதடையாளம் இடும் அதிகாரம் பிரதேச கால்நடை வைத்தியர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கால் நடை வைத்தியப் பிரிவுகளிலும் காதடையாளம் இடும் நோக்கில் கால் நடை வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைவாக தற்போது சகல மாவட்டங்களிலும் காதடையாளம் இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாடுவளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் தற்போது தமது மாடுகளுக்கு அடையாளத்தகடு பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த நடவடிக்கை ஒக்ரோபர் மாதத்துடன் முடிவடைய இருப்பதால் அனைத்து மாடு வளர்ப்போரும் தமது மாடுகளுக்கு விரைவில் அடையாளமிட நடவடிக்கைகளைத் தவறாது மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் காதடையாள மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் உரிமை கோரப்படாத கட்டாக்காலி மாடுகளைப்பிடித்து அரச உடைமையாக்கவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-14)

## குருநகரில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு



குருநகர், ஜூன் 10

குருநகர் ஐந்து மாடி குடியிருப்புத் திட்டத்தில் குடியிருப்பவர்களின் சைக்கிள்கள் அடிக்கடி இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டு வருவதாக சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பிட்ட குடியிருப்பாளர்கள் மேல் மாடிகளில் வசித்து வருகின்றபோதிலும் அவர்களது சைக்கிள்கள் கீழுள்ள தரைப் பகுதியிலேயே விடப்படுகின்றன. இதனை வாய்ப்பாக கருதும் திருடர்கள் சைக்கிள்களை களவாடிச் செல்கின்றனர் என்று அவர்கள் குறிப்பிட்டனர். (ஒ-51)

# உயிரிழந்தோர் குறித்தே அதிகளவு சாட்சியங்கள்

### மட்டக்களப்பில் நடந்து முடிந்த காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில்

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் சாட்சியமளித்தவர்களில் அரைவாசிப் பேர் வரையில் கொல்லப்பட்ட தமது உறவுகள் தொடர்பிலான சாட்சியங்களையே முன் வைத்தனர். முஸ்லிம்கள் காத்தான் குடியில் கொல்லப்பட்டமை தொடர்பிலும், தமிழ் மக்கள் இயக்கங்கள் மற்றும் இராணுவத்தினர், முஸ்லிம்களால் கொல்லப்பட்டமை தொடர்பிலும் தமது சாட்சியங்களை முன்வைத்தனர்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும்ஜனாதிபதிஆணைக்குழு வின் அமர்வுகள் கடந்த நான்கு நாள்களாக மட்டக்களப்பில் இடம்பெற்றது. காத்தான்குடிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு நாள்களும், ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு நாள்களும் அமர்வுகள் இடம்பெற்றன. இதன் போது 195 பேர் சாட்சியமளித்தனர்.

இவ்வாறு சாட்சியமளித்தவர்களில் 95 பேர் கொல்லப்பட்ட தமது உறவுகள் தொடர்பிலேயே சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

காத்தான்குடிப் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற அமர்வில் சாட்சியமளித்த முஸ்லிம் மக்கள் காத்தான் குடியில் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகள் தொடர்பிலேயே பெருமளவிலான சாட்சியங்களை முன் வைத்தனர்.

தமது உறவுகள் கொல்லப்பட்டமை தெரியும் என்றும், அவர்களது சடலங்கள் இனங்காணப்படவில்லை என்றும், சடலங்களைப் புதைத்த இடத்தில் மீட்டுத் தருமாறும் தமது சாட்சியத்தில் கோரியிருந்தனர்.

இதேவேளை ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் சாட்சியமளித்த தமிழ் மக்கள் தமது உறவுகள், இயக்கங்களால் கடத்திச் சென்று கொல்லப்பட்டமை மற்றும், முஸ்லிம்களால் கொல்லப்பட்டமை, இராணுவத்தினரால் கொல்லப்பட்டமை தொடர்பில் சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் 1983 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளவே ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரு-5)

## நீர்வாழ் உயிரிகளை பெருக்கி ஏற்றுமதி மூலம் லாபமீட்டலாம்

*வியட்நாம் குழு வடக்கு முதலமைச்சருக்கு ஆலோசனை*



யாழ்ப்பாணம், ஜூன் 10

உள்நாட்டு நீர் நிலைகள் வடமாகாண சபையின் அதிகாரத்துக்குள் வருவதால் நீர் வாழ் உயிரினப் பெருக்கத்துக்கான விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை வடமாகாண சபை எடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் உள்ளூர் நீர் நிலைகளில் பெருகி வரும் உயிரினங்களை, மீன்களை, கடலட்டைகளை, காணிப் பாசிகளை சிறந்த விலைக்கு சீனா, யப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று தெரிவித்துள்ளார் சோசலிசக் குடியரசான வியட்நாமின் தூதுவர் டோன்சின் தான்ங்.

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள வியட்நாம் குழுவினர் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அவரது அலுவலகத்தில் நேற்று முற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் தூதுவர் டோன்சின் தான்ங்.

கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில தமது நாட்டினால் வழிநடத்தப்படும் நீர்வாழ் உயிர் சம்பந்தமான வியட்நாம் தொழில்நுட்ப உதவித் திட்டம் என்ன விதத்தில் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைப் பார்வையிடத் தாம் வந்தனர் என்றும்,

நாட்டின் பல பாகங்களிலும் பரிசீலனை செய்ததில் வடமாகாணமே நீர் வாழ் உயிரினங்களை வளர்த்தெடுக்குந் தொழிலுக்கு மிகவும் பொருத்தமான இடம் என்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பட்டம் பெற்ற இரு வாலிபர்களைத் தம் நாட்டுக்கு அழைத்து அங்கு தமது தொழிற்சாலைகளைப் பார்வையிடவும் பயிற்சி பெற பதினைந்து வருடங்களுக்கு முன்னர் போரால் பாதிக்கப்பட்டு எதுவுமே இல்லாத ஒரு நிலையில் இருந்த வியட்நாம் இன்று பல லட்ச டொலர் பெறுமதியான மீன் ஏற்றுமதி செய்கிறது என்பதையும் அவர் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ரு-14)



*வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தின் போது நேற்று பெண் அடியார் ஒருவர் இரண்டாவது தடவையாகவும் தூக்குக் காவடி எடுத்து தனது நேர்த்திக் கடனை நிறைவேற்றினார். (ஜ-102)*

## கடந்த நான்கு தினங்களில் 195 பேரிடம் விசாரணை

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பில் கடந்த நான்கு தினங்களாக நடைபெற்று முடிந்த அமர்வுகளில் 195 பேர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். புதிதாக 202 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. - என்று தெரிவித்துள்ளார் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.

**புதிதாக 202 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.**

கடந்த மார்ச் மாதம் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட அமர்வின் போது ஆயிரத்து 200 புதிய முறைப்பாடுகள் வரை பதிவு செய்யப்பட்டிருந்தன. தற்போதைய அமர்வின் போது 202 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 6 ஆம் திகதி காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 12 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 59 பேருக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் 49 பேர் சாட்சியமளித்திருந்தனர். அத்துடன் புதிய முறைப்பாடுகள் 16 பதிவு செய்யப்பட்டிருந்தன்.

கடந்த 7 ஆம் திகதியும் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 13 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 53 பேருக்கு சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும், 56 பேர் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்திருந்தனர். புதிய முறைப்பாடுகள் 16 பதிவாகியிருந்தன.

8 ஆம், 9 ஆம் திகதிகளில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமர்வுகள் இடம்பெற்றன. முதல் நாள் அமர்வில் 54 பேருக்கு அழைப்பு விடுக்கப்படிருந்த போதும், 50 பேரே சாட்சியமளித்திருந்தனர். அத்துடன் 85 புதிய முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இறுதி நாளான நேற்று 30 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் 40 பேர் சாட்சியங்களை வழங்கியிருந்தனர். அத்துடன் புதிய முறைப்பாடுகள் 90 பதிவாகியுள்ளன என்று ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரு-5)

# பட்டப்பகலில் வீடு உடைத்து 35 பவுண் நகைகள் திருட்டு

### கோண்டாவில் பகுதியில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 10

கோண்டாவில் ஞானவைரவர் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த தாலிக்கொடி உட்பட 35 பவுண் நிறையுடைய நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் உட்படப் பெறுமதியான பல பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை பகற்பொழுதில் இந்தத் திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது. யாழ். மேல்நீதிமன்றத்தில் பணிபுரியும் பணியாளர் ஒருவரது வீட்டிலேயே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

**வீட்டில் யாரும் இல்லாத சமயம்**

வீட்டின் உரிமையாளர் அளவெட்டியில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். அவரது மனைவி யாழ். மேல் நீதிமன்றில் பணிபுரிகின்றார். அவர்கள் இருவரும் பணிக்குச் செல்வதைச் சாதமாகப் பயன்படுத்திக் கொண்ட திருடர்கள், பகற்பொழுதில் தமது கைங்கரியத்தைக் காட்டியுள்ளனர்.

வழமையாக மதிய உணவு அருந்த வீட்டுக்கு வருவார் வீட்டு உரிமையாளரின் மனைவி. அன்றைய தினம் மதியம் அவர் வீட்டுக்கு வரவில்லை. மாலையில் பணி முடிந்து வீடு வந்தபோது வீட்டின் முன் கதவின் [illegible] உடைக்கப்பட்டிருந்தது. வீட்டின் உள்ளே இருந்த 35 பவுண் நிறையுடைய நகைகள், பெறுமதி மிக்க மடிக் கணினி, கமரா, வீட்டிலிருந்த 14 ஆயிரம் ரூபா பணம் என்பன களவாடப்பட்டிருந்தன. உடனே இதுகுறித்து அவர்களால் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டது.

சம்பவ இடத்துக்கு மோப்ப நாயுடன் வந்த பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டனர். மோப்பநாயுடன் உதவியுடன் சம்பவ இடத்தில் தேடுதல் நடத்தப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. ஆயினும் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். [illegible]

## ஆஸியில் கிரிக்கெட்டில் கலக்கும் தமிழ் அகதிகள்

படகுகளில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று அங்கு கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்களின் குழுவொன்று உள்ளூரில் பிரபலமான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றில் கலக்கிக் கொண்டிருக்கிறது. இதில் அவர்கள் வெற்றி பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை செய்ய முடியாத நிலைமை, அவர்களது தஞ்சக் கோரிக்கை குறித்த முடிவுகளுக்காக காத்திருத்தல், எந்த நேரமும் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படலாம் என்ற அச்சுறுத்தல் ஆகியவற்றால் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய மன அழுத்தத்தை குறைக்க கிரிக்கெட் விளையாட்டுத்தான் உதவியது என்று கூறப்படுகிறது.

# மீன்களுக்கு உத்தரவாத விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுங்கள்



அதிகாரிகளுடன் ஜனாதிபதி

## ஜனாதிபதி ராஜிதவுக்கு பணிப்பு

கொழும்பு,ஜூன்10
மீன்களுக்கு உத்தரவாத விலையை நிர்ணயிப்பதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மீனவ சமூகம், மீன்பிடி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் திறைசேரி ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

மீன்பிடித்துறையிலுள்ள பிரச்சினைகள் குறித்து அலரி மாளிகையில் வைத்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி, அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

மீன்களுக்கு உத்தரவாத விலையை பெற்றுக் கொடுப்பதன் மூலம் மீனவ சமூகத்தினரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று ஜனாதிபதி கூறினார்.

சில மீனவர்களால் மீன்பிடித்தலுக்காக சட்டவிரோதமான முறையில் டைனமைட் பயன்படுத்தப்படுவது குறித்தும் அமைச்சர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இந்தச் சந்திப்பில் மீனவர்களின் பலதரப்பட்ட பிரச்சினைகள், மீன்பிடித் துறை முகங்களை முன்னேற்றுதல் உட்பட பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. (ச)

# தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்துங்கள்

## பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு

கொழும்பு,ஜூன் 10
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் தாக்கப்பட்டமை, மற்றும் அவரது கார் தீ மூட்டி எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசேட பொலிஸ் குழுவொன்று அனுராதபுரத்தில் அமைந்துள்ள பொலிஸ் கொன்ஸ்டபிள் சுமிந்த சமனின் வீட்டுக்குச் சென்று விசாரணை செய்துள்ளது.

பொலிஸ் கொன்ஸ்டபிளின் குடும்ப உறுப்பினர்களின் வாக்குமூலங்களையும் அக்குழு பதிவு செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவை காவலரணில் கடமையாற்றிவரும் பொலிஸ் கொன்ஸ்டபிளே அண்மையில் தாக்குதலுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# போர்க்குற்ற விசாரணை குறித்து நாடாளுமன்றத்தில் கருத்தறிவு

## திட்டமிடுகிறது அரசு

கொழும்பு,ஜூன் 10
போர்க் குற்ற விசாரணைகள் தொடர்பில் நாடாளுமன்றில் கருத்து கோரப்பட உள்ளது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனிதாபிமான மீட்புப் பணிகளின் போது போர்க் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாகத் தெரிவித்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது நியாயமானதா என்பது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கருத்துக் கோரப்படவுள்ளது.

> போர்க் குற்றச் செயல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் சர்வ தேச ரீதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபை விசாரணை நடத்த உள்ளது.

போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை விசாரணை நடத்த உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இந்த விசாரணைக் குழுவை இன்று செவ்வாய்க்கிழமை பெயரிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே விசாரணைக் குழு அமைப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. (ச)

# நாலாயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில்

## பொசன் பண்டிகைக் காலத்தில்.

கொழும்பு,ஜூன் 10
அநுராதபுரத்தில் நடைபெறவிருக்கும் தேசிய பொசன் பண்டிகை கொண்டாட்டங்களை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை பொசன் வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று அநுராதபுர மாவட்ட அரச அதிபர் மகிந்த செனவிரத்ன தெரிவித்தார்.

பொசன் பண்டிகைக் காலத்தில் அநுராதபுரம், மிஹிந்தலை மற்றும் தந்தரிமலை பிரதேசங்களில் நாலாயிரம் பொலிஸாரைப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அநுராதபுரம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஷ் சேனாரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் பொசன் சேவைக் கடமைகளில் ஈடுபடும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நோக்கில் அநுராதபுரம் மற்றும் கலன்பிந்துனுவெவ கல்வி வலயங்களைச் சேர்ந்த பதினைந்து பாடசாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

குறித்த 15 பாடசாலைகளுக்கும் நேற்று திங்கட்கிழமை முதல் ஒரு வார காலத்துக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



இலங்கை - வளைகுடா நாடுகளுக்கிடையிலான உறவை பலப்படுத்தும் நோக்கில் அங்கு பணிபுரியும் இலங்கைத் தூதர்களுக்கு பயிற்சிப் பட்டறையொன்று நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் இலங்கைத் தூதர்களுடன் வெளிவிவ்கார அமைச்சர் ஜி. எல். பீரிஸ்,நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்துரையாடுகின்றனர்.

# வர்த்தகர் சுட்டுக் கொலை

கொழும்பு,ஜூன் 10
மொனராகலையில் வர்த்தகர் ஒருவர் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பிரசவத்தை அடுத்து உறவினர் ஒருவர் வீட்டில் தங்கியுள்ள தமது மனைவியை பார்ப்பதற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற அவர் மீண்டும் வீடு திரும்பிய போது குறித்த வர்த்தகர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

மற்றொருமோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வர்த்தகர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ச)

# போர் நிலவிய வேளையில் காணி, ஆதனங்களை பறிகொடுத்தோர் மீளப்பெற வருகின்றது சட்டம்

கொழும்பு, ஜூன் 10
இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்ற போர் காரணமாக 1983 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் த்கத் தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தமக்குச் சொந்தமான அசைவற்ற ஆதனங்களை வேறு நபர்களிடம் பறி கொடுத்த அவற்றின் [illegible] உரிமையாளர்கள் அவற்றை மீண்டும் தமதாக்கிக் கொள்ளும் விதத்தில் அமைந்த கால விதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரங்கிடைத்துள்ளது. கடந்த 5 ஆம் திகதி வியாழக் கிழமை இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும்போது கால விதிப் பு கட்டளைச் சட்டத்தின் காரணமாக தமக்குச் சொந்தமான காணி மற்றும் அசையாத ஆதனங்களைப் பிறரிடம் இழந்த அவற்றின் உண்மையான உரிமையாளர்கள் மீண்டும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.

தற்போது நடைமுறையில் இருந்துவரும் காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஒருவருக்குச் சொந்தமான காணிகள் உட்பட அசைவற்ற ஆதனங்கள் மீது பத்து வருட கால தொடர்ச்சியான உரிமையைக் கொண்டுள்ள வேறொருவர் அந்த ஆதனங்களின் உரிமையை நீதிமன்றத்தினூடாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

தமது காணி உட்பட அசையாத ஆதனங்களை இழந்த நபரொருவர் இறந்திருக்கும் பட்சத்தில் அவரது மரபுவழி உரிமையாளர்கள் அவற்றுக்கான உரிமையைக் கொண்டிருப்பார்கள் என்றும் இந்தச் சட்ட மூலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து 12 மாதங்கள் வரை பாதிக்கப்பட்ட நபரொருவர் சட்டத்தின் மூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ள நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தச் சட்டமூலம் இலங்கையின் அரசமைப்புக்கு முரணானதல்ல என்ற வகையில் சட்டமா அதிபரும் அத்தாட்சிப்படுத்தியுள்ளார்.

தமது காணிகள் உட்பட அசையாத ஆதனங்களை இழந்து இங்கும், வெளிநாடுகளிலும் மனச்சுமையுடன் வாழ்ந்து வருபவர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாகப் பெரும் நன்மை அடைவார்கள். மேலும் கால விதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம், ஆட்சி யுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என்ற பெயரில் அழைக்கப்படக்கூடும் எனவும் தெரிய வருகின்றது. (ஐ)

# பண மோசடியில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு,ஜூன் 10
வாகன உரிமைப் பத்திரங்களைப் பெற்றுத் தருவதாகக் கூறி வாடிக்கையாளர்களிடம் 45 லட்சம் ரூபா பண மோசடி செய்த இளைஞரொருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கேகாலை விசேட பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய ஆனமடு பொலிஸார் சந்தேக நபரை ஆண்டிகம பிரதேசத்தில் வைத்து கைது செய்தனர்.

இந்த நபர் வாகன உரிமைப் பத்திரங்களைப் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்துள்ளதுடன் போலியான பத்திரங்களையே பெற்றுக் கொடுத்துள்ளார் என்று தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ச)

# படையினர், கருணாவால் எமது உறவுகள் கடத்தல்

## ஆரையம்பதியில் 6 சாட்சியங்கள்

மட்டக்களப்பு. ஜுன் 10

கருணா குழுவினரால் கடத்தப்பட்டமை மற்றும் இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினரால் கடத்தப்பட்டமை தொடர்பில் காணமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை 6 பேர் சாட்சியமளித்துள்ளனர்.

அத்துடன் பத்துச் சாட்சிகள் வரையில் யாரால் தமது உறவுகள் கடத்தப்பட்டனர் என்பதை வெளிப்படுத்துவதற்கு தயக்கம் வெளியிட்டனர்.

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமர்வின் போதே இவ்விதம் இடம்பெற்றுள்ளது.

**குணநாயகி என்ற பெண் சாட்சியமளிக்கையில்:-**

தனது மகன் கொழும்புக்குச் செல்வதற்காக காத்தான் குடிக்கு பேருந்துக்கு முன்பதிவு செய்யச் சென்றதாகவும் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை என்று தெரிவித்தார். இந்தச் சம்பவம் 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்றதாக அவர் சாட்சியமளித்தார்.

இது தொடர்பில் ஆணைக் குழுவினர் எவ்வாறு காணாமற்போனார் என்று கேள்வியெழுப்பினர். அவரை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்றதாக அவர் குறிப்பிட்டார். யார் வலுக் கட்டாயமாக கடத்தினர் என்று ஆணைக்குழுவினர் மீளவும் கேள்வியெழுப்பிய போது, கருணா குழுவைச் சேர்ந்த சாந்தன் குழுவினரே அவரைக் கடத்தியதாகத் தெரிவித்தார்.

> ஏறாவூருக்கு மீன் வியாபாரத்துக்குச் சென்ற எனது சகோதரர் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டார். கொம்மாந்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரே கடத்தியுள்ளனர்.

**மற்றொரு பெண் சாட்சியமளிக்கையில்:-**

1991 ஆம் ஆண்டு ஏறாவூருக்கு மீன் வியாபாரத்துக்குச் சென்ற எனது சகோதரர் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டார். கொம்மாந்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரே அவரைக் கடத்தியுள்ளனர்.

அதன் பின்னர் எனது சகோதரது நிலை தொடர்பில் எதுவித தகலும் தெரியவில்லை என்று அவர் சாட்சியமளித்தார்.

**பரமேஸ்வரி என்ற பெண் சாட்சியமளிக்கையில்:-**

1994 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி எனது கணவரும், சகோதரரும் தோட்டத்தில் இரவுக் காவலிருந்த போது விசேட அதிரடிப்படையினரால் கடத்திச் செல்லப்பட்டனர் என்று கூறினார்.

எவ்வாறு விசேட அதிரடிப் படையினர் கடத்தினர் என்று குறிப்பிடுகின்றீர்கள் என்று ஆணைக் குழுவினர் கேள்வி யெழுப்பிய போது, அந்தப் பகுதிக்கு விசேட அதிரடிப்படையினர் தான் சென்று வருவது வழமை. அத்துடன் அவர்கள் காவல் இருந்த தோட்டத்தில் விசேட அதிரடிப்படையினரின் சப்பாத்துக் கால் அடையாளங்கள் இருந்தன என்று பதிலளித் தார்.

இது தொடர்பில் விசேட அதிரடிப் படையினரின் முகாம்களில் சென்று கேட்ட போதும், அவர்கள் தாங்கள் எனது கணவரையும் சகோதரரையும் பிடிக்க வில்லை என்று மறுத்து விட்டதாக அவர் சாட்சியமளித்தார். (ச-5)



தீயால் எரிந்த மர ஆலை

## மர ஆலையில் பரவியது தீ; மரத் தளபாடங்கள் சேதம்

மட்டக்களப்பு.ஜுன் 10

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள செம்மன் ஓடையில் மர ஆலை ஒன்றில் பற்றிக் கொண்ட தீயால் பல லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த மரத் தளபாடங்கள் மற்றும் பொருள்கள் எரிந்து சேதமாகியுள்ளன என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்றது.

இந்தத் தீயால் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த முதிரை மரத்திலான மரத் தளபாடங்கள் மற்றும் பலகைகள், மர ஆலை இயந்திரங்கள் மற்றும் வீட்டுப் பாவனைபொருள்கள் என பலவும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஒன்பது பேர் கைது



கோப்புப்படம்

அம்பாறை,ஜுன் 10

அம்பாறை, பள்ளிக்குடியிருப்பு, ஆலையடிவேம்பு பிரதேசங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பெண்ணொருவர் உட்பட 9 பேர் நேற்றுமுன் தினம்ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டனர்.

இவ்விதம் மின்சாரம் பெறுவதற்குப் பயன்படுத்தப்பட்ட மின்சார வயர்களும் மீட்கப்பட்டன என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபையின் கொழும்புதலைமையக விசேட குழுவினரும் அக்கரைப்பற்று பொலிஸாரும் இணைந்து அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பு ,ஆலையடிவேம்பு பிரதேசங்களில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன்போதே சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றமைக்காக அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலி ஸார் கூறினர்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## கைக்குண்டு மீட்பு

வாகரை.ஜுன் 10

வாகரை பிரதேச புச்சாக்கேணி கிராம அலுவலர் பிரிவிலுள்ள பலநோக்கு மண்டபத்திலிருந்து கைக்குண்டு ஒன்றை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வாகரைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் மர்மப் பொருள் ஒன்று தென்படுவதைக் கண்டு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப் பட்டது.

அதனையடுத்து அவர்கள் குறித்த இடத்துக்குச் சென்று கைக் குண்டை மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-10)

## தமிழர்கள் காணாமற் போவதற்கு முஸ்லிம் மக்கள் தான் காரணம்

### சாட்சியமளித்தோர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு. ஜுன் 10

முஸ்லிம்களால் தமது உறவுகள் கடத்திச் செல்லப்பட்டதாக ஒரு தொகுதி மக்களும், முஸ்லிம் பிரதேசமான காத்தான் குடிக்கு வேலைக்குச் சென்ற பின்னர் தமது உறவுகள் பலர் காணாமற் போனதாக இன்னொரு தொகுதி மக்களும் நேற்றுமுன்தினம் ஆணைக் குழு முன்பாக சாட்சியமளித்திருந்தனர்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசமான ஆரையம்பதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன் போது சாட்சியமளித்த மக்களே முஸ்லிம் மக்களுக்கு எதிரான தமது குற்றச்சாட்டுக்களை முன் வைத்தனர்.

**கனகம்மா என்ற பெண் சாட்சியமளிக்கையில்:-**

எனது கணவர் இலங்கை மின்சார சபையில் பணி புரிந்தார். 1994 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி கல்லடியிலுள்ள அலுவலகத்துக்குப் பணிக்காகச் சென்றார். அங்கு பணி முடிந்து வீட்டுக்குப் புறப்பட்டவர் வீடு வந்து சேரவில்லை. அந்தக் காலப்பகுதியில் ஆரையம்பதியிலிருந்து காத்தான்குடி ஊடாகக் கல்லடிக்குச் செல்ல முடியாததால் கடல் வழியாகத்தான் செல்ல வேண்டியிருந்தது.

கல்லடியிலிருந்து படகில் புறப்பட்டவர் வீடு வந்து சேரவில்லை. இது தொடர்பில் விசாரித்த போது முஸ்லிம்கள் அவரைக் கடத்திக் கொண்டு சென்றதாக அறிந்தேன் என்று சாட்சியமளித்தார்.

**சோமசுந்தரம் கமலாவதி என்ற பெண் சாட்சியமளிக்கையில்:-**

எனது மகன் 1991 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12 ஆம் திகதி ரியூசனுக்கு மட்டக்களப்பு நகருக்குச் சென்றார். அதன் பின்னர் வீடு திரும்பவில்லை. உடனேயே எனது கணவர் சென்று அவரைத் தேடிய போது முஸ்லிம்கள் அவரைக் கடத்திக் கொண்டு சென்றதாக அறிந்தோம் எனச் சாட்சியம ளித்தார்.

இதேவேளை-1987 ஆம் ஆண்டுக்கும் 1992 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் காத்தான்குடிக்கு மேசன் வேலைக் குச் சென்ற தமது குடும்ப உறுப்பினர்கள் அதன் பின்னர் வீடு திரும்ப வில்லை என்று அங்கு சாட்சியமளித்த ஏனையோர் தெரிவித்தனர்.

அத்துடன் அந்தக் காலப் பகுதியில் தமிழ் - முஸ்லிம் பிரச்சினை இருந்ததாகவும் அதனால் அவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என்றும் அந்த 9 தமிழ் மக்களும் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டனர். (ச-5)

## காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

மட்டக்களப்பு.ஜுன் 10

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லடி வெட்டை வயல் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிவேம்பு. சித்தாண்டியைச் சேர்ந்த மு.சீனித் தம்பி (வயது-57) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு யானை தாக்கி பாதாபகரமாக உயிரிழந்துள்ளார். (ச)

முதலாம் வருட நினைவலைகள்



அமரர் கந்தையா முத்துக்குமாரசாமி
(ஓய்வுபெற்ற தபால்அதிபர்)

தாய் மடியில்
17.03.1935

அரனடியில்
22.05.2013

திதி-துவாதசி
10.06.2014 செவ்வாய்க்கிழமை

அன்பு முகம் கண்டு ஆண்டொன்று ஆனதுவே
அழியா நினைவலைகள் எம் நெஞ்சை அனலாய் சுடுகிறதே
எம் நெஞ்சம் நெகிழும் வேதனையும் வெறுமையும்
எத்தனை நாள்கள் ஐயா ஏன் இந்தக் கொடுமை ஐயா
காணும் இடமெல்லாம் உங்கள் புன்னகை பூத்த முகம் தோன்ற
கண்கள் நிறைகின்றது கண்ணீர் சொரிகின்றது
இனிய நினைவுகளும் இழந்த வலியும் இறுதி மூச்சு வரை
எம் இதயத்தில் சுமப்போம் ஐயா

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
இன்று (10.06.2014) செவ்வாய்க்கிழமை ஊரெழு மேற்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

ஊரெழு மேற்கு.
மனைவி, சகோதரர்கள், உறவினர்கள்.
(45564) (4.3.6)

நான்காண்டு முடிவில்

அமரர்
பாலசிங்கம் பிரபாகரன்
(முன்னாள் நூலக ஆசிரியர் சிதம்பரக் கல்லூரி)



அன்னை மடியில்
26.12.1964

ஆண்டவன் அடியில்
10.06.2010

திதி : திரயோதசி

சொல்லொன்று செயலொன்று இல்லாது
சொல்லே செயலென்று வாழ்ந்தாய்
சொல்லிலே இனிமை தந்தாய்
செயலில் புதுமை கலந்தாய்
உயர்ந்த இலட்சியங்கள் வகுத்து
உன்னத வாழ்வு கண்டாய்
நான்கு ஆண்டுகளாக எங்கே
உன் நற்பணி தொடர்கின்றாய்?

"செந்தில் பதி"
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, மனைவி, மகள்.
(45570)(7.6.3)

# கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை கிழக்கு ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெறவுள் ளது. இன்று செவ்வாய்க்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (க-86)

* * *

சாவகச்சேரி மீசாலை கிழக்கு அருள்மிகு சித்திர வேலா யுதசுவாமி ஆலய புனரா வர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6.15 இற்கும் 7.15 இற்கும் இடையில் நடைபெறவுள்ளது. இன்று எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (க-86)

* * *

உடுவில் குமரகோட்டம் முருக மூர்த்தி ஆலயத்தின் புன ராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6.15 மணிமுதல் நடைபெறவுள்ளது. இன்று செவ்வாய்க் கிழமை காலையில் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். (க-86)

* * *

கேரதீவு ஐயனார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா ஏக குண்டபக்ஷ அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6.15 மணிக்கு இடம் பெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் நேற்று ஆரம்ப மாகின. அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இன்று காலை 8 மணி தொடக்கம் இடம்பெறும். கிரியா கலாபமணி சிவஸ்ரீ க.வீரபத்திரக் குருக்கள் தலைமை யில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும்.

* * *

நாரந்தனை- சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக நிகழ்வு நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது. எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது. (க)

* * *

சரவணை பன்னம்புலம் முருகமூர்த்தி ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை புதன்கிழமை காலை 6.15 மணி முதல் 8.15 மணிவரை இடம்பெறவுள்ளது. எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை இடம்பெறும்.

* * *

தெல்லிப்பழை கிழக்கு பெரியகலட்டி ஞானவைர வர் ஆலயமஹாகும்பாபிஷேகப்பெருவிழாநாளையமறுதினம் வியாழக்கிழமை காலை 6.40 மணிமுதல் இடம்பெறும். எண்ணெய் காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை இடம்பெறும். (க)

* * *

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியா லயத்தில் அமைந்துள்ள கலைஞான விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 8 மணிமுதல் மு.ப. 10 மணிவரை இடம்பெறவுள்ளதாக வவுனியா நெளுக்குளம் மகா வித்தியாலய இந்து மாமன்றத்தினர் அறிவித்துள்ளார். (க-402)

* * *

வவுனியா செக்கட்டிபுலவு வீரபத்திரர் ஆலய மகாகும் பாபிஷேக திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெற வுள்ளது. எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர் வரும் 16 ஆம் திகதியும் 17 ஆம் திகதியும் இடம்பெறு வதுடன் 29 ஆம் திகதி சங்காபிஷேகம் இடம்பெறவுள் ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள் ளனர். (க-402)



யாழ்.வீதி அதிகார சபையால் செப்பனிடப்பட்டு வரும் குருநகர் புதிய கடற்கரை வீதியில் தொழிலாளர்கள் வீதிப்புனரமைப்பு வேலையில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். (வ-51)

## கடலில் மீன்பிடியில் ஈடுபட்டவர் சாவு

வடமராட்சி, ஜூன் 10

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண் டிருந்த கற்பிட்டி மீனவர்களில் ஒருவர் திடீரென உயிரிழந் தார்.

அதையடுத்து சடலம் பருத்தித் துறையில் கரை சேர்க்கப்பட்டு பருத் தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் பொலி ஸாரின் உதவியுடன் நேற்றுமுன் தினம் ஒப்படைக்கப்பட் டது.

புத்தளம் கற்பிட்டியைச் சேர்ந்த வர்ண குலசூரிய யஸ்ரின் கொஸ்ரா (வயது-63) என்பவரின் சடலமே இவ்விதம் ஒப்படைக்கப்பட்டது.

கற்பிட்டியிலிருந்து படகு ஒன் றில் சில தினங்களுக்கு முன்னர் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்க ளில் ஒரு வரே இவ்வாறு உயிரி ழந்தவராவார்.

கொஸ்ராவின் இறப்பு குறித்து பதில் நீதிவான் ரி.சுப்பிர மணியம் விசாரணை நடத்தி சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கு மாறு கூறியதையடுத்து. சடலம் நேற்று முன்தினம் மாலை உற வினர்களால் எடுத்துச்செல்லப் பட்டது. (வ-173)

## கடலேரிக்குள் பாய்ந்த மோட்டார் சைக்கிள்
### செலுத்தியவருக்கு கால் முறிந்தது

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கடலே ரிக்குள் பாய்ந்ததில் அதனைச் செலுத்தி வந்தவருக்கு கால் முறிந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச் சேரி- தனங்கிளப்பு வீதி கடலேரியை அண்டிய பகுதி யில் இடம்பெற்றது.

பூநகரியிலிருந்து மோட்டார் சைக் கிளில் வந்தவர் வீதியில் காணப் பட்ட குழிக்காக வீதி யோரத்தில் அத ன்னைச் செலுத்த முயன்ற வேளை யில் மோட்டார் சைக்கிள் கட்டுப் பாட்டை இழந்து கடலேரிக்குள் பாய்ந்தது.

மோட்டார் சைக்கிளின் உரிமையா ளரும் அதில் பயணித்த போதிலும் தெய்வாதீனமாக சேற்றுக்குள் வீழ்ந் ததால் காயங் களின்றி தப்பினார். விபத்தில் சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த பாலச் சந்திரன் பிரபாகரன் (வயது -36) என்பவருக்கு கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு. மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவம னைக்கு அனுப்பி வைக் கப்பட்டார். (வ-9)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி வவுனி யாக் கிளையின் வரு டாந்தப் பொதுக் கூட்ட மும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா வெளிவட்ட வீதியில் அமைந்துள்ள சிந்தா மணிப் பிள்ளையார் ஆலய கலாசார மண்ட பத்தில் நடைபெறவுள் ளது. அன்றைய தினம் அனைத்து உறுப்பினர் களையும், புதிதாகச் சங் கத்தில் சேர்ந்து கொள்ள விரும்பும்பழையமாண வர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வவுனியா கிளையின் செயலாளர்தாகலேஸன் தெரிவித்துள்ளார்.(க-421)

# சமய சந்நிதிகளில்

வலி.வடக்கு, ஜூன் 10

சுன்னாகம் தெற்கு விருத்த குடவாயில் விசாலாட்சி சமேத விஸ்வநாதா ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலையில் இடம்பெறும். விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் சுவாமி வெளிவீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (க-86)

* * *

வலி.வடக்கு, ஜூன் 10

சுன்னாகம் சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் விழா நாளை புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடைபெற்று காலை 6.30 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (க-86)

* * *

வலி.வடக்கு, ஜூன் 10

ஏழாலை அத்தியடி பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா இன்று சாலை இடம்பெறவுள்ளது. விசேட பூசை வழிபாடு களைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் சுவாமி வெளிவீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (க-86)

* * *

சுன்னாகம் தெற்கு வடலி அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் விழா நாளை காலையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பகல் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் காட்சியும் மகேஸ்வர பூசையும் நடைபெற வுள்ளது. (க-86)

* * *

இருபாலை கிழக்கு அருள்மிகு கந்தசாமி கோயில் (முனி கோயில்) வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. மதியம் அபிஷேகம் நடைபெற்று மாலை வசந்தமண்டப பூசை யுடன் சுவாமி வீதியுலா வருங்காட்சி இடம்பெறவுள்ளது. (க)

அச்சுவேலி, ஜூன் 10

அச்சுவேலி நாவலம்பி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் புதிய சப்பரத்துக்கான அச்சு வைத்தல் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. பல லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்படவுள்ள புதிய சப்பரத்தை ஆசாரி பத்மநாதன் சுரேந்திரன் (இந்திரன்) நிர்மாணிக்கவுள்ளார். (க-11)

* * *

மந்துவில் இராஜேஸ்வரி அம்பாள் ஆலய பெரும் திருவிழா கடந்த மூன்றாம் திக்தி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தேர்த் திருவிழா நாளை புதன்கிழமையும் தீர்த்தோற் சவமும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. சிவஸ்ரீ சோம. சசிதரக் குருக்கள் தலைமையில் பெருந்திருவிழா கிரியைகள் இடம் பெற்று வருகின்றன. (க-9)

* * *

சரசாலை. நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும். மறுநாள் வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். இந்தப் பெருந்திருவிழாவை சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக் குருக்கள் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

**தவறிவிட்டது**

க. அழகேஸ்வரன் என்பவருடைய தே.அ. அட்டை (423062185V) சாரதி அனுமதிப் பத்திரம், கைப்பை(பேர்ஸ்) என்பன யாழ்ப்பா ணத்திற்கும், நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். அல்லது கீழுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும்.

தொடர்பு: 021 205 4140, 077 711 7181

அல்டி எலக்ரோனிக்ஸ், 15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வேலை ஆள்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் குளிர் பான நிலையம் ஒன்றுக்கு வேலை ஆள்கள் தேவை.

தொடர்பு: 078 721 2323



**கிருஷ்ணா அடகு சேவை**

பதிவு இல : J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2013 ஆம் ஆண்டு **31.05.2013** இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் திகதி **(15.07.2014)** இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.

புதுப்பிக்கத் தவறின் **15.07.2014** ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் : A.S.Surendran

**இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311**

**இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046**

(C/14715)(7.6.3)

**இதயம் நெகிழ்ந்த அஞ்சலி**



யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில் முதன்மைக்குரு

சிவஸ்ரீ **ந.கணேசராஜக்குருக்கள்**

அவர்களின் திடீர் மறைவு குறித்து ஆழ்ந்த அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் மறை வினால் துயருற்றிருக்கும் மனைவி மற்றும் குடும் பத்தினருடன் எமது துயரங்களையும் பகிர்ந்து கொள்கின்றோம். குருக்கள் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அத்தியடிப்பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

கோயில் நிர்வாக சபை,

**யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில்.**

**மரண அறிவித்தல்**

**அமிர்தலிங்கம் சுப்பிரமணியம்** (சண்முகராஜா)

(முன்னாள் பிராந்திய முகாமையாளர், E.B.Creasy & Company Alcop Cey. LTD)



மாதனை, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ். வீதி, யாழ்ப்பாணத்தை வசிப் பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் சுப்பிர மணியம் நேற்று (09.06.2014) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்த லிங்கம்-செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திர னும், காலஞ்சென்ற தா.க.பொன்னுத்துரை மற்றும் இராசம்மா (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், அகிலாண்ட நாயகியின் பாசமிகுகணவரும், தவலிங்கம்(நோர்வே), சிறிலிங்கம், தயாபரி(மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), ஜனார்த்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பூலோகசுந்தரம், சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3852,
077 653 5784

தகவல்: **குடும்பத்தினர்.**

(48830)(4.6.3)



தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல். எம். அதா உல்லாவிடம் கையளிக்கவுள்ளது. அதற்கு முன்னர் அதிலுள்ள பிரச்சினைகள், சிக்கல்கள் தொடர்பாக குழு அங்கத்தவர்கள், அமைச்சர் அதாஉல்லா, அமைச்சின் செயலர் ஆகியோருடன் கலந்துரையாடினர். (ச)

# பொது மக்கள் கருத்தை ஏற்கும் காலம் நீடிப்பு

## பஸ் கட்டணக் கொள்கை குறித்து

கொழும்பு. ஜூன் 10

தேசிய பஸ் கட்டணக் கொள்கையொன்றை கட்டமைப்பது தொடர்பாக பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

போக்குவரத்துடன் சம்பந்தப்படும் தரப்புக்கள் மற்றும் பொது மக்களின் வேண்டுகோள்களை அடுத்தே இந்தக் கால அவ காசம் நீடிக்கப்பட்டது என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் ரேணுக்க பெரேரா தெரிவித்தார்.

தேசிய பஸ் கட்டணக் கொள்கை காலத்துக்கேற்றவாறு மாற்றத்துக்கு உள்ளாக வேண்டியுள்ளமை குறித்து கருத்துக்கள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்காக பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் கடந்த 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச-22)

# மலையகப் பகுதிகளில் இடி, மின்னல் தாக்கம்

கொழும்பு.ஜூன் 10

மத்திய மலையகப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழையும் காற்றும் வீசும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

பொது மக்கள் இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு வானிலை அவதான நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

அதேவேளை- நாட்டின் மத்திய, சப்ரகமுவ, மேல் மாகாணங்கள் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

# வட, கிழக்கு மாகாணங்களுக்கு ஆளுநர்களாக படையதிகாரிகள்

## ஏற்கமுடியாது என்கிறார் ஹக்கீம்



ரவூப் ஹக்கீம்

கொழும்பு.ஜூன் 10

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் படையதிகாரிகள் ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி, யட்டிநுவர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் முன்னாள் படையதிகாரிகளும், தெற்கில் சிவில் ஆளுநர்களும் நியமிக்கப்படுவதற்கான காரணம் புரியவில்லை.

ஒரு கரத்தில் சிறுபான்மை மக்களுக்கு அதிகாரத்தை வழங்கி மறு கரத்தால் அதனை மீளப் பெற்றுக்கொள்வதாகவே இந்த நடவடிக்கை கருதப்பட வேண்டும்.

முன்னாள் படையதிகாரிகள் வடக்கு, கிழக்கில் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டதனால் அந்தந்த மாகாணசபை முதலமைச்சர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

தெற்கில் படையதிகாரிகள் ஆளுநர்களாக நியமிக்கப்படவில்லை. இதனால் எந்த விதமான பிரச்சினைகளையும் முதலமைச்சர்கள் எதிர்நோக்கவில்லை-என்றார். (ச)



கழிவுப் பொருள்கள் எரிப்பு

# பொது மயானத்துக்கு அருகில் கழிவுப் பொருள்கள் எரிப்பு

## மக்கள் அவதி

மன்னார், ஜூன் 10

மன்னார், தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள பொது மயானத்துக்கு பின்புறமுள்ள பகுதியில் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டு எரியூட்டப்படுவதால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

மன்னார் நகர்ப் பகுதியில் நகர சபையால் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருள்கள் மன்னார் பொது மயானத்துக்குப் பின்புறம் கொட்டப்பட்டு எரியூட்டப்படுகின்றன.

அதனால் பொது மயானத்துக்கு அருகில் உள்ள மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கழிவுப்பொருள்கள் இவ்வாறு எரியூட்டப்படுவதால் வெளிவரும் புகையால் சிறுவர்கள், வயோதிபர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று மக்கள் கூறினர்.

# தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைக்க விண்ணப்பியுங்கள்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு.ஜூன் 10

2015 ஆம் ஆண்டுக்கு அரச பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன. அதற்கிணங்க தமது பிள்ளைகளை முதலாம் தரத்துக்குச் சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் அதற்கான விண்ணப்பங்களை உரிய பாடசாலைகளுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

> மாதிரி விண்ணப்பமொன்றைத் தயார் செய்து கேட்கப்பட்டுள்ள விவரங்களை உள்ளடக்கி அதனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்.

கல்வியமைச்சு இது தொடர்பில் மாதிரி விண்ணப்பமொன்றை வெளியிட்டுள்ளதுடன் விண்ணப்பதாரர்கள் அதுபோன்ற விண்ணப்பமொன்றைத் தயார் செய்து கேட்கப்பட்டுள்ள விவரங்களை உள்ளடக்கி அதனை பூர்த்தி செய்து தாம் எதிர்பார்க்கும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

பிள்ளைகளைச் சேர்க்கும் போது வசதிகள் சேவைக் கட்டணமும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கட்டணத்தையும் தவிர்ந்த வேறு கட்டணமோ, உதவிப் பணங்களோ பொருள்களோ பாடசாலைக்கோ அல்லது பாடசாலையுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கோ பெற்றுக்கொடுத்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அனைத் துப் பெற்றோர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது. (ச-173)

# மேலும் இருவர் கைவிட்டனர் விமலை

கொழும்பு. ஜூன் 10

தேசிய சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரான சுகத் மத்துகமகே மற்றும் தொடங்கொட, பிரதேச சபையின் உறுப்பினர் கே.எம். விக்கிரம சிங்க ஆகியோர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.

இந்த இருவரும் தாம் தேசிய சுதந்திர முன்னணியிலிருந்து விலகுவதாக கட்சித் தலைமைக்கும், அரசியல் சபைக்கும் உத்தியோகபூர்வ அறிவித்தல் ஒன்றை விடுக்கவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கட்சியின் கருத்தை ஏற்க விரும்பாது விலகிச் செல்வோருக்கு எந்த நிமிடத்திலும் கட்சியை விட்டுச் செல்ல முடியும் என்று அக் கட்சி கூறுகிறது.

தேசிய சுதந்திர முன்னணியினால் அரசுக்கு முன்வைக்கப்பட்டுள்ள அவசர மறுசீரமைப்பு யோசனைத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள 12 விடயங்கள் சம்பந்தமாக இன்றுவரை எந்தப் பதிலையும் அரசு முன்வைக்கவில்லை. அது சம்பந்தமான கருத்தாடலை திசை திருப்பிக் கட்சி உறுப்பினர்களை தம்பக்கம் இழுத்துக் கொள்ளும் கைங்கரியத்தை அரசு நடத்திச் செல்கிறது என்று தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது. (ச-22)

# பிரிட்டன் அரசின் மாநாடு வெறும் ஏமாற்றுவேலையே

## அரச சார்பற்ற அமைப்புகள் குற்றச்சாட்டு

கொழும்பு.ஜூன் 10

பிரிட்டன் அரசின் ஏற்பாட்டில் இந்த வாரம் நடைபெறவுள்ள 'மோதல்களில் பாலியல் வன்முறைகளைத் தடுத்தல்' குறித்த சர்வதேச மாநாடு வெறும் ஏமாற்றுவேலை எனக் கண்டனம் வெளியிட்டுள்ள அரச சார்பற்ற அமைப்புகள், மோதல் பிரதேசங்களில் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு பிரிட்டன் வரும் பெண்கள் மீது அந்த நாடு உரிய முறையில் அக்கறை காட்டுவதில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளன.

> பிரிட்டனில் நடைபெறும் மாநாட்டில் இலங்கை உட்பட மோதல் பகுதிகளில் பெண்கள் பாலியல் வன்முறைக் குட்படுத்தப்படுவது குறித்து கவனம் செலுத்தப்படும்.

பிரிட்டனில் இந்த வாரம் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் தலைமையில் குறிப்பிட்ட சர்வதேச மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கை உட்பட மோதல் பகுதிகளில் பெண்கள் பாலியல் வன்முறைக் குட்படுத்தப்படுவது குறித்து கவனம் செலுத்தப்படும்.

எனினும், அகதிகள் மற்றும் அடைக்கலம் கோருவோருடன் இணைந்து பணியாற்றும் ஐ.நா. மற்றும் ஏனைய மனிதாபிமான அமைப்புகள் மோதல் பகுதிகளில் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு பிரிட்டனுக்கு அகதிகளாக வரும் பெண்கள் குறித்து அக்கறை காட்டும் விடயத்தில் அந்த நாட்டின் உள்துறை அமைச்சும் குடிவரவு அமைச்சும் தோல்வி கண்டுவருகின்றன என்று அந்த அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்டு தனது வாசலுக்கு வரும் பெண்களை மிக மோசமாக நடத்தும் பிரிட்டன் மோதல் பகுதிகளில் பாலியல் வல்லுறவுக்கு எதிரான சர்வதேச மாநாட்டை நடத்துவது ஏமாற்று வேலை என்று கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

## வடமராட்சி வெங்காய செய்கையாளர் கவலை



வடமராட்சி, ஜூன் 10
வெங்காயத்தின் விலை அதிகரிப்பால் எதிர்வரும் பெரும்போக வெங்காயச் செய்கைக்கான வடமராட்சிப் பிரதேசத்தில் விதை வெங்காயத்துக்கு பற்றாக்குறை ஏற்படலாம் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
வடமராட்சி பிரதேசத்தில் அதி உச்ச விலையாக ஒரு அந்தர் வெங்காயம் 7 ஆயிரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த வியாபாரிகளும் மற்றும் வெளி இடங்களைச் சேர்ந்த விவசாயிகளும் விதை வெங்காயத் தேவைக்காக வடமராட்சிப் பிரதேச விவசாயிகளிடமிருந்து வெங் காயத்தைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.
விலை அதிகரித்துள்ளதன் காரணமாக பெருந் தொகையான விவசாயிகள் தம்மிடமுள்ள வெங்காயத்தை விற்பனை செய்து வருகின்றனர்.
இதனால் எதிர்காலத்தில் விதை வெங்காயத்துக்கு பற்றாக்குறை ஏற்பட்டு வெங்காயச் செய்கை பாதிக்கப்படலாம் என்று வெங்காயச் செய்கையை பாரம்பரியமாக மேற்கொண்டு வரும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (வ-173)

# கரவெட்டி தபால் நிலையத்தை நெல்லியடி நகருக்கு மாற்றுக

## அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

கரணவாய், ஜூன் 10
பொதுமக்களின் நலன் கருதி, தற்போது கரவெட்டியில் இயங்கும் தபால் நிலையத்தை நெல்லியடி நகரப் பகுதிக்கு மாற்றுமாறு அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
கரவெட்டி பிரதம தபாலகம் நெல்லியடி நகரப் பகுதியில் இருந்து பல கிலோமீற்றர்களுக்கு அப்பால் போக்குவரத்து வசதி குறைந்த அரசடிப் பகுதியில் தனியார் கட்டடமொன்றில் தற்போது இயங்கி வருகின்றது.
குறித்த தபாலகத்துக்கு நாளாந்தம் பெருமளவான பொதுமக்கள் மின்சாரப் பட்டியல் செலுத்துதல், பொதிகள் அனுப்புதல் மற்றும் இதர தேவைகளுக்காக வந்து செல்கின்றனர்.
அந்தத் தபாலகம், நகரத்துக்கு ஒதுக்குப்புறமாக அமைந்துள்ளதால் தூர இடங்களிலிருந்து வருவோர் பஸ்களில் வந்து நெல்லியடிச் சந்தியில் இறங்கி சுமார் 5 கிலோமீற்றர் தூரம் வரை நடந்தோ அல்லது பெருமளவு பணத்தைச் செலவு செய்து ஓட்டோவில் பயணம் செய்தோ தான் தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களையும் எதிர்நோக்குகின்றனர்.
அது மட்டுமல்லாது தபாலகத்தின் வருமானத்தை அதிகரிக்க வேண்டுமாயின், அதனை நகரப்பகுதி நோக்கி நகர்த்த வேண்டியது இன்றியமையாததாகும் என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
எனவே பொதுமக்களின் வசதி கருதி குறித்த தபாலகத்தை நெல்லியடி நகரப் பகுதியில் பொருத்தமான இடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
(வ-108)

## சாவகச்சேரி நகர மண்டபம் ஜூலையில் மக்கள் பாவனைக்கு



புதிதாக அமைக்கப்பட்ட நகர மண்டபத்தின் தோற்றம்

தென்மராட்சி, ஜூன் 10
சாவகச்சேரி நகரசபையால் சுமார் 71 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நகர மண்டபக் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் இம்மாத இறுதியில் திறந்து வைக்கப்பட்டு ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மக்கள் பாவனைக்கு விடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இருமாடிகளைக் கொண்ட நகரமண்டபத்தை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோரைக் கொண்டு திறந்து வைப்பிப்பதெனவும், இந்த நிகழ்வில் கலந்து கொள்ள ஏனைய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள், வடமாகாண உள்ளூராட்சி மன்றத் தலைவர், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் போன்றோரை அழைப்பதெனவும் சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
குறித்த நகரமண்டபம் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டப் பிரிவினரால் 54 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுகையளிக்கப்பட்ட போதிலும் மேலதிக பல வேலைத் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்காக நகர சபையினர் 17 மில்லியன் ரூபாவை சபை நிதியிலிருந்து வழங்கி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(வ-9)

## வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளராக சிவகுமார்

வலி.தென்மேற்கு, ஜூன் 10
வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கடந்த ஆறு மாதங்களுக்கு அதிகமாக பதில் தவிசாளராகக் கடமையாற்றி வந்த உப தவிசாளர் எஸ்.சிவகுமார் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரால் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி வடமாகாணத்தில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் அதிகாரத்தை த.தே.கூ. கைப்பற்றியதைத் தொடர்ந்து, வாக்குகளின் அடிப்படையில் அ.ஜெபநேசன் தவிசாளராக நியமிக்கப்பட்டார்.
கடந்த இரு வருடங்களுக்கு மேலாக தவிசாளராகக் கடமையாற்றி வந்த அ.ஜெபநேசன் ஆளுங்கட்சி உறுப்பினர் மத்தியில் ஏற்பட்ட ஒற்றுமையின்மையாலும் கருத்து முரண்பாடுகளாலும் தொடர்ந்து பதவியிலிருக்க் விரும்பாமல் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி தமது தவிசாளர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார்.
அதையடுத்து வாக்குகளின் அடிப்படையில் உப தவிசாளராகவிருந்த எஸ்.சிவகுமார் உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் பதில் தவிசாளராக நியமிக்கப்பட்டு கடந்த ஆறு மாதங்களுக்கு அதிகமான காலம் பதில் தவிசாளராகக் கடமையாற்றி வருகின்றார்.
இந்த நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பரிந்துரைக்கு அமைய யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், பதில் தவிசாளராகக் கடமையாற்றிவரும் எஸ். சிவகுமாரைத் தவிசாளராக நியமித்துள்ளதையடுத்து அவர் சபையின் தவிசாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.
(வ-115)

## ஆலயக் கிணற்றை புனரமைத்து குடிதண்ணீர் பிரச்சினையை நீக்குக

### நல்லூர் பிரதேச சபையின் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி கலந்துரையாடலில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
நல்லூர் ஜே/110 இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மாரியம்மன் கோயில் கிணற்றைப் புனரமைத்து அந்தப் பகுதி மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகான உதவ வேண்டும். இவ்வாறு மேற்படி கிராம அலுவலர் பிரிவுக்கான பிரதேச சபையின் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி குறித்த கலந்துரையாடலின்போது அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
மாரியம்மன் கோயில் கிணறு நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் அது கவனிப்பின்றி பாவனைக்கு உதவாத நிலையை அடைந்தது என்று கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது.
கூட்டத்தில் கலந்து கொண்ட நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்களான சுரேஷ்குமார் மற்றும் கணேசரட்ணம் ஆகியோர் குறித்த கிணற்றை துப்புரவு செய்து மக்கள் பாவனைக்கு விடவும் கிராமத்தில் உள்ள சிறிய வீதிகளைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தத்தமது சொந்தப் பங்களிப்புடன் வீதி விளக்குகளை பொருத்த விரும்புவோர் பிரதேச சபையுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தனர். (வ-7)

## திருவிழாக் கால கடைகள் அமைக்க அனுமதி பெறவும்

### நயினாதீவு ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஜூன் 10
நயினாதீவு அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் வியாபார நிலையங்களை அமைக்க விரும்புவோர் அதற்கான முன் அனுமதியைப் பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தனியார் காணிகளிலும் கடைகள் அமைக்கப்படுவதால் தனியார் காணிகளில் கடைகளை அமைப்பவர்களும் வேலணைப் பிரதேச சபையில் உரிய அனு மதியைப் பெற வேண்டும்.
வேலணை பிரதேச சபையில் அனுமதி பெறாது திருவிழா கால கடைகளை நடத்த எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் எஸ். சிவராசா தெரிவித்தார். (வ-7)

## விபத்தில் காயமடைந்தவர் இருமாதங்களின் பின் சாவு

தென்மராட்சி, ஜூன் 10
இரண்டு மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் நேற்று உயிரிழந்ததாக சாவகச்சேரி நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**கடந்த 70 நாள்களாக யாழ். போதனா மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தவர்.**

கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி மாலை 4.50 மணியளவில் புத்தூரிலிருந்து வந்த மினி பஸ் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு திருப்ப முற்பட்ட வேளையில் ஏ-9 வீதியில் யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் விபத்து இடம்பெற்றது.
காயமடைந்த மோட்டார் சைக்கிளோட்டி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
கடந்த 70 நாள்களாக யாழ். போதனா மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த காயமடைந்தவர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.
கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த வைத்தியநாதன் மயூரன் (வயது-35) என்பவரே உயிரிழந்தவராவார்.
அவரது இறப்பு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (வ-9)

## தொடரும் திருட்டுகள் அச்சத்தில் மக்கள்

வலி. வடக்கு, ஜூன் 10
கட்டுவன், குப்பிளான், ஏழாலை ஆகிய பகுதிகளில் தொடரும் பல்வேறு திருட்டுச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.
குறித்த பகுதிகளில் இருந்து கடந்த சில மாதங்களில் தோட்டக் கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட மோட்டர்கள் மற்றும் புட்வால்புகள் என்பன களவாடப்பட்டுள்ளன.
இது குறித்து பொலிஸாரிடம் முறையிட்டாலும் கூட உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படாத நிலை காணப்படுவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
இதேவேளை குறித்த பிரதேசங்கள் சுன்னாகம், தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-86)

## மது ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்குக்கு ஏற்பாடு

தென்மராட்சி, ஜூன் 10
தென்மராட்சிப் பிரதேசத்தில் புகைத்தல் மற்றும் மது ஒழிப்புத் தொடர்பாக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை சாவகச்சேரி மதுவரி நிலைய பொறுப்பதிகாரி மேற்கொண்டுள்ளார்.
பிரதேசத்தில் மதுப்பாவனை மற்றும் புகையிலை பொருள்கள் பாவனை அண்மைக்காலமாக வீழ்ச்சியடைந்து வருவதால் அதனை மேலும் குறைப்பதற்காக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மக்களிடையே விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்களால் வெள்ளிக்கிழமைகளில் புகைத்தல் பொருள்கள் விற்பனைத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது மற்றும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியாளர்கள் தாமாக முன்வந்து கசிப்பு உற்பத்தியை கைவிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.
(வ-9)

# சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்று போராட்டத்தில் குதிப்பு

## வவுனியா நகரசபைக்கு முன்பாக

வவுனியா,ஜூன் 10
வவுனியா நகரசபையால் கடந்த ஏப்ரல் மாதம் முதல் 7 சுகாதார தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நேற்று திங்கட்கிழமை நகரசபைக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா நகர சபையில் சுகாதார தொழிலாளர்களாக தேவைக்கேற்ப பணி புரிந்து வந்தவர்கள் கடந்த ஏப்ரல் மாதத்துடன் வேலையில் இருந்து நிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டு அதற்கமைய ஏழு தொழிலாளர்கள் வேலையில் இருந்து நிறுத்தப்பட்டனர்.




போராட்டத்தில் சுகாதாரத் தொழி ளர்கள்

மிகவும் இறுக்கமான சூழ்நிலையில் சுகாதார தொழிலாளர்களாக பணி புரிந்து வந்த எங்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 7 தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். நிரந்தர நியமனம் வழங்குவதாகக் கூறி விட்டு பணி நீக்கம் செய்தது நீதியான செயலா?

குளிர் ஊட்டப்பட்ட அறைகளில் இருப்பவர்களுக்கு ஏழைகளின் பசி தெரியுமா? போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இன்று போராட்டத்தில் ஈடுபட்டு கொண்டிருப்பவர்கள் வவுனியா மாவட்டத்தில் சிரமமான சூழ்நிலை நிலவிய வேளையில் பணி புரிந்து வந்தவர்கள்.

எனவே அவர்கள் திடீரென பணியில் இருந்து நிறுத்தப்பட்டமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் குறித்து பலதரப்பட்ட அதிகாரிகளுடன் உரையாடிய போதும் அதற்கான சரியான தீர்வு கிடைக்கவில்லை என்று அகில இலங்கை பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா கிளை இணைப்பாளர் தெரிவித்தார்.

எனவே இவ்வாறான போராட்டத்துக்கு தீர்வு கிடைக்காது போனால் வவுனியாவில் உள்ள அனைத்துத் தொழிலாளர் சங்கங்களும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட வேண்டி வரும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-421)

# சாரதிகளுக்கு அபராதம்

கிளிநொச்சி,ஜூன் 10
வாகனத்தை கவனவீனமாகச் செலுத்திய சாரதி ஒருவருக்கு 4,000 ரூபா அபராதத்தை செலுத்துமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, பஸ்ஸின் மிதி பலகையில் கூடுதலான பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் சாரதிக்கு 1,500ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பளைப்பகுதியில் வாகனம் ஒன் றில் கூடுதலான பயணிகளை ஏற்றிச் சென்ற சாரதியொருவ ருக்கும் 1,500 ரூபா அபராதம் செலுத்துமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-18)

# நீண்ட காலமாக புனரமைப்பு இல்லாத வீதி

கிளிநொச்சி, ஜூன் 10
கிளிநொச்சி- இராமநாதபுரம் கிராமத்திலிருந்து தருமபுரம் கிராமம் செல்லும் வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கூறினர்.

இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மக்கள் பயணிப்பதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதி புனரமைக்கப்படாததால் வட்டக்கச்சி- இராமநாதபுரம் ஆகிய கிராம மக்கள் தருமபுரம் செல்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருவதாக பலர் உறுதியளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் சுட்டிக்காட்டினர்

இதேவேளை- புதுக்காடு, அழகாபுரி கிராமங்களின் உள் வீதிகளும் புனரமைக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-18)

# அபிவிருத்தி குறித்து துணுக்காயில் ஆய்வு

துணுக்காய், ஜூன் 10
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் 11 கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன என்று துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார்.

கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் , தென்னியங்குளம் ஆகிய கிராமங்களின் உள்ளக வீதிகள் புனரமைப்பு, முன்பள்ளிகள், பொது மண்டபங்கள் அமைப்பது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் 8 கிலோமீற்றர் தூர உள்ளக வீதிகள் உருவாக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-18)



கிளிநொச்சி அரச பொது செயலகத்துக்கு முன்பாக, கரைச்சி பிரதேச சபைக்கு அருகில் உள்ள வாய்க்காலில் கழிவு தண்ணீர் தேங்கியுள்ளதைக் காணலாம். (ச-18)

# சுவாசத் தொற்றுக்கு உள்ளாகும் மாணவர்

## பெற்றோர் கவலை

*பூநகரி, ஜூன் 10*
*பூநகரி, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய பகுதிகளின் பாடசாலை மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக கிளிநொச்சி நகரத்துக்கு வருகை தந்த பின்னர் சுவாசத்தொற்றுநோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.*

*அதனால் மாணவர்கள் இரண்டு நாள்களுக்கு மேல் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாது சிரமமுற நேர்வதாக என்று பெற்றோர் தெரிவித்தனர்.*

*பஸ்களில் பயணிக்கும்போது கிரவல் வீதியில் மேற்கிளம்பும் தூசியை சுவாசிக்கும் போது மாணவர்கள் விளையாட்டு. கலை நிகழ்வுகளில் உற்சாகத்துடன் கலந்து கொள்ளமுடியாத நிலை ஏற்படுகிறது என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.*

*கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய கிராமங்களின் வீதிகள் 30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் குன்றும்குழியுமாகக் காணப்படுகின்றன. அதனால் மாணவர்கள் குறித்த வீதியால் பயணிக்கும் போது தூசியை சுவாசிப்பதாலும் நோய்கள் ஏற்படுகின்றன என்று பெற்றோர் குறிப்பிட்டனர்.*

*எனவே அக்கராயனில் இருந்து வேரவில் வரையான வீதி புனரமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)*

# குளத்தை விரைவில் புனரமைத்து தாருங்கள்

## விவசாயிகள் வேண்டுகோள்

கிளிநொச்சி,ஜூன் 10
அக்கராயன்குளம் துப்புரவு செய்யப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


2010 ஆம் ஆண்டு ஜப்பான் அரசின் 350 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் இந்தக் குளம் புனரமைக்கப்பட்டது.

எனினும் இந்தக் குளத்தின் அணைக்கட்டு தற்போது சேதமடைந்துள்ளது.

எனவே இந்தக் குளத்தைப் புனரமைத்துத் தர சம்பந்தப்பட்ட

“ குளத்தைப் புனரமைத்துத் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)



புனரமைப்பு இன்றிய குளம்

# மதுபானசாலையால் மாணவர்கள், ஆசிரியர்கள் அசௌகரியம்

## போதை தலைக்கேறிய நிலையில் வீதிகளில் உறக்கம்

வவுனியா,ஜூன் 10
வவுனியா, மருக்காரம்பளை பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலையால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று மாணவர்கள், ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த மதுபானசாலையில் மதுவை வாங்கி வீதியோரங்களில் வைத்து அருந்துவதால் பல்வேறு அசௌகரியங்களை



மதுவை அருந்திவிட்டு வீதியில் உறக்கம்

எதிர்நோக்குகின்றோம் என்று அவர்கள் கூறினர்.

மதுவை அருந்திவிட்டு தகாத வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்துவதால் பெண்கள் நடமாட முடியாதநிலை ஏற்பட்டுள்ளதுடன் மதுவை அருந்திவிட்டு வீதிகளில் விழுந்து கிடக்கின்றனர். அதனால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கூறுகின்றனர்.

மதுபானசாலையில் மதுவை வாங்கிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அங்கு வைத்து குடிப்பதற்கு அனுமதி இல்லை.

இந்த மதுபான சாலையில் மதுவை வாங்கிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அங்கு வைத்து குடிப்பதற்கு அனுமதி இல்லை என்று மக்கள் தெரிவித்தனர்.எனவே இது தொடர்பில் வவுனியா பொலிஸார் கவனம் செலுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# தொழில் முயற்சியாளரை ஊக்குவிக்கும் சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனம்




நாட்டின் மிகப்பெரும் சொக்லேட் மற்றும் பிஸ்கட் உற்பத்தி செய்யும் நிறுவனமான சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனம், ஸ்ரீலங்கா இளம் முயற்சியாளர்கள் (Y.ESL) உடன் இணைந்து பாடசாலை மாணவர்களின் முயற்சியாண்மை திறன்களை மேம்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட மாணவர் தொழில் முனைவோர் திட்டத்திற்கு அனுசரணை வழங்கியிருந்தது. இத்திட்டத்தில் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 300 பாடசாலை மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த திட்டமானது, சிலோன் பிஸ்கட்ஸ் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு முயற்சிகளின் ஓர் அங்கமாக, சிலோன் பிஸ்கட்ஸ் தலைவர் மேனக விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் இடம்பெற்றது. இதற்கமைய, தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு முயற்சியாண்மையை அறிமுகப்படுத்தும் வகையிலும், அவர்களின் கல்வி, தொழில் ஆர்வம் மற்றும் எதிர்கால தொழில் முயற்சிகளுக்கு தேவையான அறிவு மற்றும் திறனை வழங்கும் குறிக்கோளுடனும் செயலமர்வு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது.

கல்வி அமைச்சின் அங்கீகாரத்தை பெற்ற இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் தங்கள் முயற்சியாண்மை திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், தங்களுக்கு சொந்தமான நிறுவனம் மற்றும் சந்தையில் புதிய உற்பத்தியை அறிமுகம் செய்வதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

'சிலோன் பிஸ்கட்ஸ் நிறுவனத்தினரான நாம், எமது அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றும் புதிய தொழில் வாய்ப்புக்களை ஆராய்ந்து இளைஞர்களுக்கு நிபுணத்துவ ரீதியில் ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம். உள்நாட்டு சமூகத்திற்கு சாதகமான பங்களிப்பை வழங்கக்கூடிய இளைஞர்களுக்கு கல்வி மற்றும் அதிகாரம் வழங்கும் செயற்பாடுகளில் முதலீடு செய்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றோம். ஸ்ரீலங்கா இளம் முயற்சியாளர்கள் உடனான எமது தொடர்பு இம் முயற்சிகளின் ஓர் அங்க மாகும்' என சிலோன் பிஸ்கட்ஸ் குழுமத்தின் விற்பனை மற்றும் சந்தைப் படுத்தல் பிரிவின் தலைவரும், பணிப்பாளருமான நந்தன விக்ரமகே தெரிவித்தார்.

இதன் போது கணக்குகளை மேற்கொள்ளும் விதம், எவ்வாறு நிறுவனமொன்றைத் தொடங்குவது, பதிவு செய்தல் மற்றும் பொருத்தமான வணிகத்தை எவ்வாறு தெரிவு செய்வது என்பது தொடர்பில் மாணவர்களுக்கு அறிவூட்டப்பட்டது. இந்த செயலமர்வின் பின்னர், அவர்கள் பொருத்தமான நிறுவனத்தை பதிவு செய்தல், சந்தைப்படுத்தல் பணிப்பாளர், மனிதவள முகாமைத்துவம், நிதி, பங்கு வெளியீடு, கூட்டாண்மை உறவுகள் உள்ளிட்ட நிர்வாகக் குழுவினரை அமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஸ்ரீலங்கா இளம் முயற்சியாளர்கள் அமைப்பின் தலைவர் பட்ரிக் அமரசிங்க கருத்து வெளியிடுகையில்: 'இந்தத் திட்டத்தை உலகளாவிய நெறிமுறைக்கமைய ஏற்பாடு செய்தோம். வேலை வாய்ப்புக்களை பாதுகாக்கும் திறனுடன் இளைஞர்களை உருவாக்குவது மாத்திரமன்றி, உற்பத்தித்திறன் மிக்க இளைஞர்களை உருவாக்குவதும் எமது அடிப்படைக் குறிக்கோள் ஆகும்' – என்றார்.

இத்தகைய திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த வலிமையான அனுசரணையாளர் ஒருவர் தேவைப்பட்டார். இத் திட்டத்திற்கான சிலோன் பிஸ்கட்ஸின் பங்களிப்பு, இளம் முயற்சியாளர்களை உருவாக்க உத்வுவது மாத்திரமல்ல, முழு திட்டத்திலும் மாணவர்கள் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பை மேம்படுத்துவது ஆகும். இந்த மாணவர் முயற்சியாண்மை திட்டம் தொடர்பான சிலோன் பிஸ்கட்ஸின் அர்ப்பணிப்பு தொடர்பில் நான் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், ஏனைய கூட்டாண்மை நிறுவனங்களுக்கு இது மிகச்சிறந்த முன்னுதாரணமாகும்' என மேலும் தெரிவித்தார்.

இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், சிலோன் பிஸ்கட்ஸ் ஆனது தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் இத் திட்டம் தொடர்பில் விழிப்புணர்வு மற்றும் கல்வியூட்டும் வகையில் செயலமர்வு ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது.

சிலோன் பிஸ்கட்ஸ் தலைமைக்காரியாலயத்திற்கு அண்மையில் மாணவர்கள் வருகை தந்து தங்கள் வேலை பெறுபேறுகளை வழங்கினர். இதன்போது சிலோன் பிஸ்கட்ஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் பட்டய நிறுவகம், கணக்காளர்கள் பட்டய நிறுவகம் மற்றும் மத்திய வங்கி போன்றவற்றின் சுயாதீன மதிப்பீட்டாளர்களை உள்ளடக்கிய மதிப்பீட்டுக் குழுவினர் சர்வதேச வழிகாட்டுதல்களின் அடிப்படையில் அணிகளை மதிப்பீடு செய்தனர். மாணவர்கள் ஈடுபடும் துணிகர முயற்சிகள் மற்றும் உற்பத்திகளுள் ஆபரணங்கள், கைவினைப் பொருள்கள், சித்திரம், சுவரோவியங்கள், உணவுப் பொருள்கள், வாழ்த்து அட்டைகள் மற்றும் மாதிரி பதில் ஆவணங்கள் போன்றவை உள்ளடங்குகின்றன. (த)

# சுகாதாரப் பரிசோதனையின் முக்கியத்துவத்தை ஊக்குவிக்கும் செலிங்கோ ஹெல்த் கெயார்

வரையறுக்கப்பட்ட செலிங்கோ ஹெல்த் கெயார் சேர்விஸஸ் நிறுவனம் தனது ஐந்தாவது சுகாதாரப் பரிசோதனை மாதத்தை ஜுன் மாதம் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை சுகாதாரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் வருடாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு திட்டமே இதுவாகும். குறைந்த செலவில் மூன்று வகையான கட்டணத் திட்டம் இதற்கென அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஊக்குவிப்புத் திட்டத்துக்கு ஆதரவாக சுகாதாரப் பரிசோதனைகள் மருத்துவ ஆலோசனைகள் என்பன உள்ளடங்கலாக ஜுன் மாதம் முழுவதும் அமுலில் இருக்கும் வகையில் இந்தக் கட்டணத் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

முதலாவது கட்டணத் திட்டம் முழு அளவிலான உடல் பரிசோதனை, உடல் அளவு சுட்டெண், கண்பார்வை, உணவு உண்ணா நிலையில் இரத்தப் பரிசோதனை, இரத்தக் கணிப்பீடு, முழு அளவிலான சிறுநீரக பரிசோதனை, இரத்தக் கொழுப்பு பரிசோதனை, ஈ.சி.ஜி., இரத்த வகையின் பிரிவு, ஆர்.எச் என்பனவற்றை உள்ளடக்கிய தாகும். இதற்கான கட்டணம் 2,500 ரூபாவாகும்;.




ஏனைய இரு கட்டணத் திட்டங்களும் மேலதிக பரிசோதனைகளை உள்ளடக்கியதாகும். அவற்றுக்கான கட்டணம் முறையே 4,500 ரூபா மற்றும் 6,000 ரூபாய்களாகும். ஈரல் தொடர்பான பரிசோதனை, இரத்தத்தில் யூரியா அளவு என்பனவற்றை அவை உள்ளடக்கியிருக்கும். இந்தக் கட்டண சேவைகளைப் பெற்றுக் கொள்ளும்நபர்களுக்குதங்களதுமருத்துவ அறிக்கைக் தொடர்பாக அங்குள்ள வைத்திய அதிகாரி ஒருவரை சந்தித்து அது பற்றி அவருடன் கலந்துரையாட மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும். மேற்கூறிய நிலையத்துடன்தொடர்புகொண்டு முன் கூட்டிய பதிவொன்றின் மூலம் இந்த சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். (த)




# நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் ஆய்வு விருது 2013

இலங்கையின் முதல்தர மூலிகை அழகுசாதன வியாபார நாமமான நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் பொருள்களை உற்பத்தி செய்கின்ற நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் இலங்கையர்களாலும் சாதிக்க முடியும் என்ற திடமான நம்பிக்கையுடன் தேசிய கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு அனுசரணைகளை வழங்குகின்ற ஒரு தேசிய நிறுவனமாகும். தேசிய ரீதியில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி, வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கையை மாற்றுவதே நேச்சர்ஸ் சீக்கரட்ஸின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது.

மூலிகை ஆய்வு நிலையத்தை தன்னகத்தே கொண்டுள்ள நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் நிறுவனம், அதற்கப்பால், உள்ளூர் விஞ்ஞானிகளை நாட்டுக்கு மிகவும் பயனளிக்கும் வகையிலான ஆய்வுகளில் ஈடுபடுத்தும் நோக்கில் வர்த்தகத்துறையில் சிறந்த, வியாபார ரீதியாக தேசிய தொழில் முயற்சியாளர்களால் சந்தைக்கு விநியோகிக்கக் கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படும் வகையிலான ஆய்வுகளை நிறைவுசெய்த பல்கலைக்கழக ஆய்வுக் குழுக்களுக்கு 250,000 ரூபா பெறுமதியான ரொக்கப் பரிசு மற்றும் நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் ஆய்வு விருது ஆகியவற்றை வருடாந்தம் வழங்குவதென 2010 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது.

நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சமந்த குமாரசிங்க பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான்பீட பட்டதாரியாகையால் இந்த விருதினை அந்த விஞ்ஞான பீடத்தில் முன்னெடுக்கப்படும் ஆய்வுகளுக்காக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்கான நேர்ச்சர்ஸ் சீக்ரட்ஸ் ஆய்வு விருது இம்முறை நீரில் நனையாத, அழுக்குகள் தங்காத, புத்தி சாதுரியமான கையுறை உற்பத்தி தொடர்பில், உலகில் முதல்தடவையாக நடத்தப்பட்ட ஆய்வுக்காக இவ்விருது வழங்கப்பட்டது. இந்த ஆய்வானது பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் நெனோ தொழில்நுட்பப் பிரிவின் பேராசிரியர் காமினி ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது. நேர்ச்சர்ஸ் சீக்ரட்ஸ் ஆய்வு விருது வழங்கும் நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்ன உட்பட பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சமந்த குமாரசிங்க மற்றும் அந்நிறுவன அதிகாரிகள் உட்பட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். 2012 ஆம் ஆண்டு இந்த விருதானது பளுதூக்கல் விளையாட்டின்போது இடம்பெறும் தவறுகளை அடையாளம் காணக் கூடிய, குறைந்த செலவில் தயாரிக்கக்கூடிய நவீன தொழில்நுட்ப வழிமுறையொன்றை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கு வழங்கப்பட்டது.

நேர்ச்சர்ஸ் சீக்ரட்ஸ் ஆய்வு விருது பெறுவதற்காக ஆய்வுக் குழுவொன்றை தெரிவுசெய்யும் நடவடிக்கைகளில் நேச்சர்ஸ் சீக்ரட்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் எந்தவித தலையீடும் மேற்கொள்வதில்லை என்பதுடன், பல்கலைக்கழக நிர்வாகக் குழுவினால் பின்பற்றப்படும் வழிமுறைகளின் பிரகாரமே தெரிவு மேற்கொள்ளப்படுகின்றது. (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சாட்சிகளுக்கு பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றுக

நாட்டு மக்கள் மற்றும் அதிகாரத் தரப்பினரை மட்டுமல்ல உலக நாடுகளின் கவனத்தையும் கூட ஈர்த்துள்ள மிக முக்கிய விசாரணையொன்று காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் இப்பொழுது நடைபெற்றுவரும் விசாரணைக்கு வந்துள்ள முறைப்பாடுகளில் பெரும்பாலானவையும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. கல்முனை அல்லது காத்தான்குடி பகுதியில் ஒரு முறைப்பாடு கூட பாதுகாப்புப் படையினருக்கு எதிராகத் தெரிவிக்கப்படவில்லை என்று ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிவான் மாக்ஸ்வெல் பரணகம தெரிவித்திருக்கிறார். ஆணைக்குழு நியமிக்கப்பட்ட 2013 ஒகஸ்ட் மாதம் முதற்கொண்டு காணாமற் போனோர் தொடர்பாக 18.590 முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன என்றும் அவைகளில் 5.000 முறைப்பாடுகள் பாதுகாப்புப் படையினரின் உறவினர்களிடமிருந்து கிடைத்திருக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாச ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதொரு கருத்தில் சாட்சியமளிப்பவர்கள் எவராவது தமது உயிருக்கு அச்சுறுத் தல் இருக்குமென கருதுவாரானால் இரகசியமாக சாட்சிய மளிப்பதற்கு வசதி செய்து கொடுக்க முடியும் என்று தெரிவித் துள்ளார்.

இரகசியமாகவோ பகிரங்கமாகவோ ஒருவர் சாட்சியமளிக்கிறார் என்றால் அவர் பற்றிய தகவலை அல்லது அடையாளத்தைக் கண்டுகொள்வது தேவைப்படுபவர்களுக்கு அவ்வளவு கஷ்டமாக இருக்கமாட்டாது. அவர் கூறிய இரகசியம் மட்டுமே பாதுகாப்பாக இருக்க முடியும்.

இந்த ஆணைக்குழு மட்டுமல்ல வேறு ஆணைக்குழுக்களாக இருந்தாலென்ன, நீதிமன்றங்களில் நிலுவையில் கிடக்கும் குற்றவியல் வழக்குகளானாலென்ன, இனி வரப் போகின்ற சர்வதேச விசாரணைகளானாலென்ன சாட்சியம் அளிப்பவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சட்டபூர்வ மான பாதுகாப்பு இப்போது இல்லை. பல சந்தர்ப்பங்களிலும் சாட்சியம் அளிக்கக்கூடியவர்கள் பின்னடிப்பதற்கும், பாதிக் கப்பட்டவர்களே எதிர்த்தரப்புக்கு சாதகமாக மாறி வாக்கு மூலம் அளிப்பதற்கும் இந்த விதமான சட்டப் பாதுகாப்பு இன்மையே காரணம்.

கடந்த வருடம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்கான குழுவின் பரிந்துரைக்கு அமைவாக குற்றச்செயல்களின்போது பாதிக்கப்படுபவர்களுக்கும், சம்பவத்தைக் கண்டு சாட்சியமளிக்க முன் வருபவர்களுக் கும் பாதுகாப்பு அளிப்பதற்கான சட்ட முன் வரைவொன்று அமைச் சரவையால் அங்கீகரிக்கப்பட்டதாக செய்தி வந்தி ருந்தது. அதே போல் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் , சாட்சியமளிப்பவர்களுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிப்பதற் கான சட்ட முன்வரைவொன்று நீதி அமைச்சரால் கடந்த ஒக் ரோபரில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் அமைச் சரவையின் உப குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இந்தச் சட்டத்தின் மூலம் குற்றத்தின்போது பாதிக்கப்பட்டவருக்கும், அது குறித்த நேரடி சாட்சிகளுக்கும் சட்ட மூலமான பாதுகாப்புக்கு வழி பிறக்கும் என்று எதிர்பார்க் கப்புட்டது. ஆனால் அந்தச் சட்ட முன்வரைவுக்கு என்ன நேர்ந்தது என்பது இன்னமும் தெரியவரவில்லை.

எல்.எல்.ஆர்.சி.விசாரணைகளின் போதும் கூட பலர் அச்சம் காரணமாக இரகசியமாக சாட்சியமளித்திருந்தனர். அந்த விசாரணை இடம்பெற்ற சமயங்களில் புலனாய்வுத் துறையினர் பகிரங்கமாக நிழல்படங்கள் எடுத்தனர். அது சாட்சிகளை அச்சுறுத்துவதாக இருந்தது என்று ஐ.நா.நிபுணர் குழுவும் தன் அறிக்கையில் தெரிவித்திருந்தது.

அதுமட்டுமல்ல போரின் இறுதிக்கட்ட நிகழ்வுகளின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சாட்சியமளிக்க விரும்புகிறவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த மாதிரியான சட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று பல தடவைகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

எனவே இந்தக் கடைசி நேரத்திலாவது கிடப்பில் போடப்பட்டுள்ள சாட்சிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் சட்ட மூலத்தை அரசு நிறைவேற்ற முன்வரவேண்டும். எந்த விசாரணை வந்தாலும் அஞ்சப் போவதில்லையென்று வீறாப்புப் பேசும் அரசு, இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றித் தனது தைரியத்தை வெளிப்படுத்த வேண்டும். சாட்சியமளிப்பவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க இதன்மூலம் அரசு முன்வருமா?

# தர்ம சங்கடத்தில் இலங்கை அரசு

## மாற்றங்கள் ஏற்படும் அறிகுறிகள்

சேரலாதன்

இலங்கையின் அரசியல் களத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் அதிகமாகவே தென்படுகின்றன. சர்வ அதிகாரங்களையும் கொண்ட ஜனாதி பதிக்கு எதிராக கருத்துக்களை வெளி யிடும் அளவுக்கு ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகளும் தோன்றியுள்ளன. நிறைவேற்று அதிகாரம், குடும்ப ஆட்சி என்பன ஏற்படுத்திய வெறுப்பும், கோபமும் இவ்வாறான முரண்பாடுகளுக்கு வழிகோலியுள்ளன என்று துணிந்து கூறலாம்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது இறுதிக் காலத்தில் தாமொரு சர்வ அதிகாரங்களும் கொண்ட நாட்டின் தலைவராக விளங்க வேண்டுமென்ற பேராசைக்குள் தள்ளப்பட்டதன் விளைவையே இன்று இந்த நாடு அனுபவித்து வருகின்றது. எமது அயல் நாடான இந்தியா இன்றும்கூட நாடாளுமன்றத்தின் ஊடான அதிகாரங்களையே கொண்டிருக்கிறது. ஜனாதிபதியொருவர் அங்கு பதவியில் அமர்ந்திருக்கின்றபோதிலும் நிறை வேற்று அதிகாரங்கள் எவையும் அவருக்கு வழாங்கப்படவில்லை.

கடந்த 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப்போரில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் பெரும்பான்மையின மக்களின் மனங்களில் போர் வெற்றி என்பதே நிறைந்து காணப்பட்டது. சிறுபான்மை இனங்கள் தமது அடிமைகள் என்பதாகவும் அவர்கள் கருதினர். இதற்கேற்றவாறு பெரும்பான்மை அரசியல் தலைவர்களின் இனவாத பரப்புரைகளும் அமைந்திருந்தன. ஆனால் ஐந்து வருடங்கள் கழிந்துள்ள இன்றைய நிலையில் போர்வெற்றி என்ற மாயை அவர்களின் மனங்களிலிருந்து மெல்ல மெல்ல மறைந்து போக ஏனைய விடயங்களையும் ஆராயத் தொடங்கிவிட்டனர்.

இலங்கையைப் பொறுத்தவரை பாதிக்கப்பட்ட குடிமகன் ஒருவன் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நியாயம் பெறுவதென்பது குதி



ரைக் கொம்பாகவே மாறியுள்ளது. இதற்கு நீதித் துறையிலும் அரசியல் தலையீடுகள் உள்ளமை முக்கிய காரணமாகக் கூறப்படுகின்றது.

மேலும் தனிப்பட்ட குடும்பம் ஒன்று நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் நிலையும் இங்கு காணப்படுகின்றது. இதுவும் ஏனைய மக்களிடத்தில் கடும் சீற்றத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளன. நீண்ட காலம் எவரேனும் ஒருவர் ஆட்சியதிகாரத்தில் இருக்கும்போது இயல்பாகவே சர்வாதிகாரம் தலைதூக்குவது வழக்கமாகும். இந்த நிலை இங்கும் உருவாகிவிடுமோ என்ற அச்சமும் மக்கள் மனதில் எழுந்துள்ளதைக் காண முடிகின்றது.


புதிய இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியில் அமர்ந்த பின்னர் இலங்கையில் கிடப்பில் போடப்பட்ட பல விடயங்கள் தூசு தட்டப்பட்டு அவை தொடர்பாக அவசர அவசரமாக நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பூர் மின் உற்பத்தி நிலையம், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் என்பன இவற்றுள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. அதிலும் 13 ஆவது திருத்தம் திடீரென வேகம் பெற்று நகர்த்தப்படுவதைக் காணமுடிகின்றது. காணி, பொலிஸ் அதிகாரம் ஆகிய வற்றை உச்சரிப்பதையே பாவமென நினைத்தவர்கள் தற்போது அவை தொடர்பாக வாயைத் திறந்து பேசுவ தற்கு முற்பட்டுள்ளனர். இவற்றை யெல்லாம் மாற்றத்தின் அறிகுறிகள் என்றுதான் கூற வேண்டும்.

இலங்கையொரு சிங்கள பௌத்த நாடு என அரசமைப்பில் கூறப்பட்டாலும் வேறு முக்கியமான தேசிய இனங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்கள்தான் அவையாகும். ஆனால் இந்த இரண்டு இனங்களையும் சேர்ந்த மக்கள் நிம்மதியற்ற சூழ்நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் நிம் மதியைக் குலைக்கும் செயற்பாடுகள் அவ்வப் போது அரங்கேற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் பெருமளவில் அரசின் ஆசீர்வா தத்துடன் பறிக்கப்படுவதால் அவர்கள் நிர்க்கதியான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

மாகாண சபைகளுக்கும் காணி அதிகாரம் வழங்கப் படாததால் இதனைத் தடுக்க முடியாததொரு இக்கட்டான சூழ்நிலை உருவாகியுள்ளது. 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் காணி அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுமாயின் காணி தொடர்பான சில நடவடிக்கைகளை அவற்றால் மேற் கொள்ளமுடியும்.

தற்போது மாகாண சபைகள் பொலிஸ் அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. இதனால் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிறைவேற்ற முடியாத அவலநிலை அவற்றுக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வட மாகாணத்தைப் பொறுத்தவரை சமூகச் சீர்கேடுகள் முன்னர் எப்போதுமே இல்லாத அளவுக்குத் தலைவிரித்து ஆடுவதைக் காண முடிகின்றது. பொலிஸார் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால் மாகாண சபையால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தற்போது பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றமை மாகாண மட்டத்தில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பேணுவதற்கு உதவுமென நம்பலாம்.



இதேவேளை ஜனாதிபதியின் எல்லை கடந்த நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டுமென முக்கிய அமைச்சர்கள் உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த பலர் விரும்புவதாகத் தெரிய வருகின்றது. இந்த நிறைவேற்று அதிகாரங்கள் அவர்களை வெறுப்படையச் செய்துள்ளமை இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது. இவர்களின் விருப்பம் நிராகரிக்கப்படுமாயின் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அது ஆளும் கட்சிக்குப் பாதகமான விளைவுகளையே தோற்றுவிக்கும் என்பதில் ஐயமே இல்லை.

இந்த நிலையில் இலங்கையில் இடம் பெற்ற இறுதிப்போரின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் கட்டத்தை எட்டியுள்ளன. ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை தாம் பதவி விலகுவதற்கு முன்னர் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

இதில் ஒரு திருப்பமாக அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குப் பாடுபட்ட நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் தாமும் போர்க் குற்றம் தொடர்பான விசாரணைகளின் போது சாட்சியமளிக்கப்போவதாகப் பகிரங்கமாக அறிவித்துள்ளார். குறிப்பாக வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாகத் தாம் அறிந்தவற்றை - நடந்தவற்றை சாட்சியத்தின்போது தெரிவிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இலங்கை அரசுத் தரப்பினருக்கு இது நிச்சயம் கலக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அரசின் முக்கியபுள்ளிகள் சிக்கல்களை எதிர்நோக்கும் நிலை தவிர்க்கமுடியாதது.

அரசால் மறைக்கப்பட்ட பல விடயங்கள் அம்பலத்துக்கு வரப்போகின்றன. இதனால் அரசுக்கு தர்மசங்கடம்தான்.

இந்த நிலையில் ஆளும் தரப்பினரின் அரசியல் ஸ்திரத்தில் தளம்பல் நிலையொன்று ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஏற்கெனவே அரசின் பங்காளிகளான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, டியூகுணசேகர, வாசுதேவ நாணயக்கார உட்படப் பலர் அரசின் செயற்பாடுகளுக்குப் பகிரங்கமாகவே தமது அதிருப்தியைத் தெரிவித்து வருகின்றனர். முக்கிய அமைச்சர்கள் சிலர் கூட வெறுப்பின் உச்சியில் நிற்பதாகத் தகவல்கள் தெரி விக்கின்றன.

இந்த நிலையில் தென்பகுதி அரசியல் களத்தில் அதிரடி மாற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. மக்கள் நீதியையும், நியாயத்தையும் நிலைநிறுத்தக்கூடிய பாகுபாடு அற்றதும் ஊழல் அற்றதுமான ஆட்சியொன்றையே விரும்புவார்கள். போர் வெற்றி என்பது மெல்ல மெல்ல மறக்கப்பட்டுவரும் விடயமாக மாறிவரும் இந்த வேளையில் அரசின் குறைபாடுகள் பூதாகரமாக உருவெடுத்து மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான மனநிலையை ஏற்படுத்தப் போகின்றது. எதிர்வரும் நாள்கள் மாற்றங்களுக்கான நாள்களாகவே அமையப் போகின்றன.




# விவசாய நிலங்களில் இரசாயனங்களால் ஏற்படும் பாதகங்கள்

■ குமாரசாமி மதுசுதன்,
விவசாய பீடம், 4 ஆம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

பச்சைக் காடுகளுக்குள் விவசாயம் செய்து பசுமையாய் வாழ்ந்ததுதான் எமது முன்னைய சமுதாயம். தற்போது நாமெல்லாம் நஞ்சு கலந்த நிலத்தில் விளையும் உணவு வகைகளை உண்டும், நஞ்சு கலந்த நீரைப் பருகியும் வாழ்வது யாருக்குத் தெரியும்? பூமித் தாய்க்கும் பூப்போட்டுப் பூசித்தோம் அப்போது நாம். அவளும் பூத்துக் குலுங்கியே இருந்தாள். இப்போது விவசாயத்துக்கென இரசாயன வளமாக்கிகளை அதிகளவு அள்ளித் தெளித்து நஞ்சுச் சாயம் கலந்த உணவுகளை உற்பத்தியாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

சேதனப் பசளைகளான விலங்குக் கழிவுகள், குப்பை கூளங்களைத்தான் பயன்படுத்தி முன்னர் மண்ணை வளமாக்கி வந்தோம். தற்போது அதிக விளைச்சலுக்காக அசேதன உரங்களைப் பயன்படுத்துவதனால் அதிக பாதக விளைவுகளை சந்திக்க வேண்டியுள்ளது. விளைச்சல் நிலங்களில் இரசாயனங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

1.இரசாயன மண் வளமாக்கிப் பாவனை.
2.பூச்சி பீடை கொல்லிப் பாவனை.
3.களைநாசினிகளின் பாவனை ஆகியனவே அவையாகும். மேற்கூறிய இரசாயனப் பாவனைகளினால் மண்ணில் அதிகளவு இரசாயனங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இவை காலப்போக்கில் மண்ணில் செறிவடைந்து மண்ணை நஞ்சாக்குவது மட்டுமல்



...து நிலத்தடி நீரையும் நஞ்சாக்குகின்றன.

**அதிக இரசாயனப் பாவனைகளினால் மண்ணில் பின்வரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன**

மண்ணின் இயற்கைக் கட்டமைப்பு மாறுபடும். மண் துணிக்கைகளுக்கிடையிலான இடைவெளிகளில் இரசாயனம் செறிந்து காணப்படும். மண்ணிலுள்ள பயன்தரு நுண்ணங்கிகள் அழிவடையும். மண் விவசாயத்துக்கு ஏற்றதல்லாத வகையில் காலப்போக்கில் மாற்றமடையும்.

இது மட்டுமல்லாது மண்ணில் கரைந்து செறிவடைந்த இரசாயனங்கள் மழைநீருடனோ அல்லது நீர்ப்பாசனத்துடனோ மண்ணினூடாகக் கரைந்து நிலத்தடி நீரை அடையும். இதனால் நிலத்தடி நீர் இரசாயன நீர்க் கலவையாக மாறிகுடிக்கும் தகைமையை இழக்கும். அத்துடன் விவசாய நிலங்களை அண்டிய நீர்நிலைகளிலும் இந்த இரசாயனங்கள் கரைந்து வழிந்தோடிக் கலப்பதால் அந்த நன்னீர் நிலைகள் நஞ்சாக்கமடைவதுடன் பல்வேறு சூழல் பாதிப்புக்களுக்கும் உள்ளாகும். பிரதானமாக நைத்திரேற்று, பொஸ்பேற்று இரசாயனங்கள் அடங்கிய உரப் பாவனை மற்றும் பூச்சிபீடை கொல்லிப் பாவனைகளினால் நன்னீர் நிலைகள் பெரும் பாதிப்பைச் சந்திக்கின்றன. இந்த விளைவுகளில் பிரதானமானதாக 'நற்போசனையாக்கம்'' காணப்படுகின்றது.

"நற்போசனையாக்கம்" எனப்படுவது நன்னீர் நிலைகளில் (ஆறுகள், குளங்கள், நதிகள், கிணறுகள்) நைத்திரேற்று, பொஸ்பேற்று சேர்வைகளின் செறிவு அதிகரிப்பதால் ஏற்படுவதாகும்.

நற்போசனையாக்கத்தினால் அல்கா மலர்தல், முதல் உற்பத்தி குறைவடைதல், நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் அளவு குறைவடைதல், உயிர் இரசாயன ஒட்சிசன் தேவை அதிகரித்தல், ஒட்சிசன் அளவு குறைவடைவதனால் பாதிப்பு ஏற்படல், நீர்நிலைகளிலுள்ள தாவரம், விலங்குகள் என்பன இறத்தல், நீர் நிலைகளுக்கு அண்மையில் துர்நாற்றம் வீசுதல் என்பன காணப்படுகின்றன.

நைதரசன் என்பது பயிர்களின் வளர்ச்சிக்கான முக்கிய போசனையாக அமைவதனால் நைதரசன் இரசாயன வளமாக்கியாகிய யூரியாப் பாவனை விவசாயிகளிடையே அதிகளவில் காணப்படுகின்றது.

மேலும் பொஸ்பேற்றுப் பாவனையும் குறைக்கப்பட வேண்டும்.

**விவசாய நிலங்களில் இருந்து நன்னீர் நிலைகளினுள் இரசாயனங்கள் வழிந்தோடுவதைத் தடுப்பதற்காக**

சிறந்த வயல் வரம்புகளையும், அணைக் கட்டுகளையும் பேணுதல் வேண்டும். எனினும் நிலத்தினூடாகக் கரைந்து நிலத்தடி நீரை இரசாயுனங்கள் அடைவதைத் தடுக்க முடியாது.

இவ்வாறான நஞ்சாக்கம் பெற்ற நீரை பருகுவதனால் மருத்துவப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

அதைவிட தற்போதைய புள்ளி விவரங்களின் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் புற்று நோயினால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு செல்வதற்கும் இந்த இரசாயனங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்களே முக்கிய காரணமாகக் காணப்படுகின்றன.

இலங்கையிலேயே மரக்கறி வகைகளுக்கான இரசாயனப் பாவனையில் யாழ்.குடாநாடு முதலிடம் வகிக்கின்றது. மரக்கறி என்ற போர்வைக்குள் யாழ்.குடாநாட்டின் சந்தைகளில் இரசாயனங்கள் விற்பனையாகின்றன. ஒவ்வொரு குடிமகனும் மறைமுகமாகத் தினமும் நஞ்சையே உணவாக அருந்திக் கொண்டிருக்கின்றான். இவையெல்லாம் உடலில் செறிவடையும் போது எவ்வாறான விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்று நினைத்துப்பாருங்கள்.

யாழ்.குடாவில் நாமெல்லாம் நிரந்தரமாய் வாழ்வதற்கு பிரதான காரணியாக இங்கு காணப்படும் நிலத்தடி நன்னீரே காரணமாகும். நிலத்தடி நீர் நஞ்சாகி பாவனையற்றதாகும் போது குடிபெயர வேண்டிய நிலைமை கூட ஏற்படும்.

விவசாய நிலங்களில் அதிக இரசாயனப் பாவனைகளினால் நிலம் இரசாயனத்தில் தோய்ந்தும், நன்னீர்நிலைகள் நஞ்சாக்கம் அடைந்தும் பயிர் செய்ய முடியாமலும், நீர் அருந்த முடியாமலும் போய்விடும் காலம் மிகத் தொலைவில் இல்லை.

சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி மண்ணை வளமாக்கல் உ+ம் (மாட்டுச்சாணம், தாவரக் கழிவுகள்), இயற்கை பூச்சி, பீடைக் கொல்லிகளைப் பயன்படுத்தல் (உதாரணம்: வேப்பெண்ணெய்), நைதரசன் அசேதன உரப் பாவனைகளைக் குறைத்தல், சேதன விவசாயத்தை ஊக்குவித்தல், விவசாயிகளுக் கிடையே அசேதன உரப் பாவனையால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல், இரசாயனப் பயன் பாட்டை குறைக்கும் சட்ட அமுலாக்கங்களை கொண்டுவருதல், அதிக செறிவடையும், பிரிகையடையாத இரசாயன வளமாக்கி, பூச்சி, பீடை கொல்லிகளைத் தடை செய்தல் இவ்வாறான பலவழிமுறைகளை விவசாயிகள் பின்பற்றுவதனால் நாம் பிறந்த மண்ணில் எமது வழித்தோன்றல்கள் மூலமாக நிலக்குழந்தையல்லாத, புற்று நோயல்லாத உடல்நலமுள்ள, பட்டினியற்ற சந்ததியொன்றை விட்டுச் செல்லலாம்.

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை சுற்றுச் சூழல் விழிப்புணர்வுவாரம்வடமாகாணத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

விவசாயம் செய்து பசுமையாய் வாழ்ந்ததுதான் எமது முன்னைய சமுதாயம். தற்போது நாமெல்லாம் நஞ்சு கலந்த நிலத்தில் விளையும் உணவு வகைகளை உண்டும், நஞ்சு கலந்த நீரைப் பருகியும் வாழ்வது யாருக்குத் தெரியும்? பூமித் தாய்க்கும் பூப்போட்டுப் பூசித்தோம் அப்போது நாம். அவளும் பூத்துக் குலுங்கியே இருந்தாள். இப்போது விவசாயத்துக்கென இரசாயன வளமாக்கிகளை அதிகளவு அள்ளித் தெளித்து நஞ்சுச் சாயம் கலந்த உணவுகளை உற்பத்தியாக்கிக் கொண்டிருக்கின்றோம்.





# அழகிரியைச் சமாதானப்படுத்த கருணாநிதியின் தூதராக ரஜனி

## சந்திப்பின் பின்னணி அதுதானாம்

சென்னை, ஜூன் 10

அழகிரியைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் தான் ரஜனிகாந்த், தி.மு.க தலைவர் கருணாநிதியை சந்தித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தி.மு.க தலைவர் கருணாநிதியை, அவரது கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் நடிகர் ரஜினி திடீரெனச் சந்தித்து பேசியுள்ளார்.


பின்னர் நிருபர்களிடம் பேசிய அவர், பிறந்த நாள் வாழ்த்து தெரிவிப்பதற்காகக் கருணாநிதியைச் சந்தித்தேன் என்று கூறியுள்ளார்.

ஆனால் கட்சி தரப்பில், இந்தச் சந்திப்பு குறித்து வேறு ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

கருணாநிதிக்குப் பிறந்த நாள் வாழ்த்தை, தொலைபேசி மூலம் ரஜனி தெரிவித்து விட்ட சூழ்நிலையில்நேரிலும்வாழ்த்து சொல்லியிருப்பதன், பின்னணியில் குடும்ப விவகாரங்கள் இருக்கிறது என்பதுதான் தற்போதைய செய்தி.

சமீபகாலமாகக்கருணாநிதிகுடும்பத்தில் ரஜனி மிக நெருக்கமானவராக இருக்கிறார். ரஜனிக்கு எந்த நெருக்கடி என்றாலும், அதைத் தீர்ப்பதற்கான உதவிகளைக் கருணாநிதி செய்திருக்கிறார்.

அந்த வகையில் கருணாநிதி குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தீர்க்க, ரஜனி முன் வந்திருக்கிறார்.



ரஜினி காந்த், கருணாநிதி

அழகிரிவிவகாரம் விஸ்வரூபம் எடுத்திருந்த நிலையில், தேர்தலுக்கு முன்னாலேயே ஸ்டாலின் தரப்பிலிருந்து சிலர், ரஜனியைச் சந்தித்துப் பேசினர்.

அழகிரியிடம் தேர்தல் வரையில் அமைதியாக இருக்கச்சொல்லுமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால், அப்போது ரஜனியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

தேர்தலில் தி.மு.க படுதோல்வி அடைந்திருக்கும் சூழ்நிலையில், அழகிரி மீண்டும் தன் ஆட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்.

அழகிரி பேரவை என்ற பெயரில் புது அமைப்பு ஒன்றை, தமிழகம் முழுவதும் ஏற்படுத்தி, தலைமைக்கும் ஸ்டாலினுக்கும் குடைச்சல் கொடுக்கவும் அழகிரி ஆதரவாளர்கள் தயாராகி விட்டனர்.

அதனால், அழகிரி விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க, கருணாநிதி, அவரது மகள் செல்வி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் விரும்புகின்றனர்.

ரஜனியின் தீவிர ரசிகராக இருக்கும் அழகிரி, அவர் மீது நல்ல மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பவர்.

அதனால், அவர் மூலமாக அழகிரியை அமைதிப்படுத்தும் வேலையில் கருணாநிதி குடும்பத்தினர் இறங்கி உள்ளனர்.

மேலும் 2016 சட்டசபைத் தேர்தல் முடியும் வரை அழகிரி கட்சிக்கு எதிராக வாய் திறக்காமல் அமைதியாக இருக்க வேண்டும். தேவையானால், அமெரிக்காவுக்குக்கூடச்சென்று விடவேண்டும்.

இந்தத் தகவலை ரஜனி மூலமாக அழகிரிக்குத் தெரிவிக்க கருணாநிதி விரும்பினார்.

இதையடுத்து, அழகிரி விவகாரம் சுமுகமாக முடியும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த)

### பா.ஜ.க. தலைவர் சுட்டுக் கொலை: 4 பேர் கைது

புதுடில்லி, ஜூன் 10

உத்திர பிரதேசத்தின் நொய்டாவில் பா.ஜ.க தலைவர் கொலை வழக்கில் நான்கு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாரதீய ஜனதா கட்சியின் தாத்ரி நகர் பஞ்சாயத்து தலைவர் கீதா பண்டித், இவரது கணவர் விஜய் பண்டித்.

இவர் நேற்று முன் தினம் இரவு பிரம்மபுரி பகுதியில் உள்ள தனது சகோதரரின் கடையில் இருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அவரை 2 மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத 4 நபர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்நிலையில், விஜய் பண்டித் கொலை வழக்கில், நான்கு பேரைக் கைது செய்த பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, குற்றவாளிகளைக் கைது செய்யக்கோரி நொய்டாவில் நடந்த ஆர்பாட்டத்தில் வன்முறை வெடித்தால், அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த)

### பெண்கள் மீதான வன்முறைகள் அகலவேண்டும்

புதுடில்லி, ஜூன் 10

பெண்களுக்கு எதிரான வன்முறை அறவே அகற்றப்பட வேண்டும் என்று இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தனது நாடாளுமன்ற உரையில் வலியுறுத்தியுள்ளார்.

சமீப காலங்களில் பெண்களுக்கு எதிராக மிகக் கொடுரமான வன்முறைகள் நிகழ்ந்து வருகின்றன. எனவே இதனை அறவே அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இது குறித்து கொள்கைகளை வடிவமைத்து அதனை அமுல் படுத்த குற்ற நீதி அமைப்பு வலுப்படுத்தப்படவேண்டும். -என்றார் பிரணாப் முகர்ஜி. (கு)



புதுடில்லியில் கடும் வெப்பமான காலநிலை நிலவுகிறது. வெப்பம் காரணமாக அன்றாட அலுவல்களைக்கூடக் கவனிக்க முடியாத நிலையில் மக்கள் அந்தரிக்கின்றனர். மாலையானதும் அவர்கள் வீடுகளுக்கு வெளியே வந்து விடுகின்றனர். புதுடில்லியில் புறநகர்ப் பகுதியொன்றில் ஓட்டோச் சாரதிகள், தொழிலாளர்கள் வீதியோரத்தில் கட்டில்களைப் போட்டுத் தூங்குகின்றனர். (த)

### சென்னை விமான நிலையத்துக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

சென்னை, ஜூன் 10

கராச்சி விமான நிலையத் தாக்குதலை அடுத்து சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அங்கு 5 அடுக்குப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. விமான நிலையத்தின் உள்ளே கழுகுப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் பறக்கும் படையினர் விமான நிலையத்தின் வெளியே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை விமான நிலையத்தைத் தீவிரவாதிகள் தாக்கக்கூடும் என்ற மத்திய உளவு அமைப்பின் எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த)

## தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு உடன் தேவை

### மத்திய அரசிடம் கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஜூன் 10

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைச் சிறை பிடித்துச் செல்வது என்பது தொடர்கதையாக நீண்டு கொண்டே போவதால் தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண உடனடியாக மத்திய அரசு முன்வரவேண்டுமென்று தி.மு.க தலைவர் கலைஞர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறை பிடித்துச் செல்வது என்பது தொடர் கதையாக நீண்டு கொண்டே போகிறது. ஒரு நாளில் மட்டும் 82 தமிழக மீனவர்கள் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஏற்கனவே இரண்டு முறை இரண்டு நாட்டு மீனவர் பிரதிநிதிகள் சந்தித்து நீண்ட நேரம் உரையாடியும் எந்த முடிவும் காணப்படவில்லை. மத்தியில் பா.ஜ.க. அரசு அமைந்த பிறகாவது, மீனவர்கள் கைதுப் படலம் நிற்குமென்று எதிர்பார்த்ததற்கு மாறாக, நீடித்துக் கொண்டே போகிறது.

எனவே பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு தமிழக மீனவர்களின் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண உடனடியாக முன்வரவேண்டும்-என்றுள்ளது. (த)

## ஹிமாச்சலில் 24 மாணவரை அடித்துச் சென்றது வெள்ளம்

புதுடில்லி, ஜூன் 10

இந்தியாவின் ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் ஆறொன்றில் ஏற்பட்ட திடீர் நீர் எழுச்சியில் அடித்துச்செல்லப்பட்ட 24 மாணவர்களைத் தேடும் பணி மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தச் சம்பவம் நடந்த குலு பள்ளத்தாக்கில் உள்ள பியாஸ் ஆற்றிலிருந்து இதுவரை மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மூத்த அதிகாரி தேவேஷ் குமார் பிபிசியிடம் தெரிவித்தார்.

அந்த ஆற்றின் குறுக்காக கட்டப்பட்டுள்ள ஒரு அணையிலிருந்து தண்ணீர் வெளியிடப்பட்டதால்தான் இந்த நீர் எழுச்சி ஏற்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த நீர் எழுச்சி ஏற்பட்டபோது அதைப் புகைப்படம் எடுக்க அந்த மாணவர்கள் அவர்களது பஸ்ஸிலிருந்து இறங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திர பிரதேச மாநிலத்திலிருந்து வந்த பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஹிமாச்சல் பிரதேச மாநிலத்தின் பிரபல சுற்றுலாத் தளமான மனாலிக்குப் பயணித்துக்கொண்டிருந்தபோது மாநில தலைநகர் ஷிம்லாவிலிருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

அந்த அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதற்கு, முன்பு சரியான எச்சரிக்கை அளிக்கப்படாதது ஏன் என்று கண்டித்து, ஆத்திரமிக்க உள்ளூர் மக்களும் சுற்றுலாப் பயணிகளும் சாலை மறியலில் ஈடுபட்டனர் என அங்கிருக்கும் உள்ளூர் செய்தியாளர் ஒருவர் கூறுகிறார்.

ஞாயிற்றுகிழமை மாலை உள்ளூர் நேரப்படி சுமார் 7:30 மணி அளவில் அந்த ஆற்றின் ஓரத்தில் நின்று புகைப்படம் எடுக்க பஸ்ஸிலிருந்து மாணவர்கள் இறங்கிச்சென்றதாக ஹிமாச்சல் பிரதேச மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் ஜி.எஸ்.பாலி தெரிவித்துள்ளார்.

தண்ணீர் அதிக உயரத்துக்கு எழும்புவதை முன்கூடியே பார்த்த சில மாணவர்கள், அந்த இடத்திலிருந்து ஓடி விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"ஆற்றின் கரையில் இருந்தவர்களை நீர் அடித்து சென்றதை நாங்கள் பார்த்தோம். அவர்கள் கீழே விழ, அலைகளால் மூழ்கடிக்கப்பட்டனர். பொலிஸார் நீண்ட நேரம் கழித்தே சம்பவ இடத்துக்கு வந்தனர். ஒரு மீட்பு நடவடிக்கையை ஆரம்பிக்கத் தேவையான எதையுமே அவர்கள் கொண்டுவரவில்லை" என உயிர்தப்பியவர்களில் ஒருவரான சுமிரன் செய்தி நிறுவனம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார். (த)

## விமானம் பற்றி தகவல் தந்தால் 50 லட்சம் டொலர் சன்மானம்

கோலாலம்பூர், ஜூன் 10
மர்மமான முறையில் காணாமற்போன மலேசிய விமானம் குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு 50 இலட்சம் அமெரிக்க டொலர் சன்மானம் வழங்கப்படும் என்று அந்த விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

மாயமான விமானம் குறித்த தகவல்களை மலேசிய அரசு மூடி மறைப்பதாகவும், சன்மானத் தொகை அறிவிப்பதன் மூலம் சிலர் தகவல்களை அளிக்க முன்வரக் கூடும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

இதற்கான செலவுத்தொகையை இணையத் தளம் மூலமாக வசூலிப்பதற்கும், அதில் ஒரு தொகையை, விமானம் குறித்து விசாரணை நடத்தவுள்ள தனியார் புலனாய்வுக் குழுவுக்குச் செலவிடவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து, இந்தத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் எத்தான் ஹண்ட் கூறுகையில்: விமானத்தைப் பற்றிய தகவல்களை சிலர் தெரிந்து வைத்திருப்பார்கள்.

சன்மானம் அறிவித்திருப்பதன் மூலம் தகவல்களைக் கொடுக்க அவர்கள் முன்வருவார்கள் என்று நம்புகிறோம் என்றார்.

239 பயணிகளுடன் கோலாலம்பூரில் இருந்து பிஜிங்குக்கு, கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி புறப்பட்டுச் சென்ற விமானம், நடுவானில் சென்றுகொண்டிருந்தபோது, மர்மமான முறையில் மாயமானது.

அந்த விமானம் இந்தியப் பெருங்கடலின் தெற்குப் பகுதியில் விழுந்திருக்கலாம் என்று கருதப்பட்டது. இதையடுத்து, கடல் பகுதியில் தீவிரமாகத் தேடியபோதும், அதற்கான தடயம் எதுவும் கிடைக்கவில்லை.

இதையடுத்து, அந்த விமானத்தை வேண்டுமென்றே சிலர் வேறுபாதையில் திருப்பியிருக்கலாம் என்று தற்போது கருதப்படுகிறது. (த)

# கராச்சி விமான நிலையத்துக்குள் தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல்

## பயணிகள், பணியாளர்கள் பதறியடித்தபடி ஓட்டம்; பெரும் தீப்பிழம்புகளால் ஒளிர்ந்தது அந்தப் பகுதி



தீவிரவாதிகளின் தாக்குதலால் தீப்பிடித்து புகைமண்டலமான விமான நிலையம்

கராச்சி, ஜூன் 10
பாகிஸ்தானின் கராச்சி சர்வதேச விமானநிலையத்தில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிறு இரவு துப்பாக்கிதாரிகள் விமான நிலையத்தைத் தாக்கியதில் 23 பேர் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் பெரும் சண்டைக்குப் பிறகு மீண்டும் விமான நிலையத்தை கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாக அதிகாரிகள் அறி வித்த பின்னர், நேற்றுத் திங்கட்கிழமை, மேலும் இரண்டு குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. இந்தச் சம்பவத்தை அடுத்து பாதுகாப்புப் படையினர் அங்கு மேலும் குவிக்கப்பட்டுள்ளனர்.

கராச்சி ஜின்னா சர்வதேச விமான நிலையத்தின் பழைய முனையத்துக்குள் போலி அடையாள அட்டைகளைக் காட்டி உள்ளே புகுந்த 15 தீவிர வாதிகள் அங்கு ரோந்துப் பணியில் இருந்த பாதுகாப்புப் படையினரை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும் கைக் குண்டுகளையும் வீசி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதையடுத்து அங்கு வந்த பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸார் தீவிரவாதிகளுடன் சண்டையிட்டு விமான நிலையத்தை மீட்டனர்.

முன்னதாக சண்டையின் போது, விமான நிலையத்துக்கு வரும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டன. விமான நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று தங்கவைக்கப்பட்டனர்.

தீவிரவாதிகளுடன் நடைபெற்ற சண்டை முடிவடைந்ததாகப் பாகிஸ்தான் இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மேலும், அப்பகுதி சரி செய்யப்பட்டு விட்டது என்றும் தெரிவித்தார்.

தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில், தாக்குதலை நடத்திய 10 பேரும் அடங்குவர். நேற்று முன் தினம் இரவு சுமார் ஐந்து மணி நேரம் நீடித்த இந்தத் தாக்குதலில் குறைந்தது 14 பேர் காயமடைந்தனர்.

பெரும் ஆயுதங்கள் தாங்கிய துப்பாக்கிதாரிகள் விமான நிலையத்தின் சரக்கு முனையகத்தின் வழியாகவும், தனியார் விமான முனையகத்தின் வழியாகவும் புகுந்து கையெறி குண்டுகளையும், தானியங்கித் துப்பாக்கிகளையும் பயன்படுத்தித் தாக்கினர்.

விமான நிலையத்தில் இருந்த சரக்குப் பொதிகளுக்கு தாக்குதல்தாரிகள் தீவைத்தனர். ஆனால் விமானங்கள் எதுவும் தாக்குதலுக்குள்ளாகவில்லை.

இந்தத் தாக்குதலை தாம்தான் நடத்தியதாக பாகிஸ்தான் தாலிபான் பிரிவினர் கூறியிருக்கின்றனர்.

பாகிஸ்தானின் கிராமங்கள் மீது நடத்தப்படும் குண்டுத் தாக்குதல்களில் அப்பாவிக் கிராமவாசிகள் பலியாவதற்கு பழிக்குப் பழி வாங்க நாங்கள் இன்னும் இருக்கிறோம் என்பதை பாகிஸ்தான் அரசுக்குக் காட்டவே இந்தத் தாக்கு தலை நடத்தினோம் என்று பாகிஸ்தான் தாலிபான் அமைப் புக்காகப் பேசிய ஷாஹிதுல்லா ஷாஹித் கூறியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் கூறியது.

இதே போன்ற தாக்குதல்களை பாகிஸ்தானின் 'கடற்படை மற்றும் விமானப்படைத் தளங்களின் மீதும் முன்னர் தாலிபான்கள் நடத்தியிருக்கின்றனர். (த)

# கனடாச் சிறையில் 3 கைதிகள் ஹெலி மூலம் தப்பியோட்டம்



மொன்றியல், ஜூன் 10
கனடாவில் சிறைச்சாலையிலிருந்து மூன்று கைதிகள் ஹெலியின் உதவியுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

கியூபெக் மாகாணத்தில் இந்த சம்பவம் நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹெலியில் தப்பிச் சென்ற மூவரையும் தேடும் நடவடிக்கையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் மேற்கு பகுதிக்கு அவர்கள் சென்றிருக்க கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆர்சன்வில்லே தடுப்பு மையத்திலிருந்து மேற்கு நோக்கி அந்த ஹெலி பறந்து சென்றதாக மாகாணப் பொலிஸார் கூறியுள்ளனர்.

கியுபெக் நகரத்திலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள விமான நிலையங்கள், இராணுவத் தளங்கள் போன்றவற்றிலும் தேடுதல் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக இவர்கள் தெரிவித்தனர். அது மட்டுமன்றி தரை வழித் தேடலிலும் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் தகவல் தொடர்பாளர் ஆட்ரே ஆன் பிலோடியு குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டரில் வெளிவந்த தகவல்களின் மூலம் யுவெஸ் டெனிஸ், டெனிஸ் லேபெப்ரே, செர்கே போமெர்லியு என்று அவர்களின் பெயர்களை அறிவித்துள்ள பொலிஸார் அவர்களை அடையாளம் காண நேர்வோர் பொலிஸாரை உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

இது கடந்த இரண்டு ஆண்டுகளில் அங்கு நடைபெற்றுள்ள இரண்டாவது சம்பவமாகும். கடந்த வருடம் மார்ச் மாதம் அங்குள்ள செயின்.ஜெரோம் சிறையிலிருந்து இரண்டு கைதிகள் ஒரு ஹெலியில் தப்பிச் சென்றனர். பறந்துகொண்டிருந்த ஹெலியின் விமானியைத் துப்பாக்கி முனையில் மிரட்டி இந்தச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

இவர்கள் தப்பிச் சென்ற சில மணி நேரங்களிலேயே கடத்தலில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும், தப்பிச் சென்ற கைதிகளையும் பொலிஸார் கைது செய்தனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# வெள்ளக்காடாக ஆப்கான் 1,000 பேர் வெளியேற்றம்

காபூல்.ஜூன் 10
ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட மழைவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 81 ஆக அதிகரித்துடன் 1,000 பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் பஹ்ரான் மாகாணத்தில் உள்ள கசாராக் இ நூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மீண்டும் கன மழையுடன் கூடிய சூறாவளி வீசியுள்ளது.

இதனால் அப்பகுதியில் வெள்ளம் ஏற்பட்டு அங்குள்ள வீடுகள் இடிந்து விழுந்ததுடன், வீடுகளில் உள்ள கால்நடைகளும் வெள்ளத்தில் இழுத்து செல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில் அங்கு ஏற்பட்ட வெள்ளத்தால் சுமார் 81 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 1,000 பேர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர்.

**ஆப்கானிஸ்தானின் பஹ்ரான் மாகாணத்தில் உள்ள கசாராக் இ நூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மீண்டும் கன மழையுடன் கூடிய சூறா வளி வீசியுள்ளது.**

தற்போது ஏற்பட்டுள்ள இந்த வெள்ளப்பெருக்கு மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். கணவன், மனைவியர்களுக்கிடையே சகஜமான நிலை காணப்பட்டாலும் வாழ்க்கைத் துணையை பிரிந்து வேலை நிமித்தமாக வெளியில் தங்க நேரிடலாம். மனக்கவலை நீங்கி எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் வரும்.

**இடபம்**: அடுத்தவரை மனம் மகிழச் செய்யும் விதத்தில் பேசி காரியம் சாதிப்பீர்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்யப்போய் வீண் பழி சுமக்க நேரிடலாம் கவனம் தேவை. அயல்வீட்டாருடன் கவனமாக பழகுவதன் மூலம் சில்லறைச் சண்டைகளைத் தவிர்க்க முடியும்.

**மிதுனம்**: அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எந்த வகையிலாவது உழைப்பு வீணாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் பதற்றம் உண்டாகலாம். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபங்கள் உண்டாகும். கணவன், மனைவி இருவரும் மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும்.

**கடகம்**: மனகுழப்பம் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். நல்ல இடத்திலிருந்து ஆக்கபூர்வமான யோசனைகளையும் காரிய வெற்றியும் கிட்டும். ஆனால் மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கௌரவம், அந்தஸ்து அதிகரிக்கும்.

**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளைக் கவனமாகச் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். செயற்றிறமை அதிகரிக்கும். குடும்பத்தில் சுகமும், நிம்மதியும் இருக்கும். குடும்பத்துக்கு அதிகப்படியான வருமானமும் கிடைக்கும்.

**கன்னி**: உறவினர் வருகை இருக்கும். எவரிடம் பேசும் போதும் நிதானமாகப் பேசுவது நன்மை தரும். பெண்கள் எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும். திட்டமிட்டுச் செயற்படுவது வெற்றிக்கு உதவும். மாணவர்கள் உயர்கல்வி தொடர்பான சந்தேகங்களை மற்றவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வீர்கள்.

**துலாம்**: மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் கெட்ட பெயர் வாங்க நேரலாம். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. அடுத்தவர்களுடன் வீண் வாக்கு வாதங்களும் அதனால் கருத்து வேற்றுமையும் உண்டாகலாம்.

**விருச்சிகம்**: தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தேவையான பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயலாற்றுவது வீண் பகை வராமல் தடுக்கும். மிகவும் விருப்பமான நபருடன் ஏற்படும் சந்திப்பு மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கும்.

**தனுசு**: அறிமுகமில்லாத நபர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து சாதுரியமாகப் பேசுவது நல்லது. செலவும் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் துணிச்சல் உண்டாகும். அதனால் எதைப் பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள்.

**மகரம்**: தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கீழ்நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள்.

**கும்பம்**: உறவினர்கள் வருகை இருக்கும். அதே நேரத்தில் அவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. பெண்கள் துணிச்சலுடன் ஈடுபட்டு காரிய வெற்றி காண்பீர்கள். பண வரத்து திருப்தி தரும். வாக்கு வாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். மாணவர்கள் மிகவும் கவனமாக எதிலும் ஈடுபடுவது நல்லது.

**மீனம்**: எந்த ஒரு வேலையையும் மனத் திருப்தியுடன் செய்வீர்கள். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களுடன் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்கப் பெறுவார்கள்.

## நாளை

**வைகாசி-28 புதன்கிழமை | 11.06.2014**

திதி: திரயோதசி பி.ப.01.06 வரை
நட்சத்திரம்: விசாகம் பி.ப.03.14 வரை

சுபநேரம்: 04.22-05.52 வரை
இராகுகாலம்: 11.52-01.22 வரை

**வைகாசி விசாகம்**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

## யாக்ஞவல்கியரும் மைத்ரேயும்



"இறைவனின் திருப்பெயரைச் செவிகளால் கேட்காத நாளே கெட்ட நாள்; வானத்தில் மேக மூட்டம் நிறைந்து சூரியன் தெரியாத நாள் கெட்டநாள் அல்ல" என்று நாம் சொல்கிறோம். யாக்ஞவல்கியரும் ஒரு பெரிய முனிவர். 'மூப்பு எய்திய ஒவ்வொருவனும் துறவு பூண வேண்டும்' என்று இந்திய சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன. எனவே, ஒரு நாள் யாக்ஞவல்கியர் தன் மனைவியைப் பார்த்து, "இதோ என் பணம், சொத்து எல்லாம் இருக்கின்றன. இவற்றை நீ எடுத்துக் கொள். நான் துறவு பூணப் போகிறேன்" என்று சொன்னார். ஆனால் அவளோ, "இந்த உலகம் முழுவதையும் நிரப்பும் அளவுக்கு எனக்குச் செல்வம் இருந்தாலும், அதனால் மரணமிலாப் பெருநிலை கிடைக்குமா?" என்று கேட்டாள்.

"கிடைக்காது; நீ பணக்காரியாக இருப்பாய். அவ்வளவுதான். ஆனால், மரணமற்ற நிலையைப் பணம் தராது" என்றார் யாக்ஞவல்கியர்.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? தெரிந்தால் கூறுங்கள்" என்றாள் அவள்.

"நீ எப்போதும் என் அன்புக்கு உரியவளாக இருந்திருக்கிறாய். இந்தக் கேள்வியால் நீ எனக்கு இன்னும் நெருங்கியவள் ஆகிவிட்டாய். இங்கே வந்து என் எதிரே உட்கார். நான் உனக்குக் கூறுகிறேன். நான் சொல்வதைக் கேட்ட பிறகு, அதை நீ நன்கு சிந்திக்க வேண்டும்" என்று கூறித் தொடர்ந்தார் யாக்ஞவல்கியர்.

"மனைவி கணவனிடம் அன்பு செலுத்துவது கணவனுக்காக அல்ல, ஆனால் ஆன்மாவுக்காகவே அன்பு செலுத்துகிறாள். ஆன்மாவிடம் அன்பு செலுத்துவது தன்னிடமே அன்பு செலுத்துவதல்லவா? இது போலவே எந்தக் கணவனும் தன் மனைவியிடம், அவள் தன் மனைவி என்பதற்காக அன்பு செலுத்துவதில்லை. ஆன்மாவுக்காகவே அன்பு செலுத்துகிறான். குழந்தைகளிடம் அன்பு செலுத்துவதிலும் இதே உண்மைதான் அடங்கியிருக்கிறது. பண விடயமும் இப்படித்தான். பிராமணனிடம் ஒருவன் செலுத்தும் அன்புக்கும் இதுதான் காரணம். ஷத்திரியன், உலகம், தெய்வம் இப்படியே எந்தப் பொருளிடம் ஆனாலும் சரி, ஒருவன் அன்பு செலுத்துவது அந்தப் பொருளுக்காக அல்ல; அந்தப் பொருளுக்குள் தன்னையே காண்பதால்தான். இந்த ஆன்மாவைப்பற்றி நாம் உபதேசம் பெற வேண்டும். விவாதிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும் என்று கூறினார்.

# நீர்மூழ்கி கண்ணாடி உணவகம்



உலகின் நீர்முழ்கி கண்ணாடி உணவகம் Conrad d Maldivesd Hotel என்ற பெயரில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் உருவாக்கப்பட்டுள்ளது.

இது, இந்தியப் பெருங்கடலில் 5 மீற்றர் கடலின் ஆழத்தில் உருவாக்கப்பட்டுள்ள நீர்முழ்கி உணவகம் ஆகும்.

இங்கு காலைச் சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் இரவு உணவு ஆகியவை வழங்கப்படுகின்றன. அங்கு வரும் வாடிக்கையாளர்களைச் சுற்றி, சுறாக்களும், பெரிய மீன்களும், அரிய வகை மீன்களும் நீந்தி கொண்டிருக்கும்.

வாடிக்கையாளர்கள், அழகிய நீலநிறக் கடலைக் கண்டபடியே தங்களது உணவை ரசித்து உண்ணும் வகையில் இந்த உணவகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஒரு சொட்டு கடல் நீர் கூட இந்த உணவகத்துக்குள் நுழையாதபடி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த உணவகம் உலகிலேயே மிகப்பெரிய அழகான உணவகம் என்ற விருதை நியூயோர்க் டெயிலி நியூஸ் என்ற தினசரி பத்திரிகை வழங்கியுள்ளது. இந்த உணவகத்தில் ஒரே சமயத்தில் 14 பேர் உகார்ந்து உணவு அருந்தலாம். ஒரு நபருக்கு 190 பவுண்டுகள் கட்டணம் அறவிடப்படுகின்றது. ஐரோப்பிய உணவுவகைகள் எல்லாமே இங்கு வழங்கப்படுகின்றன. திருமணம் மற்றும் பிறந்த நாள் வைபவங்களுக்கான உணவுவகைகளை இந்த உணவகத்தில் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 9 | | | 7 | 1 | 4 | |
| 2 | | | 9 | 3 | | | | 7 |
| | | 1 | | 6 | 4 | | | 2 |
| | | | | | | 3 | 5 | |
| | 2 | | | | | | 6 | |
| | 1 | 3 | | | | | | |
| 1 | | | 3 | 9 | | 7 | | |
| 9 | | | | 7 | 8 | | | 5 |
| | 7 | 6 | 2 | | | 4 | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 6 | 3 | 9 | 5 | 8 | 7 |
| 5 | 7 | 8 | 4 | 1 | 2 | 6 | 9 | 3 |
| 6 | 3 | 9 | 7 | 8 | 5 | 1 | 4 | 2 |
| 7 | 1 | 5 | 9 | 4 | 8 | 3 | 2 | 6 |
| 9 | 6 | 2 | 1 | 7 | 3 | 4 | 5 | 8 |
| 8 | 4 | 3 | 5 | 2 | 6 | 7 | 1 | 9 |
| 3 | 9 | 6 | 8 | 5 | 4 | 2 | 7 | 1 |
| 2 | 5 | 7 | 3 | 9 | 1 | 8 | 6 | 4 |
| 4 | 8 | 1 | 2 | 6 | 7 | 9 | 3 | 5 |

# ஐ.நா. குழுவுக்கு திருப்தியற்ற பதில் வழங்கினால் நாட்டுக்குப் பேராபத்து

## அரசை எச்சரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு.ஜீன் 10

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த இந்த மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை நிபுணரான சன்ட்ரா பெய்டாஸ் தலைமையிலான ஐ.நாவின் சிறப்பு விசாரணைக் குழுவுக்கு இலங்கை அரசு திருப்தியற்ற பதிலளிக்குமானால் நாடு ஆபத்தான நிலைமைக்குத் தள்ளப்படும் என்று பிர தான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுபோன்ற பிரச்சினைகளுக்கு அரசு ஐ.நாவில் செயற்பட்ட பொறுப்பற்ற விதமே காரணம் என்று அந்தக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை யின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை குறித்து விசார ணைகளை மேற்கொள்ள மனித உரிமை நிபுணரான சன்ட்ரா பெய்டாஸ் தலைமையிலான விசேட குழு ஒன்றைத் தாம் நியமித்துள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

இந்தக் குழு இந்த மாத நடுப்பகுதியளவில் இலங்கைக்கு வந்து இங்கு தங்கியிருந்து தனது விசாரணைகளை மேற்கொள்ளுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. இவை குறித்து வினவிய போதே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினரும், பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நாவின் விசேட குழு இலங்கைக்குள் வரவுள்ளதாகக் கூறப்பட்டாலும், அந்தக் குழு வின் அங்கத்தவர்களுக்கு விசா வழங்குவதை இலங்கை அரசே தீர்மானிக்கும். அந்த வகையில், அரசு இதுகுறித்து என்ன தீர்மானம் எடுத்துள்ளது என்பதை எம்மால் உறுதியாகக் கூற முடியாதுள்ளது. ஆனால், அந்தக் குழு இலங்கைக்கு வருகை தந்து பின்னர் அரசு திருப்திகரமற்ற பதிலை வழங்குமெனில் நிச்சயமாக நாடு ஆபத்தில் சிக்கிக்கொள்ளவாய்ப்புள்ளது.

கடந்த ஜெனீவாக் கூட்டத் தொடரின் போதும் அரசின் பதில்கள் திருப்திகரமாக அமையாமையே இதற்கெல்லாம் காரணமாக அமைந்துள்ளது. அந்த வகையில், அதே போன்று தற்போதும், அதாவது விசாரணைக் குழு இலங்கைக்கு வந்த பின்னரும் செயற்பட்டால் அரசு நிச்சயமாக சிக்கலில் மாட்டிக் கொள்ளும்.

எனவே, இலங்கை அரசு இந்தப் பிரச்சினைகள் குறித்து சிறந்த முறை யில் ஆராய்ந்து, இம்மாத நடுப்பகுதி யில் வருகைத் தரவுள்ளதாகக் கூறப்படும் அக்குழுவுக்கு சிறந்த பதிலொன் றையே வழங்க முன்வரவேண்டும்- என்றார்.

## புதிய பணிப்பாளர் சபை தெரிவு

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் 2014/2015 ஆம் ஆண்டுக்குரிய புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய சபையின் தலைவராக மானிப்பாய் இலங்கை வங்கியின் முகாமையாளர் லயன் பொன்.பாலகுமாரும், செயலாளராக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரனும், பொருளாளராக தொழிலதிபர் லயன் ந.சண்முகவேலும், முதலாவது உப தலைவராக ஹெல்தி லங்கா நிறுவனத்தின் மாகாண இணைப்பாளர் லயன் ஆர். சிவநாயகமும், இரண்டாவது உப தலைவராக சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் லயன் சி.குமாரவேலும், மூன்றா வது உப தலைவராக மக்கள் வங்கி உத்தியோகத்தர் லயன் என்.தயாரூபனும், அங்கத் துவ இணைப்பாளராக ஓய்வுநிலை பிரதேச செயலரும் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் த.தேவராஜனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் லயன் த.சித்தார்த்தன், ஓய்வுநிலை சமூக சேவை உத்தியோகத்தர் லயன் வை.யோகானந்தராஜா, வைத்திய கலாநிதி லயன் எஸ்.பேரின் பநாயகம், சமூக சேவகர் லயன் செ.மகா தேவா, லயன் சீமாட்டி ம.பூமா தேவி, சட்டத்தரணி எஸ்.பி. சிவஞானம், சட்டத்தரணி பொ.சுந்தரலிங்கம், தீவகம்பிரதேசசபை முகாமை உதவியாளர் லயன் எல்.ஜூட்சி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க)

## கதிர்காம பாத யாத்திரை குழு தற்போது கிழக்கில்

வடமராட்சி, ஜூன் 10

தொண்டமானாறு செல்வச்சந் நிதி கோயிலில் இருந்து ஆரம்ப மான கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை இரவு காரை தீவு கண்ணகை அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து நாளை காலை அக்கரைப் பற்றை நோக்கி புறப்படுவர் என்று கதிர்காம பாத யாத்திரைக் குழுத் தலைவர் வேல்சாமி தெரிவித்தார்.

இக்குழுவினர் நேற்றைய தினம் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கு தங்கியிருந்தனர். இன்று செவ்வாய்க்கிழமை பாதயாத் திரைக் குழு கல்முனை சிவன் கோயிலை மதியம் சென்றடையும். அங்கிருந்து இரவு காரைதீவைப் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கதிர்காமக் கந்தன் பெருந்திருவிழாவை முன்னிட்டு வருடந்தோறும் நடைபெறும் கதிர்காம பாத யாத்திரை கடந்த மாதம் 10 ஆம் திகதி தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் இருந்து ஆரம்பமாகி இருந்தது.

தற்போது கிழக்கு மாகா ணத்தை அடைந்துள்ள 50 பேரைக் கொண்ட இந்தக் குழு வினர் எதிர்வரும் 28 ஆம் திகதி கதிர்காமம் கொடியேற் றத் தினத்தன்று கதிர்காமத் தைச் சென் றடையத் திட்டமி டப்பட்டுள்ளது.

கதிர்காமத்தை சென்றடைய வசதியாக அம்பாறை- மொன ராகலை மாவட்ட காட்டுப்பாதையான கூமுனை அடர் வனப் பாதை இந்த மாதம் 20 ஆம் திகதி முதல் 15 நாள் களுக்கு திறக்கப்படும் என கூமுனை சரணா லய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-173)

## பௌர்ணமி அரங்கம்

தென்மராட்சி, ஜூன் 10

நாவற்குழி தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தினரும் சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற் குழி உப அலுவலகத்தினரும் இணைந்து நடத்தும் பௌர்ணமி அரங் கம் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணிக்கு உப அலுவலக மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக சைவப் புல வர் மு.திருஞானசம் பந்த பிள்ளை நாவற்குழி ம.வி. அதிபர் திருமதி வ.மேகலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் தர்மராஜா

(பெற்றா அண்ணை)

சரவணையைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தர்மராஜா 04.06.2014 புதன்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், வாழைத்தோட்டம் நவாலி வடக்கைச் சேர்ந்த் கந்தையா-இராசமுத்து தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவறூபன் (றூபன்- ஸ்ரீராம் ஒயில் மாட்), மதுசூதனன் (மதன்- பிரான்ஸ்), மதுரா (தொழில்நுட்ப உத்தியோகத்தர் யாழ். மாநகர சபை), விஸ்ணுவர்த்தன் (Ram Builders) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தனுஷா, கேதீஸ்வரன் (Commercial Credit Jaffna Branch) ஆகியோரின் பாசமிகு மாமனும், பிருந்தாபன், அஷ்விதா, கௌசிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2014) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 12 மணிக்கு நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நவாலி வடக்கு.

தகவல்: சிவறூபன் (றூபன்-மகன்)
(ஸ்ரீராம் ஒயில் மாட்)
077675 8760

(48837) (10.6.3)



# விசாகப் பொங்கல் விழா

தெல்லிப்பழை, ஜூன் 10
தெல்லிப்பழை தென்மேற்கு அருள்மிகு சிவகுருநாதசுவாமி கோயில் வருடாந்த விசாகப் பொங்கல் விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.
விசேட பூசைகள் காலை 8 மணிக்கு நடைபெறும். மேலும் ஆலயத்தின் கும்பாபிஷேகம் தொடர்பான கூட்டமும் 8.30 மணிக்கு நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

* * *

தெல்லிப்பழை தென்மேற்கு வழிசிட்டி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் விழா நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும் எனவும். அன்றைய தினம் காலை 8 மணிக்கு பரிபாலன சபைப் பொதுக்கூட்டம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

* * *


புலோலி காந்தியூர் கண்ணகை அம்மன் கோயில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. காலையில் விசேட அபிஷேகம், காவடி, கரகங்களைத் தொடர்ந்து பொங்கல் பூசை இடம்பெறும். (க-173)

* * *

வடமராட்சி, ஜூன் 10
பழம் பெருமைமிக்க மந்திகை அருள்மிகு கண்ணகை அம்மன் கோயில் வருடாந்தப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கோவலன் கண்ணகி கதை கூறும் சிலப்பதிகாரப் புத்தகம் மேள வாத்தியங்கள் முழங்க புலோலி ஒல்லை வீரபத்திரர் கோயிலில் இருந்து நேற்று முற்பகல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.
கந்தமுருகேசனார் வீதி, உபயகதிர்காமம் வீதி, மந்திகை சாவகச்சேரி வீதி, சந்தை வீதி வழியாக சிலப்பதிகாரப் புத்தகம் அம்மன் கோயிலுக்கு எடுத்து வரப்பட்டதும் விளக்கு வைக்கப்பட்டு விசேட பூசையுடன் கோவலன் கண்ணகை கதை படிப்பு ஆரம்பமானது. (க-173)

* * *

வடமராட்சி, ஜூன் 10
பளை, மாசார், கல்லடி வைரவர் கோயில் வருடாந்த பொங்கல் விழா உற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-173)



பொசன் பண்டிகையை முன்னிட்டு பன்னிப்பிட்டிய தர்மபால மகா வித்தியாலய மாணவர்கள் ஒரு தொகை புத்தகங்களை நேற்று திங்கட்கிழமை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் கையளித்தனர்.

# இளைஞர்கள் பணியாற்றாத வரை மலைநாட்டில் மாற்றமே ஏற்படாது

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 10
மலையகத்து நிலைமைகளை ஆய்வு செய்வதால் மாத்திரம் மலையகத்தில் மாற்றம் வராது. அந்த ஆய்வின் முடிவுகளை மலையக சமூகத்தின் ஊடாக அரசியல் செயற்பாட்டாளர்கள் எடுத்துச் செல்ல வேண்டும். களத்தில் இறங்கி மக்கள் மத்தியில் அரசியல் பணியாற்ற மலையக இளைஞர்கள் முன்வராத வரைக்கும் மலைநாட்டில் மாற்றம் வராது என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

மலையக ஆய்வு மையம் கொழும்பு மிலாகிரிய புனித போல் தேவாலய மண்டபத்தில் நடத்திய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:-
வடக்கில் இளைஞர்கள் அர்ப்பணிப்புடன் களத்தில் இறங்கி பணி செய்தார்கள். அந்த அர்ப்பணிப்பு மிகவும் மகத்தானது. இன்று வடக்கு, கிழக்கு தமிழர் விவகாரம் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு காரணம் இன்று வடக்கில் அரசியல் செய்யும் தேர்தல் அரசியல்வாதிகள் அல்ல. வடக்கு, கிழக்கு இளையோரின் அன்றைய அர்ப்பணிப் பின் மூலமாகத் தான் இன்று உலகம் இலங்கை தமிழர் பற்றி பேசுகிறது. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.


இதைபோல் மலையகத்துப் பிரச்சினை உலகமயமாக வேண்டும் என்றால் மலையக இளைய சமூகம் அர்ப்பணிப்புடன் சமூகத்தில் ஊடுருவிகளப் பணியாற்ற வேண்டும். இன்று மலையக பிரச்சினைகள் சர்வதேச எல்லைகளை அல்ல, மலையக மாகாண, மாவட்ட எல்லைகளைக் கூட தாண்டவில்லை.

எனவே சமூக உணர்வுடன் நமது இளைஞர்கள் களத்தில் இறங்கி மலையக இலக்குகளை நோக்கி பணியாற்ற வேண்டும்-என்றார். (ச)

## ஆச்சிரமத்தின் ஆண்டுவிழா

திருகோணமலையில் அமைந்துள்ள சிவயோக சமாஜ ஆச்சிரமம் தனது 55 ஆவது ஆண்டு விழாவை நாளை புதன்கிழமை கொண்டாடுகின்றது. இந்த ஆச்சிரமம் 1959 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு சமய குரவர் நால்வருக்கான குருபூசைகள், ஏகாதசி, சிவராத்திரி, ராமநவமி, நவராத்திரி போன்ற விசேட பூசைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(க)

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியை திருமதி **ஞானாம்பிகை கனகராசா** அவர்களின் தாயார்

**செல்லையா பாக்கியம்**

அவர்கள் கடந்த 05.06.2014 வியாழக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு எமது பாடசாலை சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(43662)(4.3.6)

பாடசாலை சமூகம்,
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானைப்பிள்ளை நரசிங்கம்



வட்டு.வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கு, அந்தோனியார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை நரசிங்கம் 08.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னர் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னர் நரசிங்கத்தின் அன்பு மனைவியும், கமலாதேவி, நாகேந்திரம், காலஞ்சென்ற சற்குணம் மற்றும் தவமணிதேவி, காலஞ்சென்ற மகேந்திரம் மற்றும் சிவேந்திரன், பத்மாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், மகாதேவன், யோகேஸ்வரி, கமலநாயகி, திருநாவுக்கரசு, றாகினி, வத்சலா (வசந்தா), சாமிநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், 19 பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும், 21 பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.06.2014) புதன்கிழமை தொல்புரம்-கிழக்கு அந்தோனியார் கோயிலடியிலுள்ள அவரது மகனான சிவேந்திரன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ந.ப. 12.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அந்தோனியார் கோயிலடி,
தொல்புரம் கிழக்கு. 077 547 0188 (48835)(4.6.3)

தகவல்:,
குடும்பத்தினர்.

## ஆற்றொணாத் துயரத்தில் ஐந்தாண்டுகள்

### அமரர் பற்குணம் சதீஸ்குமார்

(Dip. in Nursing தாதிய உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை)



மலர்வு
08.10.1976

உதிர்வு
04.06.2009

திதி : வளர்பிறை துவாதசி
(10.06.2014)

நற்பல குணம் கொண்டவனாய்
நானிலம் போற்ற வாழ்ந்தவனே சதீஸா!
சுக நலமாய் தாய்த்தமிழ் உறவிருக்க
தாதியத் துறை சென்றுழைத்தவனே!
சிரித்த முகம் கொண்டு உன் உறவுகள் இருந்தவேளை
அவர் முகத்தை கண்ணீர் கொண்டு நனைத்ததேனோ?

உன்னுழைப்பால் மக்கள் பாரம் கூடுமென்று
பாரினின்று பாதியில் பிரித்து சென்றானோ இயமதர்மன்
புரியவில்லை சதீஸா எமக்கு!
இருந்தபோதும் பிரார்த்திக்கிறோம்.
சிறுபுலக் குமரனை
உன் ஆத்ம சாந்திக்காய்.

(48838)(7.6.3)

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

## பேராசிரியர் அழகையா துரைராஜா அவர்களின் 20ஆம் ஆண்டு நினைவு வைபவம் - 2014

காலம் :11.06.2014 (புதன்கிழமை)
நேரம் : மு.ப. 10.00 மணி
இடம் : யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
பேராசிரியர் அழகையா துரைராஜா நினைவு மண்டபம்

தலைவர்: பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா
நினைவுப் பேருரை: திரு. இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்
[B.A(Hons), M.A, PGD-in-Edu., M.Phil.]
சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(45571)(10.6)

பழைய மாணவர் சங்கம்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

# கண்ணீர் அஞ்சலி

## றஜீவன் தனுஷா



அன்பான பேச்சும் - எல்லோரையும்
அரவணைக்கும் குணமும்
இனி யாரிடம் காண்பது.
கால் நூற்றாண்டு காலம்
வாழ்ந்தது போதுமென்று
எமை விட்டு சென்றீரோ...
பிரிவு என்பது இயற்கையே -
ஆனாலும்
தாங்க முடியவில்லை உம் பிரிவை
உம் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்

சேனைப்பிலவு, நெடுங்கேணி. (43341) (10) குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

# மரண அறிவித்தல்

## வைரவநாதர் மயூரன்

(V.M. Uran Enterprise)



டச்சுவீதி, மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கச்சாய் வீதி, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட வைரவநாதர் மயூரன் நேற்று 2014.06.09 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமர் வைரவநாதர் (சந்திரா)-மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சின்னத்தம்பி யோகலிங்கம் -சிவரூபவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவதர்சினியின் அன்புக் கணவரும் கனிஸ்யன், அன்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனிகா (சுவிஸ்), மயூரதன், மதிவண்ணன், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவசங்கர் (NAITA-வவுனியா), சிவசுஜீபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் பாலாவித்தாள் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (48884) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பூமணி குழந்தைவேலு



கெருடாவில் கிழக்கு கொம்மாந்தறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி குழந்தைவேலு 06.06.2014 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தர்-லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், கமலறஞ்சிதம் (சசீலா - கொம்மாந்தறை), தங்கேஸ்வரன் (மயிலியதனை), கெங்கேஸ்வரன் (வெள்ளை-கனடா), புவனேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், தவமணி, ருக்குமணி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், துரைராஜா, ஜெகதாம்பாள், சிவலோகநாயகி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் தர்மகுலசிங்கம், அனுலாதேவி, கெங்காதேவி, யோகேஸ்வரி, வர்ண குலசிங்கம், ஞானேஸ்வரி சிங்கராஜா ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், செல்வ்ராணி காலஞ்சென்ற செல்வகுமார் மற்றும் சுகுமார், காலஞ்சென்ற தயாளினி மற்றும் பாமினி, ரூபகுமார் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், மகேஸ்வரன், தேவி, கலா ஆகியோரின் அன்பு மாமியும், கண்ணன், சுகர்ணா, முகுந்தன், துஷ்யந்தி, திலீபன், றோஜனா, குபேந்திரன், ஜெயந்தா, ஜெயந்தன், சிவந்தினி, ஜீவகன், தீபகன், தர்சனா, பவீன், ராதையன், குழ லோன், மயிலோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மானஷா, ஷாமலி, ஞானஷி, கஜலோன், கலக்ஷிகா, கேதாரன், வரோதயன், குபேரகா ஆகி யோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (11.06.2014) புதன்கிழமை காலை 9.00 - மு.ப 10.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று, மயிலியதனை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

பாடசாலை வீதி, கொம்மாந்தறை,
வல்வெட்டித்துறை. (45572) (10)

T.P: 021 205 5954
077 609 9509

## வீடு வாடகைக்கு


நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில் அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட 3 அறை வீடு வாடகைக்கு விடப்படும்.

விபரங்களுக்கு : 077 6296570 (48883) (10)

## பழைய தளபாடங்கள் பழைய வீடுகள் விலைக்கு வாங்கப்படும்.

விபரங்களுக்கு : 078 907 2867 (48887) (10)

# மரண அறிவித்தல்



## தீயோ பிரான்சிஸ்

(ஓய்வுநிலை லிகிதர் -கல்வித் திணைக்களம்)

யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் செபமாலைமாதா கோயிலடி உடுவிலை வசிப் பிடமாகவும் தற்போது மல்வத்தில் வசித்தவருமான தீயோ பிரான்சிஸ் (துரைஐயா) நேற்று (09.06.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தீயோ-சிசிலியா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு-இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பிலோமினாவின் அன்புக் கணவரும், பேட்டில்லா திலகா (தாதிய உத்தியோகத்தர் யா/போதனா வைத்தியசாலை), வலன்ரைன் ஜெயசீலன் (ஜேர் மனி), பேனடின் றேணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்திநாதர், அஞ்சலோ உதயகுமார், எமல்டா யோசேப்பின் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான எஸ்தாக்கி செல்லத்துரை, லூக்காஸ் (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் சகோதரரும், சிசிலியா, காலஞ்சென்றவர்களான பாக்கியம், லில்லி, வின்சன்ற் மற்றும் எமிலி, பெனடிக்ற், அருளம்மா, அல்பிறட், அகத்தா ஆகியோரின் மைத்துனரும், ஜெனத், நொய்லின், பேனி, நிராஜ், மனோஜ், டினேஷ், அனோஜ் (ஜேர்மனி) ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (11.06.2014) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்வம் சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Tel: 021 224 0972 (48880) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு

வடமாகாணம்

# பார்த்தீனியம் கொள்வனவு




வடமாகாண சுற்றுக்சூழல் விழிப்புணர்வு வாரத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் பார்த்தீனியம் ஒழிப்பில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு கிலோ பார்த்தீனியத்துக்கு 10 ரூபா என்ற விகிதத்தில் ஊக்குவிப்பு நிதி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**11.06.2014 தொடக்கம் 17.06.2014 வரை**

**தினமும் பிற்பகல் 3.00 தொடக்கம் 6.00 மணி வரை**

**பின்வரும் இடங்களில் பார்த்தீனியம் கொள்வனவு செய்யப்படும்.**

எல்லாளன் சனசமூக நிலையம் – புத்தூர்
வளர்மதி சனசமூக நிலையம் – சுன்னாகம் வீதி, புத்தூர்
சுடலையடி – சிறுப்பிட்டி மேற்கு
மலர்மதி சனசமூக நிலையம் – அச்செழு
கைத்தொழில் பேட்டை – அச்சுவேலி மேற்கு
குட்டியப்புலம் பொதுநோக்கு மண்டபம் – வயாவிளான்
ஏழாலை கிழக்கு சனசமூக நிலையம் – ஏழாலை சந்தி (சைவ மகாஜனா அருகில்)
யாழ்ப்பாணக் கல்லூரி பஸ் நிலையம் – வட்டு யாழ். வீதி, வட்டுக்கோட்டை
பிரதேச சபை பொது மண்டபம் – கைதடி கிழக்கு
குமரகோட்டம் சனசமூக நிலையம் – கோண்டாவில்
பானாவெட்டி அம்மன் கோவில் – மாகக்[illegible]
கிருஷ்ணன் கோவில் – உடுப்பிட்டி வல்லை நாற்சந்தி

பாதுகாப்பாக உரப்பைகளில் இட்டு பிற செடிகளுடன் கலக்காது எடுத்துவரப்படும் பார்த்தீனியம் மாத்திரமே கொள்வனவு செய்யப்படும். ஒப்படைக்கும் உரப்பைகளுக்கு மாற்று உரப்பைகளை பார்த்தினீயம் கொள்வனவு செய்யப்படும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்

செயலாளர்,
விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி
நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடமாகாணம்.

**படையெடுக்கும் பார்த்தீனியத்துக்கு விடைகொடுப்போம் வாரீர்!**





வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி விசாகப்பொங்கல் வெகு சிறப்பாக நேற்று நடைபெற்றது. காலை முதலே பக்தர் கூட்டம்அலை அலையாக கோவிலில் திரண்ட வண்ணம் இருந்தனர். நேர்த்திக் கடனை நிறைவேற்றும் பக்தர்களால் ஆலய வீதி நிறைந்திருந்தது.

தூக்குக்காவடி, பறவைக்காவடி, செடில் காவடி, பால்க்காவடி என்பன காலை முதலே ஆலயத்தை நோக்கி தொடரணி போல் வந்த வண்ணம் இருந்தன. அத்துடன் பாற்செம்பு கற்பூரச்சட்டி, தீமிதித்தல், அடியழித்தல் என பெருமளவான பக்தர்கள் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றிய வண்ணம் இருந்தனர்.

கடந்த வருடங்களைப் போல் இந்த வருடமும் பல லட்சக் கணக்கான பக்தர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்து கலந்துகொண்டிருந்ததைக் காணமுடிந்தது. (ந-102)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மூன்று

தகவல்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. அதையடுத்து சிறுமியைக் கடத்தியவரது பெற்றோரின் தொலைபேசி இலக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட அழைப்புகள் குறித்த தரவுகளைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குறித்த சிறுமி கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது கடத்தப்பட்டார். அவரது வீட்டில் வேலை செய்யும் 25 வயதுடைய இளைஞனே சிறுமியைக் கடத்தினார் என்று கூறப்படுகின்றது.

கடத்திய நபர் காரைநகரில் உள்ளார் என்று கிடைத்த தகவலை அடுத்துப் பொலிஸார் அங்கு சென்றபோதும், குறித்த சிறுமியின் ஆடைகள் சிலவற்றையே அவர்களால் மீட்கமுடிந்தது. குறித்த நபர் பொலிஸார் வருவதற்கு முன்னரே தப்பிச் சென்றுவிட்டார். அதையடுத்து குறித்த நபரின் தந்தையும், சகோதரனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். குறித்த நபரை நீதிமன்றில் ஒப்படைப்பதாக அவர்கள் கூறியதை அடுத்து அவர்களுக்கு நீதிமன்ற பிணை வழங்கியது. ஆயினும் இதுவரை குறித்த நபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவில்லை.

யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றில் நீதிவான் திருமதி ஜீவராணி முன்னிலையில் நேற்று இந்தச் சம்பவம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கின் அடுத்த தவணையின்போது சந்தேக நபரை ஒப்படைக்க வேண்டும் என்றும், ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் தந்தையையும், மூத்த சகோதரனையும் விளக்கமறியலில் வைக்க வேண்டி ஏற்படும் என்று நீதிமன்று உத்தரவிட்டது.

சிறுமி சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி ஜோனி மதுரநாயகம், சந்தேக நபரின் பெற்றோரின் தொலைபேசி இலக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட அழைப்புகளின் தரவுகளைப் பரிசீலனைக்குட்படுத்துமாறு கோரியதை அடுத்து, அதுகுறித்த தரவுகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந-4)

### நடுக்கடலில்

யிலிருந்து மீன்பிடிக்கப் புறப்பட்ட மீனவர்கள் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவரான கொஸ்தா திடீரென உயிரிழந்தார். அதையடுத்து அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த கடல் பகுதிக்கு அருகில் பருத்தித்துறைக் கடற்பரப்பு தென்பட்டதால் அவர்கள் தமது மீன்பிடிக் கலத்தை அங்கு கரைசேர்த்தனர்.

கரையை அடைந்த மீனவர்கள் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு இறந்தவரின் சடலத்தை பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். பருத்தித்துறை பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் மரண விசாரணையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து சடலம் தரை வழியாக கற்பிட்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ந)

### இரு இளைஞர்

பர்களுக்கும் இடையே மோட் டார் சைக்கிள் மோதுண்டதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது என்று சம்பவ இடத்தில் நின்றவர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வற்றாப்பளை நோக்கிப் பயணித்தனர் என்று கூறப்படுகின்றது.

விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் தற்போது கிளிநொச்சி பொதுமருத்துவனையில் வைக்கப்பட்டுள்ளன. அதேவேளை உயிரிழந்த விதுர்ஷன் இன்று மத்திய கிழக்கு நாடொன்றுக்கு பணிக்காகச் செல்லவிருந்தார் என்றும் தெரியவருகின்றது.

(ந-18,426,55)

### 82 இந்திய

யது என்றும் தெரியவருகின்றது.

இந்தநிலையிலேயே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சின் ஆலோசகர் எஸ்.பி.அந்தோனிமுத்து, "இரு நாட்டுக்கும் இடையே நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் படகுகளை பறிமுதல் செய்து கொண்டு மீனவர்களை மட்டும் விடுதலை செய்யுமாறும், இந்திய மீனவர்கள் இனி இலங்கைக்கடற் பகுதிக்குள் அத்துமீறுவதை தொடர்ந்தும் கவனிக்குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக அந்தந்த நீதி மன்றங்களுக்கு விடுகைப்பத்திரம் நாளை அனுப்பி வைக்கப்படும் அதனைத் தொடர்ந்து மீனவர்கள் தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

அதேவேளை கடந்த வாரம் கைது செய்யப்பட்ட தென்னிலங்கை மீனவர்கள் நாளை நாட்டுக்கு வந்து சேரவுள்ளனர்."- என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த வாரமும் இலங்கை ஜனாதிபதியால் 32 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் இருந்து இலங்கையால் தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலைகள் கைப்பற்றப்பட் டிருந்தன. மீனவர்களும் கைப்பற்றட்ட வலைகளுடன் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, மீனவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சமயம் அவர்கள் அனைவரையும் உடனடியாக விடுவிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்ததுடன், அவர்களது படகுகளும் ஒப்படைக்கப்பட்டன. இரு நாட்டு உறவை மேம்படுத்தும் முகமாகவே மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று அப்போதும் ஜனாதிபதியால் கூறப்பட்டது.

அவ்வாறு மீனவர்கள் விடுவிக்கப்பட்டு ஒருவாரம் கழிந்த நிலையிலேயே தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 82 மீனவர்களும் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தமைக்காக இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (ந-14-56)

### விசாரணைக்குழு

பட்டுள்ள குழு குறித்த இலங்கை அரசுக்கு முறைப்படி அறிவித்துள்ளார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை.

விசாரணைக்குழுவின் விவரங்கள் அடங்கிய கடிதம் ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் கடந்தவாரம் ஜெனிவாவில் உள்ள இலங்கை வதிவிடப் பிரதிநிதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை குறித்த இலங்கை அரசின் அதிகாரபூர்வ நிலைப்பாடு இன்று ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 26ஆவது அமர்வின்போது அறிவிக்கப்படவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்கவும் அந்தத் தகவலை ஆமோதித்துள்ளார். (ந)

### வியட்நாம்

வேலணை மற்றும் சாட்டி போன்ற கடற்கரைப் பகுதிகளுக்குச் சென்று அவர்கள் அங்குள்ள களநிலைமைகளைப் பார்வையிட்டனர். (ந-101)

### ஐ.நா. கூட்டத்

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதி ஏழு ஆண்டுகளில் இடம்பெற்ற தாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபி மான சட்ட மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கான குழு பற்றிய விவரங்களை கடந்த வாரம் இலங்கை அரசுக்கு தெரியப்படுத்திவிட்டதாக ஐ.நா. மனித உரிமை ஆணையா ளரின் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

விசாரணைக்காக உருவாக்கப்படும் கட்டமைப்பு எவ்வாறு இருக்கும் என்பது குறித்தும், குழுவின் தலைவர் மற்றும் மூத்த ஒருங்கிணைப்பாளர் என்ற வகையில் சன்ரா பேய்டஸின் பங்களிப்பு பற்றி தெளிவுபடுத்தியும் கடந்த வாரம் இலங்கைக்கு கடித மொன்று அனுப்பிவைக்கப்பட்டதாக மனித உரிமை ஆணையாளரின் அலுவலக பேச்சாளர் தெரிவித்துள் ளார்.

குறிப்பிட்ட விசாரணைக்குழு தொடர்பான ஏனைய கட்டமைப்புகளை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் ஜூலை மாதத்திற்கு முன்னர் இக்குழுவினர் செயற்பட ஆரம்பிப்பர் எனவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளின் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் இணைந்து செயற்பட உள்ள இரு சர்வதேச பிரபலம் வாய்ந்த நிபுணர்கள் யார் என்பது குறித்த விபரங்கள் இன்னமும் முடிவாக வில்லையென்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும், கம்போடிய யுத்தக்குற்ற நீதிமன்ற நீதிபதி டேம் சில்வியா கார்ட்ரைட் இவர்களில் ஒருவர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் இவர்களுடன் இணைந்து சட்டவிரோத படுகொலைகள், சித்திர வதைகள் மற்றும் காணாமல் போகச்செய்தல் ஆகியவற்றுக்கான விசேட அறிக்கையாளர்களும் செயற்படுவர்.

இதேவேளை, இந்தக் குழுவினருக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை என இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக தமக்கு அறிவிக்க வில்லை என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விசாரணைக் குழுவின் புதிய நியமனங்கள் குறித்த இலங்கை அரசின் பதில் இன்று ஆரம்பமாகவுள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஐ.நாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

தென்சூடானின் இராணுவத்தினர் 2012இல் இழைத்த மனித உரிமை மீறல்கள் குறித்த அறிக்கைக்காக அந்த நாடு சன்ரா பெய்டஸை வெளியேற்றியுள்ளதைத் தொடர்ந்து இலங்கையும் அவரது நியமனத்திற்கு ஆட்சேபம் தெரிவிக்கத் தொடங்கியுள்ளது எனவும் தெரியவருகிறது. (ந-சி)

### 21 தமிழர்கள்

களை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வின்போதே தேவராஜா தயாளினி என்பவர் மேற்கண்டவாறு தனது சாட்சியத்தைப் பதிவு செய்தார்.

"1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நாங்கள் எல்லோரும் வீட்டில் இருந்தோம். இரவு 12 மணியளவில் வந்த முஸ்லிம்கள், கூட்டம் ஒன்று இருக்கின்றது என்று கூறி எனது அப்பா, அம்மா, அக்கா ஆகியோரை அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு எமது ஊரிலிருந்த பலரும் அழைத்துச் செல்லப்பட்டனர். மறு நாள் காலையில் புதுக்குடியிருப்பு கடற்கரையில் எனது அப்பாவும், அம்மாவும் வெட்டிக் கொல்லப்பட்ட நிலையிலும், அக்கா சுட்டுக் கொல்லப்பட்ட நிலையிலும் சடலமாகக் காணப்பட்டனர். அவ்வாறு 21 பேரது சடலங்கள் இருந்தன.

சடலங்களைப் பார்த்து அடையாளப்படுத்த சென்ற எனது அண்ணாவையும் சுட்டுக்கொன்றனர். இந்தப் படுகொலைகள் முஸ்லிம் மக்களாலேயே மேற்கொள்ளப்பட்டது" என்று கண்ணீர்மல்க அவர் சாட்சியமளித்தார்.

நேற்று முன்தினம் சாட்சியமளித்த 11 பேர் தமது பிள்ளைகள் மேசன் வேலைக்காக முஸ்லிம் பிரதேசமான காத்தான் குடிக்குச் சென்ற பின்னர் காணாமற்போயினர் என்று தெரிவித்தனர். அத்துடன் அவ்வாறு சாட்சியமளித்தவர்களில் இருவர் முஸ்லிம்களாலேயே தமது பிள்ளைகள் கடத்திச் செல்லப்பட்டனர் என்று உறுதிபடத் தெரிவித்திருந்தனர். 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமிழ் - முஸ்லிம்களிடையே பிரச்சினை இருந்தது என்றும் குறிப்பிட்டனர்.

அதேபோன்று நேற்றுச் சாட்சியமளித்த 6 பேர் முஸ்லிம் மக்களால் தமது உறவுகள் கடத்திச் செல்லப்பட்டனர் என்று கூறியுள்ளனர். அவர்களில் இருவர் மேசன் வேலைக்குச் சென்றசமயம் காணாமற்போயினர் என்றும், அவர்களின் உடைகள் மட்டும் முஸ்லிம் பகுதியிலிருந்து மீட்கப்பட்டன. ஆனால் சடலத்தை இதுவரையில் காணவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

அதேபோன்று ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றசமயம் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டு, ஒல்லிக்குளத்தில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பிலும் ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியம் நேற்று முன்வைக்கப்பட்டது. (ந-5)

### இயக்கங்களுக்கு

ஆண்டு ஒகஸ்ட் மாதம் தனது வீட்டில் நின்று கொண்டிருந்த மகனை இருவர் வந்து அழைத்ததாகவும், அவர்கள் இருவரும் மகனது பெயரைக் குறிப்பிட்டு அழைக்க அவனும் போய்ட்டு வாறன் என்று சொல்லிப் போட்டு சென்றவன்.

'நானும் நண்பர்களுடன்தான் செல்கின்றான் என்று கருதியே பேசாமல் விட்டுவிட்டேன். பின்னர் இரவாகியும் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து இராணுவத்தினரும் இணைந்து ரெலோ இயக்கத்தினரே எனது மகனைக் கடத்தியதாக அறிந்து அவர்களது முகாமில் சென்று விசாரித்தேன்.

அவர்கள் தாங்கள் பிடிக்கவில்லை என்று மறுத்ததுடன் என்னை அடித்தனர். அவர்களின் அச்சுறுத்தலினால் இதன் பின்னர் செய்யப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டில் இனந் தெரியாதோர் என்றே குறிப்பிட்டிருந்தேன். எனது மகன் கடத்திச் செல்லப்பட்டு சில நாள்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதேபோன்று கார்த்திகேசு மோகனாம்பிகை என்ற பெண் சாட்சியமளிக்கையில், தனது அண்ணாவையும், சகோதரியையும் ரெலோ இயக்கத்தினரே கடத்திச் சென்று கொலை செய்தனர் என்று தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமர்வில் ரெலோ இயக்கத்தினர் கடத்திச் சென்று கொலை செய்ததாக ஒரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

### சாட்சிகளை

வியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எமக்கு கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு சாட்சியங்கள் தொடர்பாகவும் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொள்கின்றோம். அந்த விசாரணைகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குருக்கள்மடம் படுகொலை தொடர்பிலும் விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். பொதுமக்களின் சாட்சிகளை மாத்திரம் அடிப்படையாக வைத்துக் கொண்டு நாம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்துவிட முடியாது.


குருக்கள்மடத்தில் புதைக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இடத்தில் உடனடியாக சடலங்களைத் தோண்டி எடுக்க முடியாது. எதையும் சட்ட வரைமுறைக்கு உட்பட்டே செய்ய முடியும். சட்டரீதியாக நாம் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வோம்."- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ரெலோவுக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் யாரிடம் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று கேட்கப்பட்டபோது,

"சட்டமா அதிபர் திணைக்களத்தினர் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்த பின்னரே அதுதொடர்பில்பதிலளிக்க முடியும்" - என்று அவர் கூறினார்.

(ந-5)

# உஆவது சர்வதேசக் கிரிக்கெட் சபையை உருவாக்குவோம்



சஞ்சய் பட்டேல்

இந்தியா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இரண்டாவது சர்வதேசக் கிரிக்கெட் சபையை உருவாக்கும் என அதன் செயலாளர் சஞ்சய் பட்டேல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இந்தியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்தே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.
சர்வதேசக் கிரிக்கெட் சபையில் தங்களுக்குரிய முக்கியத்துவம் வழங்கப்படாவிட்டால் இந்த நடவடிக்கைக்கு தாங்கள் செல்ல வேண்டி வரும் எனவும் தங்கள் கிரிக்கெட் சபைக்குச் சர்வதேசக் கிரிக்கெட் சபை வழங்க வேண்டிய மிகுதி பணத் தொகையையும் வழங்காவிட்டால் தாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி யோசிக்கவேண்டிவரும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.
ஆஸ்திரேலியா. இங்கிலாந்து சபைகள் ஜூன் மாதம் 27 ஆம் திகதி முதல் புதிய சபையை உருவாக்கச் சம்மதம் தெரிவித்துள்ளன. அதன்படி ஸ்ரீநிவாசனின் தலைமையில் அந்த மாற்றம் நடக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஸ்ரீநிவாசன் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தலைவராக பதவியேற்பதை யாரும் தடுக்க முடியாது எனத் தெரிவித்த அவர் உயர் நீதிமன்றம் அவர் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தலைவராக பதவியேற்பதற்கு தடை விதிக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.
அனைத்து கிரிக்கெட் சபைகளுடனும் தானும் ஸ்ரீனிவாசனும் பேச்சுக்களை நடத்தி இருப்பதாகவும், தங்கள் மாற்றத்துக்கு அனைவரும் சம்மதம் தெரிவித்து உள்ளதாகவும் அவர் கூறிய அதேவேளை சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருமானத்தில் 68 தொடக்கம் 72 சதவீதம் இந்திய கிரிக்கெட் சபை மூலம் கிடைக்கின்றது. எனவே எமக்கான முக்கியத்துவம் வழங்கப்படுவது கட்டாயம் எனவும் அவர் கூறியுள்ளார். (து)




ஹசின் ஜஹான் மொகமட் ஷமி.

# மொடல் அழகி ஹசினை மணந்த மொகமட் ஷமி

கொல்கத்தாவைச் சேர்ந்த மொடல் அழகி ஹசின் ஜஹான் என்பவரை கரம் பிடித்தார் இந்திய வேகப்பந்து வீச்சாளரான மொகமட் ஷமி.
ஐ.பி.எல் போட்டிகளில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஹசின் ஜஹானை சந்தித்த மொகமட் ஷமி அவரை திருமணம் செய்து கொண்டார்.
எளிமையாக நடைபெற்ற இந்த திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்தனர். ஆனால் இந்திய வீரர்கள் யாரும் வரவில்லை.
இது பற்றி ஷமியின் தந்தை கூறுகையில், சக இந்திய வீரர்களை நாங்கள் அழைக்கவில்லை. காரணம் அவர்களது நிலைமை பற்றி தெரியவில்லை.
எனினும் கொல்கத்தா அல்லது டில்லியில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. அதில் இந்திய வீரர்கள் நிச்சயம் கலந்து கொள்வார்கள் என்று கூறியுள்ளார். (து)

# உலகக் கிண்ண யானை



கடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் அணிகளின் வெற்றி தோல்வியை கணிக்கும் ஒக்டோபஸ் இறந்து விட்ட நிலையில், புது உயிரினம் வந்து விட்டது.
கடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் போது 'போல்' என்று பெயரிடப்பட்ட ஒக்டோபஸ், அணிகளின் வெற்றியைச் சரியாகக் கணித்தது.
தண்ணீர் தொட்டிக்குள், விளையாட்டு போட்டியில் பங்கேற்கும் நாடுகளின் கொடிகளை வைத்து ஒக்டோபஸ் அதில் எந்த கொடியை தொடுகிறதோ அந்த கொடியையுடைய நாடுதான் வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டது. இந்நிலையில் போட்டித்தொடர் முடிந்த சில நாள்களிலேயே ஒக்டோபஸ் உயிரிழந்தது. இந்த முறை ஒக்டோபஸ் இல்லாததால் யார் கணிப்பார்கள் என்ற கவலையில் ரசிகர்கள் இருந்தனர்.
ரசிகர்கள் கவலையை போக்க குரங்கு, முள்ளம்பன்றி, இறால் ஆகிய உயிரினங்களைச் சில உள்ளூர் போட்டிகளில் களமிறக்கிச் சோதித்துப் பார்த்தனர். ஆனால் அவற்றின் கணிப்புத் தவறாகிவிட்டது. ஒக்டோபஸ் அளவுக்கு யார் சரியாகக் கணிப்பார் என்ற ஆர்வத்தில் ரசிகர்கள் உள்ளனர். இந்நிலையில் விளையாட்டு ஆர்வலர்களின் மனக் குறையை நீக்க ஜேர்மனியில் உள்ள 'நெல்லி' என்ற பெயர் கொண்ட யானை இந்த களத்தில் இறங்கியுள்ளது. பல்வேறு உதைபந்தாட்டப் போட்டிகளைச் சரியாக கணித்ததால் நெல்லி மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

# உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி அட்டவணை

| | நாடு | இலங்கை நேரம் | நாடு |
|---|---|---|---|
| குழு - C | ஜப்பான் | 01:30 | கொலம்பியா |
| குழு - C | கிரீஸ் | 01:30 | கோட்டி டிவோறே |
| புதன்கிழமை.ஜூன் 25 | | | |
| குழு - F | நைஜீரியா | 21:30 | ஆர்ஜென்ரீனா |
| குழு - F | பொஸ்னியா ஹெர்செகோவியா | 21:30 | ஈரான் |
| குழு - E | ஹொண்டூறஸ் | 01:30 | சுவிற்ஸர்லாந்து |
| குழு - E | ஈக்குவடோர் | 01:30 | பிரான்ஸ் |
| வியாழக்கிழமை,ஜூன் 26 | | | |
| குழு - G | போர்த்துக்கல் | 21:30 | கானா |
| குழு - G | அமெரிக்கா | 21:30 | ஜேர்மனி |
| குழு - H | கொரியக் குடியரசு | 01:30 | பெல்ஜியம் |
| குழு - H | அல்ஜீரியா | 01:30 | ரஷ்யா |

# இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டமை மகிழ்ச்சியே

இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டது தனக்கு உண்மையில் நிம்மதியை அளிக்கிறது என்று கெவின் பீற்றர்சன் கூறியுள்ளார்.
பிரபல பத்திரிகை ஒன்றில் அவர் கூறியிருப்பதாவது:-
நான் இல்லாமல் இங்கிலாந்து அணி எதிர்வரும் வியாழக்கிழமை டெஸ்ட் போட்டியில் களமிறங்குவது குறித்து எனக்கு கோபமோ, வருத்தமோ, எதிர்மறை எண்ணங்களோ எதுவும் இல்லை. நான் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு சுழற்பந்து வீச்சாளராக, என் வாழ்க்கை எங்கு செல்லும் என்று தெரியாமல் தொடங்கினேன்.
இதை தொடர்ந்து, இங்கிலாந்துக்குச் செல்லலாம் என்று எண்ணினேன். ஆனாலும் எனது முயற்சியில் நான் வெற்றி அடைவேனா என்பது சந்தேகமாகவே இருந்தது.
இப்போது நான் 104 போட்டிகளில் ஆடியுள்ளேன், உலகின் அனைத்து மைதானங்களிலும் ஆடியது என் அதிர்ஷ்டம் என்றுதான் கூறவேண்டும்.
இனிமேல் டெஸ்ட் கிரிக்கெட் ஆடுவேனா என்றால் நிச்சயம் ஆடுவேன். ஆனால் தற்போது இங்கிலாந்து அணி இறங்கும்போது நான் இல்லையே என்று நினைத்தால் பொறாமையும் எதிர்மறை எண்ணங்களுமே தலைதூக்கும். ஆனால், இங்கிலாந்து அணி என்னை நீக்கியதிலிருந்து என் மனம் வெகுதூரம் கடந்து வந்து விட்டது.
நான் இதுவரை 13,500 ஓட்டங்கள் அடித்திருக்கிறேன், இதற்கு மேல் ஆசைப்படுவது பேராசையே. ஆகவே நான் எனக்கு கொடுக்கப்பட்டதுடன் ஒத்துப்போக விரும்புகிறேன்.
மேலும், ஆஸ்திரேலியாவில் இங்கிலாந்து வீரர்கள் அறை மகிழ்ச்சியாக இல்லை.
இதை நான் மட்டும் கூறவில்லை ஆஷஸ் தோல்விக்குப் பிறகு மனம் திறந்து இதையே அணியின் சில நண்பர்களும் தெரிவித்தனர்.
அதன் பிறகு அன்டி பிளவர் நான் அணியில் இருப்பதை விரும்பவில்லை என்பதை அறிந்து கொண்டேன்.
தொடரை 5-0 என்று இழந்த அன்று இரவு நாங்கள் அனைவரும் மது அருந்தினோம். ஆகவே வீரர்களிடையே எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆஷஸ் தொடரில் எனது துடுப்பாட்டத்தை பற்றிக் கூறவேண்டுமெனில் நான் என் பாணியில் ஆடுவேன், இனியும் அப்படித்தான் ஆடுவேன்.



கெவின் பீற்றர்சன்

மும்பையில் 2012ஆம் ஆண்டு 186 ஓட்டங்கள் எடுத்தபோது அயல்நாட்டு வீரர் ஒருவரின் சிறந்த இன்னிங்ஸ் என்று கூறப்பட்டது. நான் இன்னும் கொஞ்சம் தடுத்தாடி எனது கிரிக்கெட் வாழ்க்கையை நீட்டியிருக்கலாம். என்னை அது இன்னும் சிறந்த வீரராக மாற்றியிருக்குமோ? இல்லை [illegible] மேலும், நான் துணிச்சலான முடிவெடுக்கும் ஒரு துடுப்பாட்டக்காரன் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் [illegible] துணிச்சலான முடிவுகள் எடுப்பது எனக்கும் பிடிக்கும் என்று தெரிவித்துள்ளார்.



மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் விளையாட்டுக்கழகம் 04ஆவது வருடமாக நடத்தும் மன்னார் பிறிமியர் லீக் கடின பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் இதனை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். (த-56)

# யாழ்.மாவட்ட ஆண், பெண் அணிகள் வடமாகாணக் கரப்பந்திலும் அசத்தல்

வலி. வடக்கு, ஜீன் 10

வடக்கு மாகாண விளையாட் டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட ஆண், பெண் அணிகள் மீண்டும் சம்பியனாகின.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண் களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் பலம் வாய்ந்த அணிகளாகக் காணப்பட்ட போதிலும் யாழ்.மாவட்ட அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை யாழ் மாவட்ட அணி 25:20, 25:21, 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்றது.

ஆட்ட நிறைவில் யாழ் மாவட்ட அணி 3 : 0 என்ற சுற்றுக்கள் கணக்கில் கிளிநொச்சி மாவட்ட அணியை வென்று தேசிய மட்டப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

இதேவேளை, பெண்களுக் கான கரப்பந்தாட்டப் போட்டியிலும் யாழ். மாவட்ட அணி சம்பியனாகியது.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில யாழ்.மாவட்ட அணியும் முல்லைத் தீவு மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

ஓர் அணி மற்றைய அணிக்கு சளைத்தல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டமை பார்வையாளர்களை மகிழ்ச்சிப்படுத்தியது.

ஐந்து சுற்றுக்களைக்கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களையும் யாழ். மாவட்ட அணி 25:11, 25:15 புள்ளிகள் என்ற அடிப் படையில் வென்றது. முல்லைத்தீவு மாவட்ட அணி மூன்றாம்,நான்காம் சுற்றுக்களை முறையே 25:22, 25:23 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று யார் வெற்றியாளர் என்பதில் இறுதி வரை காத்திருக்க வேண் டிய நிலைமையை ஏற்படுத்தியது.

இறுதிச்சுற்றில் எந்த அணி வெற்றி பெறும் என்று தெரியாத அளவுக்கு இரு அணி களும் கடும் பிரயத்தனம் எடுத்த போதிலும் யாழ். மாவட்ட அணி 15:13 புள்ளிகள் என்ற அடிப் படையில் வெற்றி பெற்று மாகாண சம்பியனாகி தேசிய மட்டப் போட்டியிலும் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86-23)

# 40 வயதுக்கு மேற்பட்டோர் மோதும் உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, ஜீன் 10

உலக உதைபந்தாட்டப் போட்டியையொட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் 40 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

இந்தப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் விளையாட்டுக் கழகம்,மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம், மானிப் பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம், அராலி விளையாட்டுக் கழகம் ஆகியன மோதவுள்ளன. (த-86)

# மாகாண வலைப்பந்தாட்டம் ; யாழ்.மாவட்ட அணி சம்பியன்

வலி. வடக்கு, ஜீன் 10

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப் பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி இந்த ஆண் டும் சம்பியனாகியது.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதிக் கொண் டன.

நான்கு கால் பாதி ஆட்டங் களைக் கொண்ட இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட அணி முறையே 16:01, 17:02, 12:03, 15:02 என்ற புள்ளி



கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அணி 60:08 புள்ளிகள் என்ற அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட அணியை வென்று தேசிய மட்டப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள் ளது. (த-86)

## மரண அறிவித்தல்

### கந்தையா ஏரம்புநாதன்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும், அறுகம்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஏரம்புநாதன் நேற்று (09.06.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், சரஸ்வதி தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கருணாகரன், கமலாதேவி மற்றும் பதுமைநிதி, முத்துலட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சடாட்சரம்-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், கார்த்தியாயினி (பிரதேச சபை, ஊர்காவற்றுறை), கலைவாணி, முருகதாஸ், கலையரசி, அரவிந்தன் ஆகியோரின் தந்தையும், லோகேஸ்வரன், கிருஸ்ணராஜா ஆகியோரின் மாமனும், புவிந்தன், தனுஷன், பவித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (10.06.2014) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்றுப்பூதவுடல் பலகாடு நீலகிரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

அறுகம்புலம், காரைநகர். (48885) (10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா சாந்தலிங்கம்



வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆறுகால் மடம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சாந்தலிங்கம் நேற்று(09.06.2014) திங் கட்கிழமை காலை 7.30 மணிய ளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராச லட்சுமி (ஜேர்மனி) மற்றும் புனிதவதி (கனடா), சண்முகலிங்கம் (கனடா), மீனாம்பிகை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான அருட்சிவம், ஏரம்பபிள்ளை மற்றும் ஞானேஸ்வரி (கனடா), கணேச லிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம். சண்முகலிங்கம் குடும்பத்தினர். (48886) அருள் - 0777555602

www.sansu.lk
HOTEL SANSU Opposite Lanka Hospitals
Stay in Colombo 5.
(For Business / Leisure)

Rooms at Rs. 3500/= Upwards
Comfortable A/C Rooms with all modern facilities, Restaurant with Maldivian Cuisine, Airport Pick up / Drop, Free WIFI, Tour Packages
651/31,Elvitigala Mawatha, Narahenpita, Colombo 05.
Tel: +94-112500273, 071- 4339761,
E-mail:hotelsansu@gmail.com
Tourist Board Approved Grade A

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறி துதிக்கிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் என்றென்றும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன். ஆமென்.

- அடியாள்

(உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் தொடர்ந்து மூன்று நாள்கள் தேவையைக் கூறாமல் இச்செபத்தை செபித்து வந்தால் தேவை நிறைவேறும். இச்செபத்தை பிரசுரிப்பதாக வாக்களிக்கவும்) (48838)(7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மினிதேவி சிவப்பிரகாசம்

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மினிதேவி சிவப்பிரகாசம் நேற்று 09.06.2014 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், திரு. அரியகுட்டி சிவப்பிரகாசத்தின் (ஓய்வுபெற்ற லிகிதர், யாழ். மாநகரசபை) அன்பு மனைவியும், ஜெயக்குமார் (பொறியியலாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்), ஜெயந்தினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும், யோகநாதன் (ஆஸ்திரேலியா), சியாமளா ஆகியோரின் அன்பு மாமியும், வினோத்தின் அன்பு பேர்த்தியும், பகீரதிதேவி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராசா, ஞானாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2014) செவ்வாய்க் கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சுதுமலை தெற்கு, மானிப்பாய். 077 101 4736 (48881) (10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை பாலசிங்கம்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பாலசிங்கம் நேற்று (09.06.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சரஸ்வதி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சுப்பையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் லலிதா, சியாமளா (ஜேர்மனி), காலஞ்சென்ற கௌசி, சுரேஷ்குமார், கௌரி (ஜேர்மனி), அருண் ஆகி யோரின் தந்தையும் நிர்மலா, சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), அபிராமி, பார்திபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான அருமைநாயகம் மதியாபரணம் மற்றும் பஞ்சரத்தினம் காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் கணேஸ், ஈஸ்வரி, முத்துராஜா, நவரத்தின ராசா தையல்நாயகி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.06.2014) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

54, கேசவப்பிள்ளையார் வீதி, வண்ணார்பண்ணை. (48889) குடும்பத்தினர்.

# 19 வயது உதைபந்தாட்டத்தில் சம்பியனானது மானிப்பாய் இந்து

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடமாகாண பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த சனிக்கிழமை வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.




வெற்றி பெற்ற அணியினர்

வெற்றி தோல்வியைக் காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை அணியை எதிர்த்து இலுப்பைக்கடவை றோ.க.த பாடசாலை அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை அணி 10:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

(த-23-86-108-433-422)

## நான்காம் கட்டப் போட்டிகள் இன்று முதல் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 4 ஆம் கட்டப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டத்தில் ஆரம்பமாகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான உடற்பயிற்சிப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான ஹொக்கிப் போட்டி நாளையும் நாளை மறுதினமும் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

15 வயது,19வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கப் போட்டி எதிர்வரும் 14ஆம், 15ஆம், 16ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

15 வயது,19வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

19வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி,வேம்படி மகளிர் உயர்தர பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டத் திடல்களில் இடம் பெறவுள்ளன.

17வயது,19வயது, பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பளுதூக்கும் போட்டி எதிர்வரும் 13ஆம்,14ஆம் திகதிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

15 வயது,19வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டி எதிர்வரும் 16ஆம்,17ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

15 வயது,19வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் முதல் 14 ஆம் திகதி வரை சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.

13வயது,15வயது, 17வயது, 19வயது, 21வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான தடகளப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

(த-23)

## கோல் மழை பொழிந்தது வல்லை

கரணவாய், ஜூன் 10

வல்லை அணி வீரர்கள் மாறி மாறி கோல் மழை பொழிய 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் வல்லை விளையாட்டுக்கழக 'ஏ' அணி செஞ்சுடர் அணியை வீழ்த்தியது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வல்லை 'ஏ' அணியும், கரவை செஞ்சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் வல்லை அணியைச் சேர்ந்த சுதாகரன் 2 கோல்களையும், நிரஞ்சன், சுரேன், ரவிகரன் ஆகியோர் தலா ஒரு கோலையும் போட 5:0 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில்



கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதின.

இதில் ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஆனந்தவேல்,2 கோல்களையும் ஆனந்தகுமார் ஒரு கோலையும் போட நவஜீவன்ஸ் அணியின் திலக்ஷன் மட்டும் ஒரு கோலைப் போட்டார்.

இறுதியில் 3:1 என்ற கோல் அடிப்படையில் வென்றது கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் அணி.

(த-108)

## நடுவர்களுக்கான கலந்துரையாடல்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட நடுவர் சங்கத்தினருக்கு இடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் என்.நவநீதமணி தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் வடமராட்சிப் பகுதியில் இடம்பெறுகின்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் ஏற்படும் குழப்பங்கள் தொடர்பாக போட்டிகளில் கடமையாற்றும் நடுவர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளது.

இதில் பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடவுள்ளதால் உதைபந்தாட்ட நடுவர் சங்கத்தினர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை லீக்கின் செயலாளர் ந.அருளானந்தசோதி தெரிவித்துள்ளார்.

(த-108)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளையாட்டுக்கழகம் சிவகுருநாதன் ஞபாகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வல்லை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இமையா ணன் மத்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கருணகரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுடரொளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பி.ப. 4.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டக்கழக ஏ அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது.

ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை கூடைப்பந்தாட்ட திடலில் மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் 15வயதுப் பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் 13 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

## திலக்ஷன் கலக்கல் ஆட்டம் இமையாணன் மத்தி வெற்றி

திலக்ஷனின் கலக்கலான ஆட்டம் கைகொடுக்க 5:1 என்ற கோல் அடிப்படையில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம்.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும், கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் சற்று எதிர்ப்புக்காட்டிய ரேஞ்சர்ஸ் அணி நேரம் செல்லச் செல்ல சோர்வடையத் தொடங்கினர்.

இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி வீரர் திலக்ஷன் ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் அருமையான கோல் ஒன்றைப் போட்டார். அதன்பின் அந்த அணியைச் சேர்ந்த செந்தீஸ்வரனும் ஒரு கோலைப் போட 2:0 என்ற அடிப்படையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி மூன்று நிமிடங்களில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணிக்குத் தண்டனை உதை ஒன்று கிடைத்தது. அதனை அந்த அணி வீரர் திலக்ஷன் நேர்த்தியாகக் கோலாக்க 3:0 என முன்னிலை பெற்றது.

இருந்தபோதும் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் அணியினர் புதுவேகத்துடன் விளையாடி சதீஸின் உதவியுடன் ஒரு கோலைப் போட அந்த அணி வீரர்கள் உற்சாகம் அடைந்தனர்.

ஆனாலும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக வீரர்களான திலக்ஷன் மற்றும் இந்துகான் ஆகியோர் மேலும் தலா ஒரு கோலைப் போட 5:1 என்ற அடிப்படையில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (த-108)



## சாதனை படைத்தார் நடால்

பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான இறுதிப் போட்டியில், களிமண் தரையின் அரசன் என வர்ணிக்கப்படும் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் வெற்றியைப் பெற்று சம்பியன் ஆகியுள்ள அதேவேளை புதிய சாதனை யையும் படைத்துள்ளார்.

சேர்பிய வீரர் நொவாக் ஜோக்கோவிக் உடன் மோதி, முதல் செற்றில் 3:6 என தோல்வியடைந்தார். இருப்பினும் அடுத்த மூன்று செற்களிலும் 7:5, 6:2, 6:4 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார். இந்த இறுதிப் போட்டி வெற்றி மூலமாக தொடர்ச்சியாக ஐந்தாவது தடவை பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் தொடரினை வெற்றி பெற்றவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

4 தடவைகள் வெற்றி பெற்றமையே சாதனையாக இருந்தது. அத்துடன் ரபேல் நடால் பிரெஞ்சு பகிரங்க ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை 9 தடவைகள் வென்று கூடுதலான தடவை கள் வென்றவர் சாதனையையும் தன்ன கத்தே கொண்டுள்ளார். இறுதியாக விளையாடிய 10 தடவைகளில் 9 தடவைகள் அவர் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## காத்திருக்கும் ஜோன்சன்

ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜோன்சன் தான் கொண்டுள்ள லட்சியங்களை நிறைவேற்றக் கடுமையாகப் பயிற்சி செய்து வருகிறார்.

இந்த லட்சியங்களுக்காகத் தனது குரு டெனிஸ் லில்லியின் அறிவுரையு டன் பயிற்சி பெற்று வருகிறார்.


அந்த லட்சியம் என்னவென்றால் சொந்த மண்ணில் நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகளில் ஒரு கலக்கு கலக்குவது மற்றும் ஆஸ்திரேலியாவில் மிரட்டி எடுத்த ஆஷஸ் தொடரை இங்கிலாந்தில் வெல்வது.

டெனிஸ் லில்லிதான் மிட்செல் ஜோன்சனை உருவாக்கியவர். மேலும் அவர் ஜோன்சனை ஒரு தலைமுறையில் ஒருமுறை கிடைக்கும் பந்து வீச்சாளர் என்று பாராட்டியுள்ளார்.

பந்து வீச்சில் மாற்றங்கள் மூலம் ஜோன்சனைச் செதுக்கியவர் டெனிஸ். அதன் பிறகே ஆஷஸ் தொடர் மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக மொத்தம் 59 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தினார் ஜோன்சன்.

மேலும் 2011ஆம் ஆண்டு கால் காயத்தினால் தன்னம்பிக்கை இழந்து காணப்பட்ட மிட்செல் ஜோன்சன் வேகப்புயலாக மறுபிறவி எடுக்கக் காரணமானவர் டெனிஸ் லில்லி.

இப்போதும் பந்து வீச்சில் பிரச்சினை என்றாலோ அல்லது டெஸ்ட் போட்டியில் சில சூழ்நிலைகளில் எப்படி பந்து வீசுவது என்பது பற்றியோ டெனிஸ் லில்லியிடம் தான் அவர் ஆலோசனை கேட்டு வருகிறார். (த)



## விசாரணைக் குழுவில் கங்குலி

ஐ.பி.எல். சூதாட்ட விவகாரம் குறித்த விசாரணைக் குழுவில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கங்குலி இணைந்துள்ளார்.

6ஆவது ஐ.பி.எல். சூதாட்ட விவகாரம் காரணமாக உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட முன்னாள் நீதிபதி முகுல் முட்கல் தலைமையிலான குழுவின் விசாரணை அறிக்கையில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் என்.ஸ்ரீனிவாசன் மற்றும் 12 பேர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

மேலும் முழுமையாக விசாரணை நடத்தி 4 மாதத்துக்குள் இறுதி அறிக் கையை சமர்ப்பிக்கவேண்டும் என் றும் அந்த குழுவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற முகுல் முட்கல் தலைமையிலான விசாரணைக் குழுக் கூட்டத்தில், கங்குலியும் இந்த விசாரணைக் குழுவில் சேர்க்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இது குறித்து முகுல் முட்கல் கூறு கையில், ஐ.பி.எல். சூதாட்டம் குறித்த விசாரணைக் குழுவில் எங்களுடன் இணைந்து செயல்படும்படி கங்கு லிக்கு அழைப்பு விடுத்து இருக்கி றோம்.

நான் கங்குலியியை தொடர்பு கொண்டு பேசியபோது எங்களுடன் சேர்ந்து செயல்படச் சம்மதம் தெரி வித்தார். நாங்கள் அடுத்துச் சந்தித்து பேசும் நாள் எது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. அடுத்த கூட்டம் குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்று கூறியுள் ளார். (த)



## பொறுத்திருக்கவேண்டும் கம்பீர்

இங்கிலாந்து தொடரில் தெரிவு செய்யப்பட்ட கம்பீர், அந்த 11 பேர் கொண்ட வீரர்களில் இடம் பெறக் காத்திருக்க வேண்டும் என கங்குலி கூறியுள்ளார். கவுதம் கம்பீர் கடைசியாக 2012ஆம் ஆண்டு டிசெம்பரில் இந்தியாவுக்காக டெஸ்ட் போட்டியில் விளையாடினார். அதன் பிறகு வாய்ப்புகள் அமையவில்லை. தற்போது ஐ.பி.எல். போட்டிகள் மூலம் தன்னை நிரூபித்த கம்பீரின் மீது இந்திய அணியின் பார்வை திரும்பியது. இதன் மூலம் இங்கிலாந்துக் கெதிரான இந்திய அணியில் கம்பீருக்கு இடம் கிடைத்தது.

இது பற்றி முன்னாள் இந்திய அணியின் தலைவர் கங்குலி கூறுகையில், ஷிகர் தவான், முரளி விஜய் நன்றாக விளையாடி வருகின்றனர். ஆனால் 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் தட்பவெப்பமும், ஆடுகளமும் சில தடுமாற்றங்களைக் காட்டும். எனவே கம்பீருக்கு வாய்ப்பு வரும்.

ஷேவாக் ஐ.பி.எல் போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுக்கவில்லை. எனவே 3ஆவது தொடக்க வீரர் தெரிவுக்கு மீண்டும் அணித் தேர்வுக்குழு கம்பீரிடம் சென்றுள்ளது. இதில் தவறேதும் இல்லை என்று கூறியுள்ளார். (த)

புதிய முறையிலான
தேசிய ஆங்கில டிப்ளோமா
ஷாம்சனின் 20 புத்தகங்கள் கொண்ட இப் பயிற்சியில் இப்போது வயது வேறுபாடின்றி அனைவரும் இணையமுடியும்
வீட்டிலிருந்தபடியே ஒவ்வொரு புத்தகத்திலுமுள்ள 250 பயிற்சிகளைசெய்து எம்மிடம் ஒப்படைத்தால் போதுமானது.
பயிற்சிநெறி முடிவில் அனைவராலும் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும் என்பதை எமது 20 வருட மொழிஆராய்ச்சியின் மூலம் உறுதிசெய்துள்ளோம்.
பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், வீட்டுப்பெண்கள் ஆங்கிலம் பேசவிரும்புவோர், வெளிநாடு செல்வோருக்கானது
11.06.2014 இற்குமுன் பயிற்சியில் இணைவோருக்கு பயிற்சி கட்டணம் ரூபா 3000.00 மட்டுமே!
பயிற்சிநெறி முடிவில் "Diploma in English" Certificate வழங்கப்படும்.
(இலங்கை பூராகவுமுள்ள எவரும் இணையமுடியும்)
இலவசம் 20 புத்தகங்கள்
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 33 13 077 621 4567

கட்டடம் வாடகைக்கு
திருநெல்வேலியில் தற்போது கொமர்ஷல் வங்கி (Commercial Bank) இருக்கும் கட்டடம் உடன் நீண்டகால வாடகைக்குண்டு. 2200 sq.ft அளவை கொண்டது. வங்கி மற்றும் அலுவலகங்களுக்கு உகந்தது.
(48744) (12.3.6)
TP: 077 369 0333
U.K: 0044 7737 170 584

A/L 2014
பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான
விசேட கருத்தரங்கு
தமிழ்
வளவாளர்கள் - பத்மராஜா MED, M Phil
T.S. குகன். B.A
காலம் - 12.06.2014 வியாழக்கிழமை
(9.00-2.00 மணி வரை)
புதிய உயர் கல்லூரி
இடம்- ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

021 567 1111
advt@uthayan.com

கருத்தரங்கு
தேசியகல்வியியல் கல்லூரியின்
ஆங்கில ஆசிரிய பாடநெறி
தெரிவுப்பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு
ஆரம்பம்
புதன் (11/6) காலை 9.00 மணி
11ஆம், 12ஆம் திகதிகளில்
காலை: 9.00 - 2.00 மணிவரை
T.P: 077 703 3109
யாழ்ப்பாண கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி
(கொமர்ஷல் வங்கி அருகில்)

பணியாள்கள் தேவை
தொலைத்தொடர்பு நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பெண் பணியாளர்கள் தேவை. கணினி ரைப் செற்றிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
நேரில் வரவும்.
செல்வா ரெலிகொமினிகேஷன்
124, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 077 286 0122
(48870) (7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.